# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 28

விலை - 30ரூபா

சுடர் 34 கதிர் 320 புரட்டாதி 28ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 15 ஒக்ரோபர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050


### எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில்

# ஒன்றுபட்டு செயற்படுவதற்கு 5 தமிழ் கட்சிகள் இணக்கம்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர்15

அரச தலைவர் தேர்தலில் தமிழர் தரப்பின் நிலைப்பாட்டை தமிழ் அரசியல் கட்சிகளும் கூட்டாக இணைந்து முன்வைப்பதற்கான பொது இணக்கப்பாடு நேற்று எட்டப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தில் 5 கட்சிகள் கையெழுத்திட்டன. இந்தச் சந்திப்புக்களில் கலந்து கொண்டிருந்தபோதும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒப்பந்தத்தில் கையொப்பமிடவில்லை. 23

## தற்காலிக அ. அட்டை 18 முதல்

கொழும்பு, ஒக்.12

அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு எதிர்வரும் அரச தலைவர் தேர்தலுக்காகத் தற்காலிக அடையாள அட்டைகளை வழங்க தேர்தல்கள் செயலகம், மாவட்ட தேர்தல் அலுவலகங்கள் ஊடாக நடவடிக்கை எடுத்துள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி முதல் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் மேலதிக தேர்தல் ஆணையாளர் ரசிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தேசிய அடையாள அட்டை, அங்கீகரிக்கப்பட்ட கடவுச் சீட்டு, வாகன அனுமதிப் பத்தி 23

## கிளைமோர் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக்.15

யாழ்ப்பாணம் கோண்டாவிலில் 15 கிலோ எடையுடைய இரு கிளைமோர் குண்டுகள் நேற்று மீட்கப்பட்டன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

கடந்தவாரம் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினரிடம் பெற்றுக்கொண்ட தகவலுக்கு அமைய இவை மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையின் சேருநுவர பகுதியில் 36 வயதுடைய விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் 23

## கோரிக்கையை ஏற்க மறுத்தனர்

### முன்னணி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக 15

ஒற்றையாட்சி அரசியலை அரசமைப்பு இடைக்கால அறிக்கையை நிராகரிக்க வேண்டும் என்று கோரினோம். ஏனைய 5 கட்சியினரும் அதை எதிர்த்த 06

## தேவையற்றதை வலியுறுத்தினர்

### சுமந்திரன், சுரேஷ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக.15

6 கட்சிகளும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக இரு தினங்கள் முயற்சித்தோம். 5 கட்சிகள் ஆரம்பத்திலேயே இணக்கம் தெரிவித்தனர். ஆறா 07

## ஆவணத்தில் உள்ளவை

யாழ்ப்பாணம், ஒக்.15

அரச தலைவர் தேர்தலில் தமிழர் தரப்பின் நிலைப்பாட்டை தமிழ் அரசியல் கட்சிகளும் கூட்டாக இணைந்து முன்வைப்பதற்கான பொது இணக்கப்பாடு நேற்று எட்டப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தில் 5 கட்சிகள் கையெழுத்திட்டன. அந்த ஆவணத்தில் உள்ளக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு

புதிதாக உருவாக்கப்படும் அரசியலமைப்பு ஒற்றையாட்சி முறைமையை நிராகரித்து தமிழ் தேசத்தை அங்கீகரித்து அதற்கு தனித்துவமான இறைமை உண்டு என்பதையும், தமிழ் மக்கள் பன்னாட்டு சட்டத்தின் கீழ் சுய நிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்பதையும் அங்கீ 07

## தமிழ்க் கட்சிகளோடு பேச்சு நடத்தத் தயார்

### சஜித், கோத்தா தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.15

அரச தலைவர் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் எமக்கு இன்றியமையாதவையாக அமைகின்றன. அவர்களை வழிநடத்தும் தமிழ்க் கட்சிகளுடன் பேசுவதற்கு நாம் எந்த நேரமும் தயாராக இருக்கின்றோம்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவும், சிறிலங்கா பொதுஜன முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவும் தெரிவித்துள்ளனர். 23

## வடக்குக்கு படையெடுக்கும் தென்னிலங்கைக் கட்சிகள்

யாழ்ப்பாணம், ஒக்.15

அரச தலைவர் தேர்தல் நெருங்கியுள்ள நிலையில் தெற்குக் கட்சிகள் தமிழ் மக்களின் வாக்குகளை இலக்கு வைத்து வடக்குக்குப் படையெடுக்க ஆரம்பித்துள்ளன.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி சார்பில் அரச தலைவர் தேர்தலுக்கு களமிறங்கும், கோத்த 23

## புலிகளை உருவாக்க முயற்சி: கிளிநொச்சியில் ஒருவர் கைது!

கொழும்பு, ஒக்.15

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீளுருவாக்க முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டில் கிளிநொச்சியில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த சனிக்கிழமை கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவர் இதே குற்றச்சாட்டில் கந்தளாயில் வைத்துக் கைது செய்யப்படிருந்த நிலையில் நேற்றும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி, சாந்தபுரத்தைச் 23

## மறக்க முடியா எனினும் மன்னிப்பதற்கு முடியும்

### பசில் ராஜபக்ச கூறுகின்றார்

சென்னை, ஒக்.15

கடந்த காலங்களில் என்ன நடந்தது என்பதை தமிழர்களால் மறக்க முடியாது. ஆனால் இரு சமூகத்தினரும் ஒருவருக்கொருவர் மன்னிக்க வேண்டும் இவ்வாறு தெரிவித்துள்ளார் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜ 23

## வாக்குச்சீட்டுக்கள் இன்று வடக்குக்கு

யாழ்ப்பாணம், ஒக். 15

அரச தலைவர் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புக்கான வாக்குச் சீட்டுக்கள் அரச அச்சகத்திலிருந்து வடக்கு மாகாணத்துக்கு இன்று எடுத்து வரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரச தலைவர் தேர்தல் அடுத்த மாதம் 16ஆம் திகதி இடம்பெறவு 06

## பொலிஸின் துப்பாக்கிச் சூட்டில் கிளிநொச்சியில் ஒருவர் காயம்!

கிளிநொச்சி, ஒக்.15

கிளிநொச்சியில் நேற்று அதிகாலை பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் மதுவரித் திணைக்களப் பணியாளர் ஒருவர் காயமடைந்துள்ளார். காயமடைந்தவர் கெப்பிட்டிக்கொலாவ பிரதேசத்தைச் சேர்ந்த மதுவரித் திணைக்களப் பணியாளர் என்று தெரியவருகின்றது.

கிளிநொச்சியில் பெருந்தொகைப் போதைப் பொருள் கடத்தப்படுகின்றது என்று கிளிநொச்சிப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. அதைப்பற்றுக்கிளிநொச்சி 23

## ஞானசாரர், பொலிஸாருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல்

யாழ்ப்பாணம், ஒக். 15

முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலயச் சூழலில் பிக்குவின் உடலை தகனம் செய்ய வேண்டாம் என்று மாவட்ட நீதிமன்றம் கட்டளையிட்டபோதும் பொலிஸாரின் பாதுகாப்புடன் நீதிமன்றக் கட்டளையை மீறி ஆலய தீர்த்தக் குளத்தின் அருகே பிக்குவின் உடல் எரியூட்டப்பட்டபோது, நீதிமன்றின் உத்தரவை நடைமுறைப்படுத்தாத பொலிஸார் மீதும் ஞானசாரர் மீதும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றில் 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சி பலன்கள்!

குரு பகவான் ஒரு ராசியில் இருந்து அடுத்த ராசிக்கு செல்வதற்கு 13 மாதங்கள் அல்லது ஒரு வருடம் ஆகும். இப்படி ஒரு ஆண்டுக்கு ஒருமுறை நிகழக்கூடிய குரு பெயர்ச்சி இந்த வருடம் 29.10.2019 அன்று நிகழ்கிறது. விகாரி வருடம் ஐப்பசி மாதம் 12ஆம் நாள் செவ்வாய்க்கிழமை, வாக்கிய பஞ்சாங்கப்படி, விருச்சிகம் ராசியில் இருந்து தனுசு ராசிக்கு மாறுதலாகிச் செல்கிறார். குரு பகவான் தனுசு ராசியில் 14.11.2020 வரை சஞ்சாரம் செல்கிறார். குரு பார்க்க கோடி நன்மை என்றும், கோடி தோஷம் விலகும் என்றும் நம்பப்படுகிறது. குரு பெயர்ச்சியினால் நன்மைகள் நடக்கும் என்று பொதுவாக நம்பலாம்,



**சகிப்புத்தன்மை அதிகம் கொண்ட இடப ராசி அன்பர்களுக்கு....**

இது நாள் வரையில் உங்களது ராசிக்கு 7ஆம் இடத்தில் சஞ்சாரம் செய்து வந்த குரு பகவான், வாக்கிய பஞ்சாங்கப்படி 28.10.2019ஆம் திகதியும் திருக்கணிதப்படி 5.11.2019 திகதியும் உங்களது ராசிக்கு 8ஆம் இடமான அஷ்டமஸ்தானத்தில் சஞ்சாரம் செய்ய உள்ளார். இதனால் இனி வரும் காலங்களில் நீங்கள் எதிலும் கூடுதல் அக்கறை எடுத்துக் கொள்ளவும். பொறுமையை அதிகம் கையாளவும். இதனால் பொருளாதார அளவில் சில நெருக்கடிகளை நீங்கள் சந்திக்க இடம் உண்டு. முடிந்த வரையில் இனி வரும் காலங்களில் நீங்கள் ஆடம்பர செலவுகளைக் குறைத்துக் கொள்ளப்பாருங்கள். ராகு/கேதுக்கள் தொடர்ந்து சாதகம் இல்லாமல் சஞ்சாரம் செய்வதால் உங்களது குடும்ப வாழ்வில் அதிக சலனங்கள் ஏற்படாமல் பிரச்சினையை பேசித் தீர்த்துக் கொள்ளப் பாருங்கள். குறிப்பாக கணவன் - மனைவி இடையே அதிகம் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டிய காலம்.

உற்றார், உறவினர்களிடம் கூட முடிந்த வரையில் வாக்கு வாதத்தைத் தவிர்க்கப் பாருங்கள். உடல் ஆரோக்கியத்தில் நீங்கள் கூடுதல் கவனத்தை எடுத்துக் கொள்ளுங்கள். மருத்துவர் அறிவுரை இன்றி மருந்துகளை உட்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். அதேபோல, மருந்துகளின் காலாவதி திகதியைப் பார்த்துச் சாப்பிடுங்கள். இருக்கும் தொழிலை கட்டிக் காப்பாற்றப் பாருங்கள்.




பெரிய முயற்சிகளை நன்கு சிந்தித்து செயற்படுத்துங்கள். தொழில் வியாபாரம், செய்பவர்களுக்கு தொழில் ரீதியாக தேக்க நிலை ஏற்படாமல் இருக்க குலதெய்வ வழிபாட்டைத் தொடர்ந்து செய்யுங்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பிறர் வேலையையும் சேர்த்துப் பார்க்க வேண்டிய சூழ்நிலை வரலாம். வேலையை விட நினைப்பது இந்தக் காலத்தில் பெரிய தவறாகிப் போய்விடும்.

உடன் வேலை செய்பவர்களை அனுசரித்துச் செல்லுங்கள். குறிப்பாக அலுவலகத்தில் முக்கிய கோப்புகளைப் பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள். மனதில் பட்டதை எல்லாம் பேசாமல் இருப்பது நல்லது. சிலர் சிறிய செலவு தானே என்று வீட்டைப் பராமரிக்க வேலைகளை ஆரம்பிக்கலாம்... இறுதியில் அது பெரிய செலவாகிப் போய்விடும். அதனால் எதை செய்தாலும் திட்டமிட்டுச் செய்யுங்கள். வேலையை நன்கு தெரிந்தவர்களுக்கு மட்டுமே வாய்ப்புக் கொடுங்கள். எனினும் பெரும்பாலான கிரகங்கள் அந்த அளவிற்கு சாதகமாக இல்லாவிட்டாலும் கூட குரு பார்வை இறுதியில் உங்களை இக்கட்டான சூழலில் இருந்து காக்கும். அதனால் அதிக கவலைகள் வேண்டாம்.

**பெண்கள்:**

உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனத்தை எடுத்துக் கொள்வது நல்லது. சில பெண்களுக்கு வயிறு சம்பந்தமான பிரச்சனைகள் அவ்வப்போது வந்து போகலாம். பெண்கள் சம்மந்தமான இயற்கைப் பிரச்சினைகளால் மருத்துவ செலவுகள் கூட ஏற்படும். திருமண வயதை அடைந்த பெண்களுக்கு திருமண பேச்சுவார்த்தைகள் அதிக அலைச்சலை தந்து பின்னரே வெற்றி அடையும். குடும்ப விஷயங்களை பிறரிடம் பகிர்ந்து கொள்ளாமல் இருப்பது உங்களுக்கு நன்மை தரும். பணவரவுகளில் அதிக ஏற்ற இறக்கங்கள் இருந்து வரும். அதனால் சேமிப்புகளை அதிகரித்து, ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பது நல்லது.

**உடல் ஆரோக்கியம்:**

உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனத்துடன் இருந்து கொள்ளுங்கள். குறிப்பாக கை, கால்கள் மற்றும் மூட்டுகளில் அடிக்கடி வலி வந்து போகலாம். வண்டி வாகனங்களில் செல்லும் சமயத்தில் கூட அதிக கவனத்துடன் சென்று வாருங்கள். சிலருக்கு அஜீரணக் கோளாறுகள் ஏற்பட இடம் உண்டு. உடற்பயிற்சி செய்வதும், உணவு விடயத்தில் கட்டுப்பாட்டுடன் இருப்பதும் உங்களுக்கு நன்மை செய்யும்.

**குடும்பம் மற்றும் பொருளாதார நிலை:**

நீங்கள் பணம் கொடுக்கல் வாங்கலில் கூடுதல் கவனத்துடன் இருந்து கொள்ளுங்கள். குறிப்பாக பெரிய தொகையை கையாளும் சமயத்தில் கூடுதல் கவனத்துடன் இருந்து கொள்ளுங்கள். கேட்ட இடத்தில் இருந்து பணம் வருவதற்கு தாமதம் ஆனாலும் கூட அதனை எல்லாம் நீங்கள் சமாளித்து விடு வீர்கள். அதனால் கவலை வேண்டாம். எதையும் திட்டமிட்டு செய்யுங்கள். சிலருக்கு இந்த குரு பெயர்ச்சியில் புதிய கடன்கள் உருவாக இடம் உண்டு. முடிந்த வரையில் தேவையான பொருள்களை மட்டும் வாங்கிக் கொள்ளவும். பெரும்பாலும் ஆடம்பர செலவுகளைக் குறைத்துக் கொள்ளப்பாருங்கள். அதேபோல, குடும்ப உறுப்பினர்களை அதிகம் அனுசரித்துச் செல்லுங்கள். சொந்த பந்தங்களிடம் எல்லா விடயங்களையும் பகிர வேண்டாம். யோசித்துப் பேசுவது நன்மை தரும்.

**தொழில், வியாபாரம்:**

அதிக இலாபத்தை எதிர்பார்த்து இருக்கும் வாய்ப்புகளை இழக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். குறிப்பாக பண விடயத்தில் கூடுதல் கவனத்துடன் இருந்து கொள்ளுங்கள். அப்போது தான் தேவை இல்லாத வீண் விரயங்களை உடனுக்குடன் நீங்கள் தவிர்க்க இயலும். நம்பியவர்களே ஏமாற்றலாம். எனினும் ஏற்றுமதி இறக்குமதி தொழில் செய்பவர்கள் ஓரளவு நன்மை பெறுவார்கள். இவை தவிர வியாபாரம் அல்லது சொந்தத் தொழில் செய்பவர்களுக்குப் போட்டிகள் அதிகரிக்க இடம் உண்டு. வாடிக்கையாளர்களை தக்க வைத்துக் கொள்ள பெரும் பாடு பட வேண்டி இருக்கும்.

தொழில் ரீதியாக நீங்கள் மேற்கொள்ளும் பயணங்கள் அதிக அலைச்சலையும் சொற்ப வெற்றியையும் தரும் என்பதால் குல தெய்வத்தைப் பூஜித்து புதிய முயற்சிகளைச் செய்யுங்கள். மொத்தத்தில் இது ஒரு சுமாரான, சவாலான கால கட்டம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

**அலுவலர்கள்:**

உயர் அதிகாரிகளின் கெடுபிடிகள் கொஞ்சம் அதிகம் இருக்கத் தான் செய்யும். நீங்கள் எந்த வேலை செய்தாலும் அதில் ஒரு குற்றம் கண்டு பிடிக்கப்படலாம். வேலைப்பளு முன் எப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரிக்கும். அலுவலகத்தில் புதிய பொறுப்புகளால் குடும்பத்துடன் நேரம் செலவழிக்க இயலாமல் போகலாம். அதனால் வேலையைத் திட்டமிட்டுச் செய்யுங்கள். எக்காரணம் கொண்டும் வேலையை விட்டு விடாதீர்கள். இந்தக் குரு பெயர்ச்சியில் நீங்கள் எங்கு சென்றாலும் ஒரே நிலை தான் இருக்கும். இக்கரைக்கு அக்கரை பச்சையாகத் தெரியலாம்!.

**அரசியல்வாதிகள்:**

எதிலும் நிதானத்தைக் கடைபிடியுங்கள். பெரிய தலைவர்களிடம் பேசும் சமயத்தில் கூடுதல் நிதானத்துடன் பேசுங்கள். குறிப்பாக மேடை பேச்சுக்களில் கைத்தட்டலில் மயங்கி எதையும் குதர்க்கமாக பேசி விட்டு பிறகு சிக்கிக் கொள்ளாதீர்கள். கட்சிப் பணிகளுக்கான கைக்காசு போட்டுச் செலவு செய்ய வேண்டி இருக்கும். நேற்று வந்தவர்கள் தலைமைக்கு நெருக்கம் ஆவதைக் கண்டு மனம் வெதும்ப வேண்டாம். கட்சியில் உங்கள் செல்வாக்கு நிலைக்க குரு வழிபாடு செய்யுங்கள். நன்கு படிக்கும் ஏழை மாணவர்களுக்கு படிக்க உதவி செய்யுங்கள். இதனால் நிச்சயம் மேற்கண்ட தீய பலன்கள் குறைந்து குரு அருளைப் பெறுவீர்கள்.

**விவசாயம் செய்பவர்கள்:**

விளைச்சல் சுமாராகத் தான் இருக்கும். இதுவரையில் வாங்கிய விவசாயக் கடன்களால் தேவை இல்லாத நெருக்கடிகளைச் சிலர் சந்திக்க நேரலாம். எனினும் உங்களது உழைப்புக்கான பலன் இறுதியில் உங்களை வந்து சேரும். கவலைப்படாதீர்கள். கால் நடைகள் வளர்ப்பவர்கள் கால் நடைகளுக்குத் தேவையான அன்றாட மருத்துவ விடயங்களில் கூடுதல் அக்கறை எடுத்துக் கொள்ளவும்.

**மாணவ - மாணவியர்:**

ஞாபக மறதி வராமல் இருக்க அதிகாலையில் எழுந்து சில மணி நேரங்கள் தியானப் பயிற்சிகளில் ஈடுபடவும். உடல் ஆரோக்கியத்தில் குறிப்பாக கூடுதல் கவனத்தை எடுத்துக் கொள்ளவும்.. நண்பர்களைக் கூடப் பார்த்துத் தேர்ந்து எடுத்துக் பழகவும். மொத்தத்தில் கல்வியில் கூடுதல் கவனம் செலுத்தி பெற்றோருக்குப் பெருமை தேடித் தர வேண்டிய காலம் இது. மொத்தத்தில் அனைத்து விடயங்களிலும் நீங்கள் அதிக அக்கறையுடன் இருந்து கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியின் ரகசியம்

முல்லாவின் நண்பர் ஒருவர் முல்லாவிடம் வந்து நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருந்தார். அவர் முல்லாவிடம் விடைபெற்றுக் கொண்டு எழுந்தபோது அவரை நோக்கி "முல்லா அவர்களே தாங்கள் பலவிதத்திலும் மக்களிடம் புகழ் பெற்றவராகத் திகழுகிறீர். மன்னரிடம் உங்களுக்கு மிகுந்த செல்வாக்கு இருக்கிறது. இவ்வாறெல்லாம் நீங்கள் புகழும் பெருமையும் பெறுவதற்கு ஏதோ ஒரு ரகசியம் இருக்க வேண்டும். அந்த ரசகசியம் என்னவென்று தயவு செய்து எனக்குக் கூறுவீர்களா?" என்று கேட்டார்.

"உண்மையிலே என் வெற்றிக்கு அடிப்படையான ரகசியம் ஒன்று இருக்கிறது. ஆனால் அது ரகசியமாயிற்றே. அதை ஒருவரிடம் சொன்னால் அது அப்படியே பரவிக் கொண்டே போகுமே" என்று முல்லா சொன்னார்.

"முல்லா அவர்களே. என்னிடம் எந்த ரசகசியத்தைச் சொன்னாலும் உண்மையிலே அது என்னை விட்டுத் தாண்டாது தயவு செய்து அந்த ரகசியத்தை எனக்கு மட்டும் கூறுங்கள்" என்று நண்பர் வேண்டிக் கொண்டார்.

"நான் என் வெற்றியின் ரகசியத்தை உங்களிடம் கூறினால் யாரிடமும் கூற மாட்டீர்களே" என்றார் முல்லா.


"என்னை நம்பலாம் என்னிடமிருந்து ரகசியம் ஒரு போதும் வெளியே போகாது" என்று உறுதியாகக் கூறினார் நண்பர்.

"யாராவது உம்மிடம் வந்து ஏராளமான பணம் தருகிறேன் என்று ஆசை காட்டினால்?" என்று கேட்டார் முல்லா.

"கோடிப் பொன் தருவதாக ஆசை காட்டினால் கூட யாரிடமும் கூற மாட்டேன்" என்று திடமாகக் கூறினார் நண்பர்.


" அப்படியானால் நம்பி உங்களிடம் ரகசியத்தைக் கூறலாம். மறந்துகூட இதைப் பிறரிடம் சொல்ல மாட்டீர்கள் என்று நம்பலாம் இல்லையா?" என்று முல்லா கேட்டார்.

"என்னை முழு அளவுக்கு நம்பலாம்" என்று வாக்குறுதி கொடுக்கும் விதத்தில் நண்பர் சொன்னார்.



" உண்மையிலேயே நீர் ரகசியத்தைக் காப்பாற்றக் கூடியவர்தான். என் வெற்றிக்கான ரகசியத்தைக் கூறினால் நான் ரகசியத்தைக் காப்பாற்றத் தெரியாத முட்டாள் ஆகிவிடுவேன். அதனால் அன்பு நண்பரே என் ரகசியத்தை உமக்குக் கூறத் தயாராக இல்லை. நானும் என் ரகசியத்தைக் காப்பாற்ற வேண்டுமல்லவா?" எனக் கூறியவாறு முல்லா அந்த இடத்தை விட்டு அகன்றார்.

# இலக்கங்களை இணைத்து படத்தை முழுமை செய்வோம்




# மாணவர்களும் வாசிப்பும்

பாடசாலையில் கிடைக்கின்ற எல்லாவிதமான அனுபவங்களைக் காட்டிலும் மாணவர்கள் வாசிப்புத் திறனை வளர்த்துக் கொள்வதன்மூலம் பெற்றுக் கொள்ளும் அனுபவம், அறிவு, திறன் மனப்பாங்கு மாற்றங்கள் பிள்ளைகளின் சமூக மயமாக்கல் திறன்களைப் புடம்போடுகின்றன.

இன்றைய மாணவர்கள் வாசிக்குத் திறனும் குன்றியவர்களாகவும் வாசிக்கும் ஆர்வம் இன்றியவர்களாகவும் காணப்படுகின்றனர்.

மாணவர்களிடையே வாசிப்புத் திறன் மேம்படுத்த வீட்டில் பெற்றோரும் பாடசாலைகளில் ஆசிரியர்களும் வழிகாட்டுதல் இன்றியமையாததாகும்.

பெற்றோர்கள், பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுங்கள். வாசிப்பின் அவசியத்தை உணர வையுங்கள். எமக்கு வழிகாட்டிச் சென்ற அறிஞர்கள், விஞ்ஞானிகள், மாமேதைகள் போன்றோர் வாசிப்பின் மகிமையை எடுத்துரைத்தமையைக் கூறுங்கள்.

- உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ அதுபோல மனப்பயிற்சி புத்தக வாசிப்பு- **இக்மண்ட் பிராய்ட்**
- ஒரு குழந்தைக்கு நீங்கள் வாங்கித் தரும் ஆகச்சிறந்த பரிசு ஒரு புத்தகம் தான்-**வின்ஸ்ட் சேர்க்கின்**
- பிறந்த நாளுக்கு என்ன வேண்டும் எனக் கேட்டபோது புத்தகங்கள் வேண்டும் என சற்றும் தயக்கமின்றிக் கூறினாராம் -**லெனின்**
- பயங்கரமான போராட்ட ஆயுதங்கள் எவை எனக்கேட்டபோது புத்தகங்கள் என்றாராம்-**மாட்டின் லூதர் கிங்**
- நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கித் தந்து என்னைச் சந்திப்பவனே என் தலை சிறந்த நண்பன் என்றாராம்-**ஆபிரகாம் லிங்கன்**



# தெரிந்து கொள்ள வேண்டிய தினங்கள்

- உலக தந்தையர் தினம்-ஜூன் 18
- அன்னையர் தினம்-பெப்ரவரி-22
- உலக பெண்கள் தினம்-மார் 8
- உலக குடும்ப தினம்-மே 5
- உலக ஏழைகள் தினம்-ஜூன் 28
- உலக தாய்ப்பால் தினம்-ஓகஸ்ட் 1
- உலக மக்கள் தினம்-ஜூலை 11
- உலக உணவு தினம்-ஒக்ரோபர் 16
- உலக வறுமை ஒழிப்புத் தினம்-ஒக்ரோபர்-17
- உலக மனித உரிமைகள் தினம்-டிசெம்பர்-10
- உலக பூமி தினம்-ஏப்ரல் 22
- உலக ஆண்கள் தினம்-நவம்பர் 19
- உலக மருத்துவர் தினம்-ஜூலை 1
- உலக எழுத்தறிவு தினம்-செப்ரெம்பர் 8
- உலக தபால் தினம்-ஒக்ரோபர்-9
- உலக மக்கள் தொகை தினம்-ஒக்ரோபர் 1
- உலக மூத்தோர் தினம்-ஒக்ரோபர் 1
- உலக செவிலியர் தினம்-மே 12
- உலக வன தினம்-மார்ச் 21
- உலக கால்நடை தினம்-மார்ச் 28
- உலக கடல் தினம்-ஏப்ரல் 5
- உலக விலங்குகள் தினம்-ஒக்ரோபர் 4
- உலக அமைதி தினம்-செப்ரெம்பர் 21






# விலைகொடுத்து வாங்க முடியாதது!

பட்டத்தை விலைகொடுத்து வாங்கலாம்!
அறிவை விலைகொடுத்து வாங்கமுடியாது!

உழைப்பை விலைகொடுத்து வாங்கலாம்!
திறமையை விலைகொடுத்து வாங்கமுடியாது!

பதவியை விலைகொடுத்து வாங்கலாம்!
மதிப்பை விலைகொடுத்து வாங்கமுடியாது!

புத்தகத்தை விலைகொடுத்து வாங்கலாம்!
ஆர்வத்தை விலைகொடுத்து வாங்கமுடியாது!

மருந்தை விலைகொடுத்து வாங்கலாம்!
உடல்நலத்தை விலைகொடுத்து வாங்கமுடியாது!

கடிகாரத்தை விலைகொடுத்து வாங்கலாம்!
நேரத்தை விலைகொடுத்து வாங்கமுடியாது!

ஊடகங்களை விலைகொடுத்து வாங்கலாம்!
உண்மையை விலைகொடுத்து வாங்கமுடியாது!

புற அழகை விலைகொடுத்து வாங்கலாம்!
அக அழகை விலைகொடுத்து வாங்கமுடியாது!




# ஆயுள்காலம்

| | |
|---|---|
| சிங்கம் - | 10 முதல் 14 வருடங்கள் |
| புலி - | 20 முதல் 26 வருடங்கள் |
| சிறுத்தை - | 12 முதல் 17 வருடங்கள் |
| குதிரை- | 25 முதல் 30 வருடங்கள் |
| பூனை - | 4 முதல் 5 வருடங்கள் |
| முயல்- | 1 முதல் 3 வருடங்கள் |
| நாய்- | 10 முதல் 13 வருடங்கள் |
| பசு மாடு - | 18 முதல் 22 வருடங்கள் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துவைத்த துணியை வீட்டுக்குள் காய வைப்பவரா? ஆபத்து காத்திருக்கு ?

இடவசதியின்மை, மழை, குளிர் என பல காரணங்களால் வீட்டுக்குள்ளேயே துணிகளை உலர்த்தும் பழக்கமுள்ளவரா நீங்கள்? வீட்டாரின் ஆரோக்கியக் கேடுகளுக்கு அதுவும் ஓர் ஆரம்பமாகி விடுகிறது.



வீட்டிற்குள் துணிகளை உலர்த்துவதால் அப்படி என்ன நடந்துவிடும் என்று கேட்பவர்களுக்கு அதிர்ச்சியான பல தகவல்களை தருகிறது, சமீபத்திய ஆய்வு.

இந்த பூமியில் நம் கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்கள் எக்கச்சக்கம். பாக்டீரியா, பூஞ்சை என்று நாம் பெயரிட்டு அழைக்கும் இவற்றுக்கு மிகவும் பிடித்தமானது ஈரப்பதம்.

இவை வாழ்வதற்கும், பெருக்கமடைவதற்கும் உகந்தது ஈரப்பதம் மிக்க இடங்கள் தான். இவை மனிதனின் நோய் எதிர்ப்பு மண்டலத்தை சீர்குலைத்து பலவீனமாக்கிவிடும் அளவுக்கு மிகவும் ஆபத்தானவை.

இது குறித்து என்.எஸ். டபிள்யூ. பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழல் நலத்துறையைச் சார்ந்த பேராசிரியர்களான நிக் ஆஸ்போன், கிறிஸ்டைன் கெவி நடத்திய ஆய்வு முடிவுகள் பின்வரும் உண்மையை விளக்கியுள்ளன.



பொதுவாக ஈரப்பதமுள்ள காற்றில் இருக்கும் இந்த நுண்ணுயிர்கள், காற்றோட்டம் குறைவாக இருக்கும் நம் வீடுகளுக்குள் காய வைக்கப்படும் துணிகளில் வந்து ஒட்டிக்கொள்ளும் இயல்புடையவை.

பின்னர் பாதி உலர்ந்தும், உலராமலும் இருக்கும் துணிகளில் ஒருவித வாடையை உண்டு பண்ணும்.

அந்த ஆடையை ஒருவர் அணியும் போது அவரது மூச்சுக்குழல் வழியாகப் நுழைந்து நுரையீரல் சார்ந்த நோய்களை, குறிப்பாக ஆஸ்துமா போன்ற நோய்களை உருவாக்குகின்றன.


இந்த நுண்ணுயிர்களை எதிர்த்துப் போராட ஒருவருக்கு நோய் எதிர்ப்புத் திறன் என்பது அவசியம்.

ஆனால், ஆஸ்துமா போன்ற நோயால் பாதிக்கப்பட்டவர்களின் நோய் எதிர்ப்புத் திறன் ஏற்கெனவே குறைவு என்னும் பட்சத்தில் இந்த நுண்ணுயிர்கள் நோயாளியின் நோய் எதிர்ப்பு மண்டலத்தைப் பலவீனப்படுத்தி, ஆரோக்கியத்தைப் பாதிக்கும். வீட்டில் நாம் துணியை உலர்த்தும்போது, இந்த நுண்ணுயிர்களின் வளர்ச்சி மற்ற சூழ்நிலைகளை விட 30 சதவிகிதம் அதிகமாக இருக்குமாம்.



பெட்டி போன்ற சிறிய வீட்டில் எங்கு தான் துணியை உலர்த்துவது என்று கேட்கலாம். முடிந்தவரை துணிகளை நீர் வடியும் வரை வெயில் இருக்குமிடத்தில் உலர்த்துங்கள்.

வேறு வழியில்லை என்றால், ஓரளவு காற்றோட்டம் நிறைந்த அறையில் (அது படுக்கை அறையாக இல்லாமல் இருப்பது நலம்) துணியை உலர்த்தி எடுங்கள்.



# கறுப்பு உளுந்து கருப்பட்டி கஞ்சி

கறுப்பு உளுந்தை உணவில் சேர்த்தால், உங்கள் ஒட்டுமொத்த ஆரோக்கியமும் குறிப்பிடத்தக்க அளவு அதிகரிக்கும். ஏனென்றால், அது நார்ச்சத்து அதிகமான, புரதம் நிறைந்த மற்றும் இரும்புச்சத்து நிரம்பியுள்ள தானியமாகும். இந்தக் கஞ்சியில் கறுப்பு உளுந்தோடு கருப்பட்டி சேர்த்துள்ளதால் விரைவில் ஜீரணிக்க உதவுகிறது. இந்த கஞ்சி உங்களைச் சுறுசுறுப்பாகவும் ஆற்றலுடனும் வைத்திருக்கும்.

**தேவையானவை:**

கறுப்பு உளுந்து (உடைத்தது) ஒரு கப்
கருப்பட்டி ஒரு கப்
தேங்காய்த் துருவல் கால் கப்
காய்ச்சிய பால் 2 கப்

**செய்முறை**


கறுப்பு உளுந்தைத் தண்ணீரில் இரண்டு அல்லது மூன்று முறை நன்கு கழுவிக் கொள்ளவும். சிறிய குக்கரில் கழுவிய பருப்பு சேர்த்து, 2 கப் தண்ணீர் ஊற்றி மூடி போட்டு மிதமான தீயில் 10 விசில் வரும் வரை வேகவைக்கவும்.

கருப்பட்டியை நன்கு பொடித்து சிறிய பாத்திரத்தில் சிறிதளவு தண்ணீர் ஊற்றி, அடுப்பைக் குறைந்த தீயில் வைத்து கரைத்துக் கொள்ளவும். பின்னர் ஒரு பாத்திரத்தில் வடிகட்டிக் கொள்ளவும்.

குக்கரைத் திறந்து பருப்பை லேசாக மசித்துக் கொள்ளவும். அதில் தேங்காய்த் துருவல் மற்றும் வடிகட்டி வைத்துள்ள கருப்பட்டி கரைசலைச் சேர்த்து நன்கு கலந்து, அடுப்பை மிதமான தீயில் வைத்து, சிறிது நேரம் கொதித்ததும் இறக்கவும். கஞ்சி சிறிது ஆறியதும் காய்ச்சி ஆறவைத்த பாலைச் சேர்த்து நன்கு கலந்து பரிமாறவும்.

*குறிப்பு:*

இந்தக் கஞ்சியில் பால் சேர்ப்பதற்குப் பதிலாகத் தேங்காய்ப்பால் சேர்த்தும் அருந்தலாம். அதேபோல கருப்பட்டிக்குப் பதிலாக வெல்லம் சேர்த்துக்கொள்ளலாம்.



# எது மகிழ்ச்சி...

ஒரு பெரிய ஹோலில் செமினார் நடந்து கொண்டிருந்தது. அப்போது பேச்சாளர் எல்லார் கையிலும் ஒரு பலூனை கொடுத்து தங்கள் பெயரை எழுத சொன்னார்.

எல்லோரும் தங்கள் பெயரை பலூனில் எழுதி முடித்தவுடன் ,அதை இன்னொரு அறையில் நிரப்ப சொன்னார். இப்பொழுது அந்த பேச்சாளர், உங்கள் பெயர் எழுதிய பலூனை அந்த அறைக்குள் இருந்து எடுத்து வாருங்கள் என்று அறிவித்தார்.

உடனடியாக அனைவரும் விழுந்து அடித்து அந்த அறைக்குள் ஓடிச் சென்று ஒவ்வொரு பலூனாக எடுத்து தேடினர் . ஒருவருக்கொருவர் நெக்கி தள்ளிக் கொண்டு கீழே விழுந்து தங்கள் பெயருக்குரிய பலூன் கிடைக்கிறதா என்று பரபரப்பாக தேடினர். 5 நிமிடம் கடந்த போதிலும் ஒருவராலும் தங்களுக்குரிய பலூனை தேடி கண்டு பிடிக்க முடியவில்லை.

இப்பொழுது அந்த பேச்சாளர் சொன்னார், 'ஒவ்வொருவரும் ஒரு பலூன் மட்டும் எடுங்கள், அந்த பலூனில் யார் பெயர் இருக்கிறதோ அதை அந்த பெயர் உடைய நபரிடம் கொடுங்கள்' என்றார். அடுத்த ஒரே நிமிடத்தில் தங்கள் பெயர் எழுதப்பட்ட பலூன் எல்லோருக்கும் கிடைத்துவிட்டது.

இப்பொழுது அந்த பேச்சாளர் சொன்னார், 'இது தான் வாழ்க்கை. எல்லோரும் மகிழ்ச்சியை தேடுகிறோம், ஆனால் அது எங்கே, எப்படி, எதில் கிடைக்கும் என்று நினைப்பது இல்லை'.

'நம்ம சந்தோஷம் அடுத்தவர்களுக்கு உதவுவதில் தான் இருக்கிறது. அடுத்தவர்களுக்கு மகிழ்ச்சியை கொடுங்கள், உங்கள் மகிழ்ச்சி உங்களை தேடி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்து

**யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்**



**திருமதி சறோஜினிதேவி நிமலேந்திரன்**
**(S.L.T.S- I)**
**(சேவைக்காலம் 30 வருடங்கள்)**
**28.11.1989 - 15.10.2019**

**சேவை விவரம்:**

- ★ யா/ கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை .
- ★ யா/ மட்டுவில் தெற்கு அ.மி.த.க.வித்தி.
- ★ கிளி/ முரசுமோட்டை றோ.க. வித்தி.
- ★ கிளி/ வட்டக்கச்சி தெற்கு அ.த.க. பாடசாலை.
- ★ கிளி/ திருவையாறு மகாவித்தியாலயம்.
- ★ தி/நிலாவெளி மகாவித்தியாலயம்.
- ★ யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை.
- ★ யா/ பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்.

எமது பாடசாலையில் ஆசிரியையாய் ஓங்குபுகழ் நிறைசேவையாற்றி 15.10.2019 அன்று ஓய்வுபெற்றுச் செல்லும் மணிவிழா நாயகியை மாண்புறு நலங்கள் பெற்று சிறப்புடன் வாழ மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:*

**பாடசாலைச் சமூகம்,**
**யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்.**

## குத்தகைக்கு

கொக்குவிலில் அமைந்துள்ள சைவ உணவகம் ஒன்று குத்தகைக்கு விடப்படும்.

**077 597 8131,**
**021 437 7763**

## அலுவலக பணியாளர் தேவை

யாழ் நகரின் மத்தியில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு அலுவலக சுத்திகரிப்பு பணிகளை மேற் கொள்வதற்கு அலுவலக சுத்திகரிப்பாளர் தேவை [ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்]

ஆர்வமுள்ள அனைவரும் கீழ் குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகளை மேற்கொள்ளுங்கள் .

சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும் .

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்

**021 222 8060 / 071 777 4222**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் மீள் ஆரம்பம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்களையும் சேர்ந்த மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் யாவும் உடனடியாக இன்றிலிருந்து (15.10.2019) ஆரம்பிக்கப்படுகிறது. மேலதிக தகவல்கள் தேவைப்படின் சம்பந்தப்பட்ட பீடங்களுடன் தொடர்புகொள்ளுமாறு மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(IN 11466)(14.17) **பதிவாளர்.**

# வவுனியா வடக்கு பிரதேச சபை

**2020.01.01 முதல் 2020.12.31 வரை மரக்கறி சந்தைகள், மீன் சந்தைகள் மற்றும் இறைச்சிக்கடைகள் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல் 2020**

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி : 2019.10.15 தொடக்கம் 2019.11.04 ம் திகதி பி.ப 1.00 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி : 2019.11.04 பிற்பகல் 02.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 2019.11.04 பிற்பகல் 02.00 மணி

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| தொ.இ | குத்தகை விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1. | கனகராயன்குளம் கோழிக்கடை | 2,000.00 | 5,000.00 | 221,100.00 |
| 2. | கனகராயன்குளம் மீன்கடை | 2,000.00 | 5,000.00 | 90,750.00 |
| 3. | கனகராயன்குளம் மரக்கறிகடை | 2,000.00 | 5,000.00 | 341,000.00 |
| 4. | புளியங்குளம் கோழிக்கடை | 2,000.00 | 5,000.00 | 55,000.00 |
| 5. | புளியங்குளம் மீன்கடை | 2,000.00 | 5,000.00 | 33,000.00 |
| 6. | புளியங்குளம் மரக்கறிகடை | 2,000.00 | 5,000.00 | 82,500.00 |
| 7. | நெடுங்கேணி கோழிக்கடை இல 01 | 2,000.00 | 5,000.00 | 495,000.00 |
| 8. | நெடுங்கேணி கோழிக்கடை இல 02 | 2,000.00 | 5,000.00 | 495,000.00 |
| 9. | நெடுங்கேணி மீன்கடை | 2,000.00 | 5,000.00 | 99,000.00 |
| 10. | நெடுங்கேணி மரக்கறிகடை | 2,000.00 | 5,000.00 | 555,511.00 |

01. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "தவிசாளர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், பூங்காவீதி, வவுனியா" என முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.
02. கேள்விப் பத்திரம் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் கிராமஅலுவலரின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராகக்" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
04. தெரிவு செய்யப்படும் கடைகள், சந்தைகளுக்கான சித்திதரக்கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 2/3 பங்குத்தொகையை 2019.11.07 ஆம் திகதி செலுத்தி அன்றைய தினமே ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். மிகுதி 1/3 தொகையினை 2020.07.31 இற்கு முன்னர் மாதாந்தம் சம தொகைகளாக ஒவ்வொரு மாதமும் 05 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறுமிடத்து 10% தண்டப்பணம் அறவிடப்படும்.
05. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை எந்தவொரு காரணமும் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ தவிசாளருக்கு அல்லது செயலாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
06. கேள்வித்தொகையிலும் குறைந்தகேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புபணமும் மீளளிக்கப்படமாட்டாது.
07. கேள்விதிறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது எழுத்து மூல சம்மதம் பெற்ற பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
08. மரக்கறிச்சந்தை மண்டபம் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர், கொண்டுவரும் பொருட்களின் விற்பனைவிலையில் 4% இற்கு மேல் வரி அறவிடக்கூடாது.
09. கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
10. கடை, சந்தைகளின் தூய்மைக்கு பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்துவதற்கு தாங்கள் முழுப் பொறுப்பாளியாவீர்கள்.
11. மரக்கறிசந்தைக்கு உற்பத்தியாளரால் விற்பனைக்கு கொண்டுவரப்படும் உற்பத்திபொருட்களின் நிறையில் கழிவுகள் எதனையும் குத்தகையாளரால் விதிக்கமுடியாது.
12. மரக்கறிச் சந்தைகள் குத்தகைக்கு பெறுபவர் வியாபாரிகள் கோருமிடத்து சந்தைப்பகுதியில் இடம் இருப்பின் நியாயமான வாடகைக்கு வழங்குதல் வேண்டும்

**திரு. சபாரத்தினம் தணிகாசலம்**

**தவிசாளர்**
**வவுனியா வடக்கு பிரதேச சபை**
**நெடுங்கேணி.**

**(விண்ணப்ப படிவங்களை 2019.10.15 தொடக்கம் 2019.11.04 ம் திகதி வரை அலுவலக நாட்களில் முற்பகல் 9.00 தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரையும் 2019.11.04 ம் திகதியானது பிற்பகல் 1.00 மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம்.)**

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

கடந்த 16.09.2019 திங்கட்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி

**அமரர் மாணிக்கம் சந்திராதேவி**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (16.10.2019) புதன்கிழமை காலை 6.00 மணியளவில் கல்லூரி வீதி, தாமரைக்குளத்தடி பொதுப்பணி மன்ற அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் பங்குபற்றி தொடர்ந்து பருத்தித்துறை பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் தேவஸ்தான (சிவன் கோயில்) மண்டபத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

**கல்லூரி வீதி, பருத்தித்துறை.** (CJ1146)(11,17) **குடும்பத்தினர்.**

## 13 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

**செல்வி தவமணி வன்னியசிங்கம்**



மலர்வு 04.09.1938 உதிர்வு 08.10.2006


உத்தமியாரே, நீங்கள்
உங்கள் தாய், தந்தை, சகோதரர், பெறாமகள்
யாவருக்கும் தளராது சேவை செய்து மறைந்தீர்
நாங்கள் உங்களை போற்றி வணங்குகின்றோம்
இறைவன் உங்களுக்கு நல்ல பதவியை அளித்திருப்பார்
என்று நம்புகிறோம்.
ஓம் சாந்தி!! சாந்தி!! சாந்தி!!!

**555, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.** (CS 28705) (14.17) **சகோதரர்கள், பெறாமகள்.**

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் தர்மலிங்கம் தர்மராஜா**

**(உரிமையாளர் - சரண்யா மோட்டோர்ஸ், யாழ்ப்பாணம்)**



பிறப்பு 15.03.1958

இறப்பு 18.09.2016

ஆண்டவன் திருப்பாதங்களில்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
நித்தமும் பிரார்த்திக்கின்றோம்

**[illegible] வாசம், [illegible] தெற்கு, கொக்குவில்.** **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### திருமதி லோறன்ஸ் மொனிக்கா தவரத்தினம்

தோற்றம் 05.05.1949 மறைவு 13.10.2019



மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லோறன்ஸ் மொனிக்கா தவரத்தினம் 13.10.2019 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (15.10.2019) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணியளவில் நீக்கிலார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நீக்கிலார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
வடக்கு வீதி, மிருசுவில். அன்ரன் (மைத்துனர்)
(AC/404)(11.17)
077 196 2491

## மரண அறிவித்தல்

### தேவராசா இராசாத்தி (அக்கம்மா)



செம்பாடு, தூதாவளை, கரணவாய் கரவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தேவராசா இராசாத்தி (அக்கம்மா) கடந்த 12.10.2019 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சதாசிவம் - இராசம்மா தம்பதிகளின் புத்திரியும் திரு.திருமதி சதாசிவம் மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் தேவராசாவின் அன்பு மனைவியும் தேவகியின் (நோர்வே) அன்புத் தாயாரும் கௌரிகுமாரின் (நோர்வே) மாமியாரும் கௌசிகா, தருணி, மதுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.10.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிராய் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செம்பாடு, தூதாவளை, கரணவாய், கரவெட்டி. (CS 00990)(14.17) தகவல்: குடும்பத்தினர்.
077 498 5641

## மரண அறிவித்தல்



பிறப்பு 08 . 01 . 1987 இறப்பு 12 . 10 . 2019

### பாலராசா நிரோஜன்

புத்தூர் நவக்கிரியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பாலராசா நிரோஜன் கடந்த (12.10.2019) சனிக் கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் பாலராசா- செல்லப்பாக்கியம் தம்பதியின் அன்பு மகனும் கயூரன், கயூரி(லண்டன்) ஆகியோரின் அன்பு சகோதரனும் கனிஸ்ரா, சுகீஸ் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் கபீஸ்சின் பெரிய தந்தையும் சஜீத்தின் (லண்டன்) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதி நல்லடக்க ஆராதனை நாளை (16.10.2019) புதன்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத் திற்காக நிலாவரை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

CS28710(14/17)
நவக்கிரி, புத்தூர். தகவல்: குடும்பத்தினர் 077 662 0057

### கோரிக்கையை...

னர். ஆகக் குறைந்தது ஒற்றையாட்சி யாப்புக் கோரிக்கையை நாம் நிராகரித்தோம் என்றாவது இணைக்கக் கோரினோம். அதற்கும் மறுப்புத் தெரி வித்தால் உடன்பாட்டில் கையொப்பமிடவில்லை. இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன் னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்ப லம் தெரிவித்தார்.

அரச தலைவர் தேர்தலில் தமிழர் தரப்பின் நிலைப் பாட்டை தமிழ் அரசியல் கட்சிகளும் கூட்டாக இணைந்து முன்வைப்பதற்கான பொது இணக்கப் பாடு நேற்று எட்டப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தில் 5 கட்சிகள் கையெழுத்திட்டன. தமிழ்த் தேசிய மக் கள் முன்னணி அதில் கையொப்படவில்லை. அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

நாம் முன்வைத்த கோரிக்கைகளும், ஏனைய கட்சிகள் முன்வைத்த கோரிக் கைகளும் அந்த ஆவணத்தில் உள் ளது. காணி பறிப்பு, பௌத்த மயமாக் கல், அன்றாட விடயங்கள் உட்படப் பல விடயங்கள் சேர்க்கப்பட்டன.

ஒற்றையாட்சி அரசியலை நிராகரிக்க வேண்டும் என்று கோரினோம். அரச மைப்பு இடைக்கால அறிக்கையை நிராகரிக்க வெண்டும் என்ற கோரிக் கைகளையும் முன்வைத்தோம். அதை ஐந்து கட்சிகளும் நிராகரித்தன. நாம் இந்த விடயத்தைத் தேவையில்லாது சேர்க்க முயல்கின்றோம் என்று தெரி வித்தன. நாம் இந்த முயற்சியின்போது பல விட்டுக்கொடுப்புக்களை மேற் கொண்டோம். ஆகக் குறைந்தது ஒன் றையாட்சி யாப்பை நாம் எதிர்க்கின் றோம் என்பதையாவது சேர்க்குமாறு கோரினோம். அதற்கும் மறுத்தனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை குழப்ப வாதிகளாகக் காட்ட வேண்டும் என்ற நோக்குடன் நடந்துகொண்டனர். இந்த ஐந்து கட்சிகளை நம்பி எதிர்வ ரும் தேர்தலில் மக்கள் முடிவெடுத்தால் எமது இனத்துக்கான பேரம் பேசும் உரிமையை மட்டுமல்ல, அன்றாடப் பிரச்சினைகளையும் கைவிடுவதாக அமையும். போர் முடிந்து 10 ஆண்டு கள் கடந்துள்ள நிலையில் மீண்டும் ஒருமுறை தமிழினத்துக்கு எதிரான சதிக்கு அடித்தளம் இடப்படுகின்றது. என்றார். (எ-105)

## மரண அறிவித்தல்



தோற்றம் 18 . 08 . 1963 மறைவு 14 . 10 . 2019

### காமதேவன் புஸ்பவதி (ராணி)

மாதகலைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட காமதேவன் புஸ்பவதி (ராணி) நேற்று (14.10.2019) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காமதேவன் (காமு) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சண்முகம் நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றகவர்களான இரத்தினம் நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் ரிலக்ஷன், ரீவிகா ஆகியோரின் அன்புத்தாயாரும் மகாதேவன், சந்திரவதனா, வாமதேவி, வாமதேவன், ஞானதேவன், காலஞ்சென்றவர்களான தங் கேஸ்வரி, வாமதேவன், வாசுதேவி, இந்திராதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (15.10.2019) செவ்வாய்க்கிழமை ந.ப 12.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



தோற்றம் 10 . 06 . 1947 மறைவு 14 . 10 . 2019

### கந்தையா மாசிலாமணி (ஆசாரியார்)

(உரிமையாளர், மாசிலாமணி கடைச்சல் தொழிலகம், வன்னியசிங்கம்வீதி, தாவடி)

காளிகோவிலடி, தாவடி வடக்கைப்பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா மாசிலாமணி நேற்று (14.10.2019) திங்கட்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா இரத்தினம்மா தம்பதிகளின் புத்திரனும் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை பூரணம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் நாகேஸ்வரி (பூபதி) யின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற பூபாலசிங்கம் மற்றும் மங்கையற்கரசி, காலஞ்சென்ற சுந்தரராஜா (மணி), மற்றும் கமலாதேவி, நவரத்தினம் (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான சோதியம்மா, சண்முகராசா ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, பாலசுப் பிரமணியம் மற்றும் இரத்தினம்மா, திருச்செல்வம் (ஜேர்மனி) ஆகியோரின் மைத் துனரும் பகீரதன் (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான சத்தியசீலன், சுகந்தினி மற்றும் சுகந்தன் (இயக்குநர்-KMAS Engineering Contractors) , ஜெயந்தி (UK), சங்கர் (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் சுஜித்தா (சுவிஸ்) , கோணேஸ்வரன் (UK), சங்கீதா (கனடா), கிமாலினி (பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும் சாரா,யதுராம், நிவியன், நச்ஷத்திரா, மகிஷ்கா, அபிஷா, கவிஷா, அக்ஷரா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ... அவரது இல்லத்தில் 17.10.2019 வியாழக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

021 222 7777,077 386 7599 தகவல்: குடும்பத்தினர்.

### வாக்குச்...

ள்ளது. இதற் கான தபால்மூல வாக்களிப்பு இந்த மாதம் 31 மற்றும் நவம்பர் முதலாம் திகதிகளில் நடைபெறவுள் ளது.

தபால்மூல வாக்களிப்புக் கான வாக்குச் சீட்டுக்கள் தபால் திணைக்களத்தி டம் கையளிக்கும் நடவடிக்கை எதிர்வரும் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள் ளது.

இதற்காக, அரச அச்சகத்தில் அச்சிடப்பட்டுள்ள வாக்குச் சீட்டுக் கணளை வடக்கின் 5 மாவட்டங்களுக் கும் தனித் தனியாக, அந்தந்த மாவட்ட தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகள் இன்று எடுத்து வரவுள்ளனர். (ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிநிலை வேண்டுகை

கணினி பக்க வடிவமைப்பாளர் (ஆண்/பெண்)
Graphics Designer

கணினி தட்டெழுத்தாளர் (ஆண்/பெண்)
Computer Typist

புத்தகம் கட்டுனர் (பெண்)
Binding

14.10.2019 - 17.10.2019 வரை
காலை 10.00 - 2.00 மணி வரை நேர்முகத்தேர்வு நடைபெறும்.
விண்ணப்பிக்க விரும்புவோர் நேரில் வரவும்

கரிகணன்
வடக்கின் அச்சகதாரர்
இல. 672B, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : +94 21 222 2717/ 8



## சேவை நலன் வாழ்த்தும் பிறந்தநாள் வாழ்த்தும்



Congratulations

செல்லையா ஞானப்பிரகாசம்
சாரதி – தரம் II – நகராட்சி மன்றம், சாவகச்சேரி.
சேவைக்காலம்– 01.07.2005 – 28.02.2019
புன் சிரிப்புக்களால் கடமைக்கு முகவரி தந்து – சாதுரியத்துடனே
சாரதிப் பணிபுரிந்து இளைப்பாறிய உத்தமனே!!!
சரித்திரம்பல படைத்து சரித்திர நாயகனாய்
பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றோம் வாழ்க!
ஊழியர் நலன்புரிச் சங்கம்
நகராட்சி மன்றம், சாவகச்சேரி.











## அறிவித்தல்
## நல்லூர் பிரதேசசபை-கொக்குவில்

நல்லூர் பிரதேசசபையின் அதிகார எல்லைக்குள் அமைகின்ற பலாலி வீதி, ஆடியபாதம் வீதி சந்திக்கும் திருநெல்வேலி சந்தியில் நுழைவாயில் அமைப்புடன் கூடிய சங்கிலிய மன்னனின் சிலை ஒன்றினை நிறுவி அப்பகுதியினை அழகுபடுத்துவதற்கு சபையின் 11.06.2019ஆம் திகதிய மாதாந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே குறித்த சிலையினை கீழ் காட்டியவரைபடத்தில் உள்ள அமைவிடத்தில் நிறுவுவது தொடர்பில் ஏற்றுக்கொள்ளத்தக்க காரணங்களின் பொருட்டு ஏதேனும் ஆட்சேபனை தெரிவிக்க விரும்புவோர் 28.10.2019ஆம் திகதிக்கு முன்னர் தவிசாளர் "செயலாளர், நல்லூர் பிரதேசசபை கொக்குவில் கிழக்கு கொக்குவில் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ தங்கள் ஆட்சேபனையை சமர்ப்பிக்கலாம் என அறியத்தரப்படுகிறது. குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் ஆட்சேபனைகள் பரிசீலனைக்காக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதையும் கவனத்திற் கொள்ளவும்.




திரு.த.தியாகமூர்த்தி
தவிசாளர்,
நல்லூர் பிரதேசசபை

### ஆவணத்தில்...

கரித்து கூட்டாட்சி (சமஷ்டி) ஆட்சி முறைமையின் கீழ் இலங்கையின் தமிழ் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும்.

இறுதிப்போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப் படுகொலை என்பவற்றுக்கு முழுமையான பக்கச்சார்பற்ற சர்வதேச பொறிமுறைகளான சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அல்லது பன்னாட்டு தீர்ப்பாயம் ஊடாக விசாரணை கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படல் வேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படல் வேண்டும்.

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் விவகாரத்தில் சர்வதேச பொறிமுறைகளின் கீழ் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படல் வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலை கொண்டிருக்கும் அரசபடைகள் போருக்கு முன் தமிழ் மக்களின் பாவனையிலிருந்த தனியார் மற்றும் அரச காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்டு அந்தக் காணிகள் அனைத்தும் உடனடியாக விடுவிக்கப்படுவதுடன் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படல் வேண்டும்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரச ஆதரவுடன் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் சிங்கள மயமாக்கல், பௌத்த மயமாக்கல் மற்றும் சிங்களக் குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

வடக்குக்கு மகாவலி நதியை திசை திருப்புவது என்ற போர்வையில் வடக்கு மாகாணத்தில் சிங்கள குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்கு மாத்திரமே திட்டமிட்டு செயற்படும் சபையாக மகாவலி அதிகாரசபை இயங்குவதால் மகாவலி அதிகார சபையின் நியாயாதிக்கம் வடக்கில் இல்லாது ஒழிக்கப்படல் வேண்டும். கிழக்கு மாகாணத்தில் மகாவலி அபிவிருத்தி திட்டம் என்ற பெயரில் இடம்பெறும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் அனைத்தும் நிறுத்தப்படல் வேண்டும்.

அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட மொரகஸ்கந்த நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் வன்னிப்பிரதேசத்தில திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் சிங்கள குடியேற்றங்கள் அனைத்தும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

தொல்லியல் திணைக்களம், வனவள திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் உட்பட பல அரச திணைக்களங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வரும் நில, வழிபாட்டு தல ஆக்கிரமிப்புக்கள் அனைத்தும் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட திணைக்களங்கள் ஊடாக ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் அனைத்தும் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள அரசிதழ் பிரகட னங்களிலிருந்து விடுவிக்கப்படல் வேண்டும்.

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தியையும் இளைஞர்களின் வேலை வாய்ப்புக்களையும் ஏற்படுத்துவதை நோக்காக கொண்டு வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களிடமிருந்து நேரடி முதலீடுகளை இலகுவாக பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக இங்கு காணிகளையும் மற்றும் நிதிகளையும் கையாள்வதில் இப்போது அவர்கள் எதிர்கொள்ளும் சட்டப்பிரச்சினைகளை தீர்க்க வேண்டும்.

வடக்கு - கிழக்குக்கான அரச மற்றும் தனியார் துறைகளின் வேலை வாய்ப்புக்களில் அந்தந்த மாகாணத்தை சார்ந்த மக்களுக்கே முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

வடக்கு கிழக்தைப் போரால் பாதிக்கப்பட்ட பிரதேசமாக பிரகடனப்படுத்தி அதன் அபிவிருத்திக்கான நிதியைக் கையாள்வதற்கு வடக்கு, கிழக்கில் தெரிவு செயயப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் நெறிப்படுத்தலில் பொதுக்கட்டமைப்பொன்றை உருவாக்குதல் வேண்டும்.

மேற் கூறிய கோரிக்கைகளில் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய விடயங்களுக்கு அரச தலைவர் தேர்தல் முடிவடைந்து புதிய அர தலைவர் பதவியேற்று மூன்று மாத காலப் பகுதிக்குள் தீர்வு காணப்பட வேண்டும்.

(எ-105)













## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சுந்தரம் இராசரத்தினம் (யூனியர்)

மலர்வு 05.10.1944
உதிர்வு 07.10.2017

அன்பின் திருவுருவமே! பண்பின் உறைவிடமே!
எங்களுக்கெல்லாம் அன்பு காட்டி அரவணைத்த எம் அன்புத் தெய்வமே!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து இரண்டு ஆண்டுகளல்ல எத்தனை
ஆண்டுகள் தான் சென்றாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் நெஞ்சங்களை விட்டு என்றும் அகலாதையா!

இல.17, உதயநகர் மேற்கு,
கிளிநொச்சி.

துயரில்
குடும்பத்தினர்.
077 942 1976


### தேவையற்றத்தை...

வது கட்சியையும் இணைக்க வேண்டும் என்றே இன்றும் முயற்சிக்கப்பட்டது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அரச தலைவர் தேர்தலில் தமிழர் தரப்பின் நிலைப்பாட்டை தமிழ் அரசியல் கட்சிகளும் கூட்டாக இணைந்து முன் வைப்பதற்கான பொது இணக்கப்பாடு நேற்று எட்டப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தில் 5 கட்சிகள் கையெழுத்திட்டன. அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

அவர்கள் முன்னதாகவே தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்ற முடிவை அறிவித்திருந்தனர். இருந்தும் இந்த ஆவணத்திலாவது ஒன்றுபட்டு வரவேண்டும் என்பதற்காக முயற்சித்தோம்.

எவரும் மாணவர்களைக் குறைகூற நாம் அனுமதிக்க மாட்டோம். இந்த ஆவணத்தில் நாம் ஒற்றையாட்சியை நிராகரி க்கின்றோம் எனத் தெளிவாக கூறியுள்ளோம். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பல்வேறு கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு இந்த ஆவணத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டன. என்றார்.

இந்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்ததாவது: ஒற்றையாட்சியை நிராகரித்து கூட்டாட்சி (சமஸ்டி) தமிழ் மக்களின் இறையாண்மை, சுயநிர்ணய உரிமை அனைத்தும் அங்கீகரிக்கப்பட்ட வகையில் அவசியம் என மிகத் தெளிவான வார்த்தைகளால் விளங்கப்படுத்தப்பட்டுள்ளது. இடைக்கால அறிக்கை என்ற விடயம் இந்த எல்லைப் பரப்புக்குள் வரவேண்டிய தேவை இல்லை என்பது கட்சிகளின் வியாக்கியானமாக இருந்தது. நாம் எல்லோரும் ஒன்றிணைந்து போகவேண்டும் என்ற வகையில் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது - என்றார்.

(எ-105)


தேவை
அனுபவமுள்ள மேசன்
கூலியாள்கள் தேவை.
076 660 1600

SANNITHY INSTITUTE
கலட்டி வீதி,
இல,72, யாழ்ப்பாணம்.
சிங்களம், ஆங்கிலம்
குறைந்த கட்டணம் இலகுவழியில்
அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படுகிறது.
சந்நிதி மனோ 077 767 7773


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை எதிர்க்க எவரும் இல்லை யெனில் உன் 'பலம்' என்னவென்று உனக்கே தெரியாது
எதிரியை 'எதிரே' வை
துரோகியை 'தூர' வை

**பென்சில் கற்று கொடுப்பது வாழ்கையில் ஒன்றுதான்... கூர்மையாக இரு இல்லை என்றால் சீவி விடுவார்கள்...**






# கேடு கெட்ட ரசனையை தட்டிக் கொடுக்கும் விஜய் தொலைக்காட்சி

## வெளுத்துவாங்கும் கஸ்தூரி

கமல் தொகுத்துவழங்கிய 'பிக்பாஸ்-3' சீசன் முடிந்தாலும் நிகழ்ச்சியின் சில முக்கிய காணொலிகளை அவ்வபோது விஜய் தொலைக்காட்சி தனது கீச்சகப் பக்கத்தில் பதிவு செய்து வருகின்றது.
அதில் ஒரு காணொலியில் கவின், சாண்டி, தர்ஷன், முகின் ஆகிய நால்வரும் 'வி ஆர் த பாய்ஸ்' என்ற பாடலை பாடிக்கொண்டிருக்கும் காட்சி பகிரப்பட்டுள்ளது.
அதற்கு கருத்து தெரிவித்துள்ள போட்டியாளர்களில் ஒருவராகக் கலந்துகொண்ட கஸ்தூரி "இந்த காணொலி ஒரு கெட்ட ரசனை கொண்டது. . நான் ஆம்பள... நான் ஆம்பள... என்று தனக்குத்தானே ஊளையிடுவதை இவ்வளவு தட்டிக் கொடுக்க வேண்டாமே? எம் இளைஞர்கள் சிறப்பானவர்களாக வரவேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

**twitter**

அதிகமாக தகராறு நடக்குற இடம், தண்ணி பிடிக்கும் இடமும் தண்ணி அடிக்க போற இடமும்தான்..!

இரகசிய கேமராக்கள் என்பவை பெரும்பாலும் எம் கண்ணுக்கு தெரிகின்றன.

உலகத்தில நடக்கின்ற பாதி குற்றங்களுக்குக் காரணம் "ஒரு வேளை சாப்பாட்டுக்கு தான்"

**உனக்கு பொருந்தாத காரியத்தை செய்து பிறரின் நகைப்புக்கு இடம் கொடாதே.**









## தமிழுக்கு முதலிடம்




## விதைப்பதை நிறுத்தாதீர்

தேக்கிவைக்கப்படும் நீர்
திறந்துவிடப்படும்போதே
விளைவிக்கிறது பயிரை!


செடிகளின் தரம் பார்த்து
பொழிவதில்லை மழை
தரமற்ற செடிகளின் மேல்
பொழிந்தமையால்
அது தரம்தாழ்ந்தும் போவதில்லை!

கழிவறை சுவர்களில்
ஒட்டப்படுவதனால்
காந்தியின் புனிதம்
கெட்டுபோவதுமில்லை
கழிவறையும்
புனிதமாய்
மாறிப்போனதுமில்லை!

நிலம் கண்ட இடங்களிலெல்லாம்
விதை விதைத்துச்செல்லுங்கள்
நல் நிலத்தில் நல்லவையும்
பாழ் நிலத்தில் கெட்டவையுமென
உருமாறி அவை முளைகொள்வதில்லை
விதை எதுவோ வேரும் அதுவே!

விளைவுகளையெண்ணி
விதைப்பதை நிறுத்தாதீர்
பார்த்துப்பாராமல்
தூவிய விதைகள்
பாழ் நிலத்தையும்
பசுமையாக்கக்கூடும் ..

சு.பிரபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்பிரம்பு வழிகாட்டிடும் உற்ற நண்பன்

தவநாயகம் மரிய துஸ்யந்தி

உலக இயங்கியலில் சமூக அரங்குகளை அலங்கரிப்பவர்களாக மனிதர்கள் காணப்படுகின்றனர். இவ் உலகில் அவதரிக்கின்ற மனிதர்கள் எல்லோருமே எல்லா அடிப்படைகளிலும் முழுமைத்துவம் வாய்ந்தவர்களாகப் பிறக்கவில்லை. வாழ்கின்ற காலத்தில் எவ்வித அசௌகரியங்களுமின்றி தமது வாழ்க்கைப் பயணத்தைத் திருப்திகரமாக எல்லா மானிடர்களும் தொடர்கின்றார்கள் என்றும் கருத முடியாது. இவ்வகையில் பிறக்கின்ற காலத்தில் ஏதேனும் அங்கக் குறைபாட்டோடு பிறப்பவர்கள், வாழ்க்கைப் பயணத்தில் சந்திக்கின்ற அசம்பாவிதங்களால் உடல் உளப் பாதிப்புக்களுக்கு உள்ளாகுகின்றவர்கள் என்போரை சிறப்புத் தேவையுடையவர்கள் என அடையாளப்படுத்திக் கொள்ளலாம்.

சிறப்புத் தேவையுடையவர்களில் ஒரு வகையினராகப் பார்வையற்றவர்கள் காணப்படுகின்றனர். உலக அரங்கில் போர், இயற்கை இடர்கள், வறுமை, விபத்து என்ற காரணிகளினால் பார்வையற்றவர்கள் உருவாகியும் உருவாக்கப்பட்டும் வருகின்றார்கள். இத்தகைய பார்வையற்றவர்களின் அடையாளச் சின்னமாகவும் அவர்களது வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காகவும் உதவும் சாதனமாகவும் உற்ற நண்பனாகவும் அமைவது வெண்பிரம்பாகும்.

**அமெரிக்காவில் உருப்பெற்றது**

விழி இழந்துபோன எம்மவர்கள் தமது ஒளிமயமான எதிர்காலக் கனவுகளுடன் வீடுகளில் முடங்கிக் கிடந்தார்கள். இத்தகைய சூழலில் 1931ஆம் ஆண்டு அமெரிக்காவில் அரிமாக் கழகத்தினரால் உழைப்பு, உறுதி, உயர்வு, ஊக்கம் என்ற தத்துவங்களினைத் தாங்கிய நான்கு துண்டுகளிலாலான வெண்கோல் வடிவமைக்கப்பட்டு அதற்கான சட்ட அங்கிகாரமும் பெறப்பட்டது.

கால மாற்றத்துக்கேற்ப வெண்பிரம்புகள் இலத்திரனியல் வடிவிலும் ஐந்து துண்டங்களாக வும் பன்னிரண்டு துண்டங்களாகவும் இன்று உருமாறியுள்ளன. பன்னிரண்டு துண்டங்களினைக் கொண்ட வெண்பிரம்பைத் தாங்கி வருபவர்கள் பார்வை இழப்புடன் வேறேனும் அங்கங்களையும் இழந்தவர்கள் என்பதை மக்களுக்கு அறியப்படுத்துகின்றனர். சிலவெண்பிரம்பு களின் மேற்பகுதி கறுப்பாகவும் நடுப்பகுதிகள் வெண்மையாகவும் கீழ்ப்பகுதி சிவப்பாகவும் அமையப் பெற்றிருக்கும். இதன் ஊடாகப் பார்வையற்றவர்கள் இருள் சூழ்ந்த உலகில் வெளிச்சமெனும் பாதையைக் கடக்கின்றனர். ஆயினும் ஆரம்பத்தில் இந்த வெண்பிரம்பு ஐரோப்பிய தேசங்களில் மட்டுமே பார்வையற்றவர்களின் வழித்துணையாக வலம் வந்தது.

1964ஆம் ஆண்டு பார்வையற்றோர் மாநாட்டில் ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி பன்னாட்டு வெண்பிரம்புப் பாதுகாப்பு நாளாக அறிவிக்கப்பட்டது. அன்று முதல் இன்றுவரை ஒக்டோபர் மாதம் 15ஆம் நாள் பார்வையற்றோரின் உரிமைகளினை வென்றெடுக்கும் நாளாகவும் பார்வை இழப்பினைக் குறைக்கும் விழிப்புணர்வு நாளாகவும் இந்த நாள் அமைந்து வருகின்றது.


**வெண்பிரப்புகளுக்கான உரிமைகள்**

இலங்கையில் 1969ஆம் ஆண்டு முதல் வெண்பிரம்பு தினம் ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி கொண்டாடப்பட்டு வருகின்றது. வெண்கோலினைத் தாங்கி வருபவர்கள் தமது வெண்கோலை இரண்டு துண்டுகளாக மடித்து வீதிக்குக் குறுக்கே காட்டி வீதியைக் கடக்கவும் நான்கு துண்டுகளாக மடித்து வாகனங்களை எவ்விடத்திலும் மறிக்கவும் உரிமை உண்டு. ஆயினும் அந்த உரிமைகள் நடைமுறைப்படுத்தப்படாத ஏடுகளின் சரத்துக்களாகவே காணப்படுகின்றன.

அது மட்டுமல்லாது நவீனத்துவ சிந்தனை உருவாகி நகரமயமாக்கல் பற்றிச் சிந்திக்கின்ற சமீப காலத்திலும் பார்வையற்றவர்களின் பயனத்துக்குப் பொருத்தமாக வீதிகள் கட்டமைக்கப்படாமை, பாதுகாப்பற்ற வீதிக்கடவை கள் சமிக்ஞைகள் இல்லாத வீதிக் கடவைகள், ஒழுங்காகப் பராமரிக்கப்படாத கால்வாய்கள், கட்டாக்காலி நாய்கள் என்று ஏராளமான தடைக்கற்கள்.

மேலும் இயந்திர யுகத்தில் பயணிக்கின்ற இன்றைய காலத்தில் கூட வெண்பிரம்பைத் தாங்கி வருபவர்களை அனுதாப நோக்குடன் பார்ப்பவர்கள் சமூகத்தில் இன்னோர் புறம் இத்தனை தடைக்கற்களினையம் தமது சாதனையின் படிக்கற்களாக மாற்றிச் சாதனைகளினைக் குவித்து வருகின்றார்கள் எம்மவர்கள்.

ஏட்டைத் தொட முடியுமா? என்று புறொய்லர் கோழிகளாய் வீடுகளில் காலம் கழித்த பார்வையற்றவர்கள் அவர்களின் பிறைலி எழுத்துக்கள் மூலம் இன்று கல்வி, கலை, இலக்கியம், அறிவியல் என்ற அத்தனை துறைகளிலும் தடம் பதித்து நிற்கின் றார்கள். பார்வையற்றவர்கள் கரம்பற்றி நடப்பவர்களேயன்றி கையேந்தி நிற்பவர்கள் அல்லர். எமக்காக அழவேண்டாம், எமைக் கண்டு அனுதாபம் தர வேண்டாம், எம்மை மதித்தால் போதும் உபகாரம் எனக் கூறும் எம்மவர் கூற்றைச் செவிமடுத்து இவர்தம் மதிப்புமிக்க சுய வாழ்வு விருத்திக்காக எல்லா வழிகளிலும் கரம் கோர்த்து இவர்களுடன் பயணிப்போம்.



**இன்று பன்னாட்டு வெண்பிரம்பு தினம்**

கட்டுரையாளர்
உப செயலாளர்
யாழ். விழிப்புலனற்றோர் சங்கம்

## வெள்ளைப் பிரம்புதினச் செய்தி

இனிய உடன் பிறப்புக்களே,

இன்னுமொரு தடவை உங்கள் இதயங்களோடு உறவாடக் கிடைத்த இந்த இனிய வாய்ப்பையெண்ணி உளம் பூரிப்படைகின்றேன். அதேவேளை, இந்த வாய்ப்பினை வழங்கிய ஊடகத்துக்கும் என் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் உண்மை அன்பையும் நன்றிகளையும் காணிக்கையாக்குகின்றேன்.

விழிப்புல வலுவிழப்பு என்பது நாம் விரும்பி ஏற்றுக்கொண்டதன்று. எனினும், அதைக் கண்டு அஞ்சுவதாலோ அழுவதாலோ ஆகிவிடப்போவது எவுமில்லை. இந்தச் சவாலை நாம் வெற்றிகொண்டேயாக வேண்டும். அதற்கான வழிகளும் நிறையவே இருக்கத்தான் செய்கின்றன. அவற்றை அறிந்து கொள்வதும் அறிந்து கொள்ளமுடியாது தவிப்பவர்களை ஆற்றுப்படுத்துவதும் நம் ஒவ்வொருவரினதும் பொறுப்பும் கடமையும் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. இந்த நவீன விஞ்ஞான உலகின் எந்த ஒரு நகர்வும் நமக்கு அன்னியப்பட்டு விடாமல் எப்போதும் நாம் அவதானத்துடன், விழிப்புடன் இருக்க வேண்டும். அதுவே நம் வாழ்வுக்கு அர்த்தம் சேர்க்கும், வலுச் சேர்க்கும். 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்பது முதுமொழி. விழிப்புல வலுவிழந்தவர்களைப் பொறுத்தமட்டில் பிறேயில் எழுத்துக்குச் சமமான, அல்லது அதைவிட மேம்பட்ட வேறெந்த எழுத்து முறையும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே, இந்த பிறேயில் எழுத்துக்களைக் கசடறக் கற்றுக் கொள்வது எம் ஒவ்வொருவருக்கும் மிகமிக இன்றியமையாதது என்பதை நன்கு மனதில் இருத்திக் கொள்ளுங்கள். நவீன விஞ்ஞான, தொழில்நுட்ப விருத்தி காரணமாக இன்று நமக்குப் பல்வேறு அரிய சாதனங்கள், வாய்ப்பு வசதிகள் கிட்டியுள்ளன. இவை நமது அறிவுத் தேடலுக்கு அருந்துணையாயுள்ளன என்பதை யாரும் மறுக்க முடியாது. எனினும், இதன் காரணமாக பிறேயில் எழுத்துக்களைக் கற்பதில் பலர் அக்கறையின்றி இருப்பது மிகவும் வேதனைக்குரியது. சுயமாக எழுதுதலும் எழுதியவற்றை வாசித்தலும் ஒரு மனிதனின் அடிப்படைத் தகைமை என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. 'எழுதுதல், வாசித்தல்' என்ற அடித்தளத்தை நன்கு அமைத்துக் கொண்டு நாம் அடுத்த அடியை எடுத்து வைப்போமானால் அதுவே நம் வாழ்க்கைப் பயணத்தின் வெற்றிக்கு வழிசமைக்கும்.

அனைவருக்கும் இனியவெள்ளைப் பிரம்புதின வாழ்த்துக்கள்.

ஆறுமுகம் ரவீந்திரன், தலைவர், வாழ்வகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## இன்னும் கனதியான முயற்சிகள் தேவை

தீர்க்கமான இலங்கை அரச தலைவர் தேர்தல் ஒன்றில், தமிழ் மக்களின்வாக்குகளே அடுத்த அரசதலைவரைத் தெரிவு செய்யும் என்கிற நிலையிலும் தமிழ் அரசியல் தரப்புக்கள் பொதுக் கொள்கை ஒன்றின் கீழ் ஒன்றிணைவது சாத்தியமற்றது என்பது மீண்டும் ஒரு தடவை நிரூபிக்கப் பட்டுள்ளது.

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகமாணவர்களின்முயற்சியில்முன்னெடுக்கப்பட்ட ஒரு முயற்சியின் முடிவில் ஏற்கனவே ஒத்த கருத்துக்களைக் கொண்டிருக்கக்கூடிய 5 கட்சிகள் பொதுக் கோரிக்கை ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.

இந்த 5 கட்சிகளுக்கும் மாற்றாக, மாற்று அரசியல் போக்கை முன்வைப்பதாகக்கூறிக்கொள்ளும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒத்துவராததை அடுத்து ஏற்கனவே தமக்கு ஒத்த கருத்துக்களைக் கொண்ட 5 கட்சிகளும் அறிக்கையில் கையெழுத்தின.

தமிழ் அரசியல் கட்சிகளை ஒருங்கிணைத்து பொது முடிவு ஒன்றுக்குக் கொண்டு வரும் முயற்சி என்று மாணவர்களின் முயற்சி பறைசாற்றப்பட்டாலும், அது ஒத்தோடிகளை அணி திரட்டி அவற்றின்கோரிக்கைகளைச்செறிவூட்டும்ஒரு முயற்சியாகவே இருந்தது.

இந்தக் கலந்துரையாடலுக்குத் தமிழர் பரப்பில் உள்ள கட்சிகள் அனைத்தும்அழைக்கப்படவில்லைஎன்பது இதன்முதல்குறைபாடு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் முன்னர் அங்கம் வகித்த கட்சிகள் அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்வழி வந்த கட்சிகள் மட்டுமே இந்தக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இத்தகையொரு முக்கியமனா தருணத்தில் அனைத்துத் தமிழ்த் தரப்பினரையும் ஒருங்கிணைத்து அரசியல் முடிவுகள் எடுக்கப்பட்டுவது காலத்தின் கட்டாயம். போருக்குப் பின்னரான அரசியலில் இந்தத் தாராளவாதம் தமிழ் அரசியல் பரப்பில் கட்டாயமானதாக இருக்கின்றது, ஆகக் குறைந்தபட்சமான ஒரு முயற்சியாக அது அமைந்திருக்கும்.

அது தவிர்க்கப்பட்டபோதே இந்த முயற்சி பலவீனப்பட்டுவிட்டது. சில தமிழ்க் கட்சிகள் ஏற்கனவே அரச தலைவர் தேர்தலில் தாம் யாரை ஆதரிப்பது என்கிற முடிவை எடுத்துவிட்டன என்பதால்அவர்களைஇதில்சேர்த்துக்கொள்ளவில்லைஎன்றகாரணம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

அப்படியே அவர்கள் ஒரு வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்திருந்தார்கள் என்றாலும் அந்த வேட்பாளருக்கூடாக இந்தப் பொதுக் கொள்கையை நடைமுறைப்படுத்தும்படி வலியுறுத்துவதற்கு அவர்களை இணங்கச் செய்ய முயற்சித்திருக்கலாம்.

அதுவும் நடக்காமல் , கூட்டமைப்பை ஒரு தரப்பிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை மறு தரப்பிலுமாக வைத்துக் கொண்டு இணக்கம் காண எடுக்கப்பட்ட முயற்சிகூட தோல்வியையே தழுவியுள்ளது. கூட்டமைப்பின் மறு தரப்பான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பொது இணக்கப்பாடு ஒன்றுக்கு வர முனையவில்லை.

எஞ்சிய 5 கட்சிகள் பொது இணக்கப்பாட்டு அறிக்கையில் கையெழுத்திட்டுள்ளன. கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் 3 கட்சிகள், கூட்டமைப்பின் முன்னர் அங்கம் வகித்த ஈபிஆர்எல் எவ் மற்றும் கூட்டமைப்பில் இருந்து ஆகப் பிந்தி உருவாகிய தமிழ் மக்கள் விடுதலைக் கூட்டணி ஆகிய 5 கட்சிகளுமே கைச்சாதிட்டவை.

இவைஅனைத்தும்அனேகமாகஒரேநேர்கோட்டில்பயணிக்கும் கட்சிகளே. இவற்றுடன் மாறுபடும் ஒரே கட்சியாக முன்னணி மட்டுமே இருந்தது. அதனை உள்ளடக்கிய பொதுக் கருத்தை எட்டமுடியாமல் போனவை என்பது ஒரு தோல்வியே!

வயது மற்றும் அனுபவத்தில் குறைதந்வர்களான யாழ். பல்கலைக்கழகமாணவர்களுக்குஇதுபோன்றஒருகூட்டத்தைநெறிப்படுத்துவது என்பது மிகச் சிரமமானதாகும். தங்களிலும் பார்க்க வயதும் அனுபவமும் கூடிய மக்கள் பிரதிநிதிகளைக் கட்டுப்படுத்தி ஒரு முடிவுக்கு இணங்க வைப்பது அவர்களின்பலத்திற்கு அப்பாற்பட்டது. எனவே இதுபோன்றதொரு முயற்சியை இன்னும்கனதியான பொதுப் பிரதிநிதிகளோடு அவர்கள் தொடங்கியிருக்க வேண்டும்.

இப்போதும் காலம் கடந்துவிடவில்லை. அரச தலைவர் தேர்தலில்மட்டுமல்ல, இனிவரும்காலங்களிலும்தமிழ்க்கட்சிகளின் பொதுக் கொள்கை ஒன்று அறிவிக்கப்படுவது காலத் தேவை.

கட்சிகள்எந்தக்கூட்டணியில்இருந்தாலும்கொள்கையும்நிலைப்பாடும் மாறாததாக இருப்பதற்கு அது அவசியம். அதற்கான முயற்சிகள் இன்னும் கனதியாக எடுக்கப்படவேண்டும்.

# அதிபர் ஜி ஜின் பிங் இன்னொரு மா வோ

ஜின்பிங்கின் முக்கியமான சாதனை என்றால், மக்கள் இடையேயான ஏற்றத் தாழ்வைக் குறைப்பதிலும், எளிய மக்கள் மேலேறிவரும் பாதையைத் தடுப்பதில் பெரிய தடைக்கல்லாக இருக்கும் ஊழலை ஒழிப்பதிலும் அவர் காட்டிவரும் தீவிரம். இதில் சொந்தக் கட்சியினர், வேண்டப்பட்டவர்கள், விசுவாசிகள் என்ற எந்தப் பாகுபாட்டையும் அவர் பார்க்கவில்லை. மேலும், எம்முடைய சாதி அமைப்பு போன்ற தடைச் சூழல் எதுவும் இன்றைய சீனாவில் இல்லை. ஜின்பிங் உண்டாக்கியிருக்கும் மோசமான பாதிப்பு என்றால், சீன அரசிலும் கட்சியிலும் யதேச்சதிகாரத்தை மேலும் அவர் வளர்த்திருக்கிறார்; ஜனநாயகத்தின் நிலை மேலும் மோசமாகியிருக்கிறது.



மாசே துங்குக்குப் பிறகு சக்தி வாய்ந்த அரசியல் தலைவராக சீனாவில் உருவெடுத்துள்ளார் ஜி ஜின்பிங். சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலர், சீன மக்கள் குடியரசின் அதிபர், சீனாவின் மத்திய ராணுவ ஆணையத்தின் தலைவர், கட்சியின் தனிப்பெரும் தலைவர் என்று ஒரே சமயத்தில் பல உயர் பதவிகளை வகிக்கிறார். மாவோவின் சிந்தனைகள் எப்படி கட்சியின் சித்தாந்தங்களிலும் நாட்டின் சட்டங்களிலும் தாக்கம் செலுத்தினவோ அப்படி இன்றைய சீனாவில் ஜி ஜின்பிங்கின் சிந்தனைகளும் தாக்கம் செலுத்துகின்றன.

### தந்தைவழி அரசியல்

1953ஆம் ஆண்டில் பிறந்த ஜி ஜின்பிங்கின் தந்தை ஜி ஜாங்க்ஸன், மாவோவின் ஆட்சிக் காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைப் பரப்புப் பிரிவின் தலைவராகவும் மாகாணத் துணை முதல்வராகவும் முக்கியப் பொறுப்புகளை வகித்தவர். ஆனால், மாவோ முன்னெடுத்த கலாச்சாரப் புரட்சியின்போது, கட்சியிலிருந்து ஜி ஜாங்க்ஸன் நீக்கப்பட்டதோடு சிறையிலும் அடைக்கப்பட்டார். சிறுவனான ஜின்பிங்கும் யான்சுவான் என்ற ஊரகப் பகுதியில் முகாமில் அடைக்கப்பட்டார்.

ஆயினும், தந்தையின் வழியில் அவர் அரசியல் நோக்கி நகர்வதில் இவையெல்லாம் எந்தத் தடையையும் உருவாக்கவில்லை. ஜின்பிங் தன்னை கம்யூனிஸ்ட் கட்சியில் ஈடுபடுத்திக்கொண்டார். அங்கே அவர் தொழிலாளியாக, விவசாயியாக, ராணுவச் சிப்பாயாக வேலைகளைச் செய்துகொண்டே சிங் ஹுவா பல்கலைக்கழகத்தில் படித்தார். பியுஜியான், ஷெஜியாங் ஆளுநராகப் பதவி வகித்தவர், 2007ஆம் ஆண்டில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2008ஆம் ஆண்டில் சீனத் துணை அதிபரானார். பிறகு, கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராகவும் அதிபராகவும் தேர்ந் தெடுக்கப்பட்டார்.

### ஜி ஜின் பிங்குக்கு நிகரானவர் இல்லை

இதற்குப் பின் கட்சியிலும் ஆட்சியிலும் தன்னை மிக வலுவான இடத்திலும் அதிகாரங்கள் அத்தனையும் தன்னைச் சுற்றிலும் சுழல்வதாகவும் அவர் மாற்றிக்கொண்டார். இன்றைக்கு அவருக்குச் சவால்விடக்கூடிய தலைவர் எவரும் சீனாவில் இல்லை என்பது போக, வரலாற்றில் மாவோவுக்கு அடுத்து சக்தி வாய்ந்த தலைவர் என்ற இடத்துக்கும் தன்னை நகர்த்திக்கொண்டிருக்கிறார்.

ஜின்பிங்கின் முக்கியமான சாதனை என்றால், மக்கள் இடையேயான ஏற்றத் தாழ்வைக் குறைப்பதிலும், எளிய மக்கள் மேலேறிவரும் பாதையைத் தடுப்பதில் பெரிய தடைக்கல்லாக இருக்கும் ஊழலை ஒழிப்பதிலும் அவர் காட்டிவரும் தீவிரம். இதில் சொந்தக் கட்சியினர், வேண்டப் பட்டவர்கள், விசுவாசிகள் என்ற எந்தப் பாகுபாட்டையும் அவர் பார்க்கவில்லை. மேலும், எம்முடைய சாதி அமைப்பு போன்ற தடைச் சூழல் எதுவும் இன்றைய சீனாவில் இல்லை. ஜின்பிங் உண்டாக்கியிருக்கும் மோசமான பாதிப்பு என்றால், சீன அரசிலும் கட்சியிலும் யதேச்சதிகாரத்தை மேலும் அவர் வளர்த்திருக்கிறார்; ஜனநாயகத்தின் நிலை மேலும் மோசமாகியிருக்கிறது.

உலகின் தலைமையை அமெரிக்காவிடமிருந்து பறித்து சீனாவை அந்த இடத்தில் அமர்த்துவது ஜின்பிங்கின் முக்கியமான இலட்சியம். அவருடைய எந்த உறவும் முனைப்பும் இதை மையமாக உள்ளடக்கியது என்ற புரிதல் முக்கியமானது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசி முடிவெடுக்கலாம் முடிவெடுத்த பின்னர் பேசவே முடியாது

## தமிழ்த் தேசிய முன்னணியின் குதர்க்கமான நிலைப்பாடு

■ தில்லாலங்கடி

அரச தலைவர் தேர்தலில் தமிழ் மக்கள் ஒருமித்த பொதுவான நிலைப்பாட்டுக்கு வரவேண்டும். அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பதைப் போல, தமிழ் மக்களின் ஒற்றுமையான முடிவு தேர்தலில் தாக்கத்தைச் செலுத்தும். தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளை அதற்காக ஓரணியில் திரட்டும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டது.

தமிழ் மக்கள் பேரவை சுயாதீனக் குழு என்ற பெயரில் தனது அணி ஒன்றை இந்த முயற்சியில் களமிறக்கியது. பிள்ளையார் பிடிக்கப் போய் எதையோ பிடித்ததைப் போன்று, தமிழ் கட்சிகளை ஓரணியில் திரட்டுவதை விடுத்து, பொது வேட்பாளர் என்ற தமது சிந்தனையை தமிழ் கட்சிகளிடம் திணித்து முயற்சியை தோல்வியில் முடித்தது தான் அந்தச்சுயாதீனக்குழுவின் 'பெரும்'பணி.

இதற்கிடையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இந்த விவகாரத்தை கையிலெடுத்தது. அவர்களும் தாமாக, சுயமாக இந்த முயற்சியை ஆரம்பிக்கவில்லை. அவர்களின் பின்னாலும் உருத்தெரியாத தரப்புக்கள் வழங்கிய அழுத்தங்கள் இருக்கத்தான் செய்கின்றன. தாம் சுயாதீனமானவே இந்தப் பணியை தொடக்கியதாகக் கூறினாலும், கனதியான முயற்சியை தனித்துச் செய்யும் ஆற்றல் அவர்களிடம் இருக்கின்றதா என்ற கேள்வி இயல்பாகவே தோன்றுகின்றது.

### சந்திப்புக்கள்

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்பதற்கான தனித்துவமான அடையாளம் தமிழ் மக்களிடம் இருந்தது. அந்த அடையாளத்துக்குத் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் இன்னமும் மதிப்பளித்து வருகின்றன. அந்த அடிப்படையில் மாணவர்கள் ஆரம்பித்த முயற்சிக்கு தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் ஆறும் ஆதரவளித்தன.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா அரசுக்கும் இடையில் சமாதான காலத்தில் நடந்ததைப் போன்று பல சுற்றுக்களாகப் பேச்சுக்கள் நடந்தன. மூன்று சுற்றுக்களுடன் இணக்கப்பாடு எட்டப்பட்டு, நான்காவது சுற்றுப் பேச்சில் கட்சிகள் கையெழுத்திடும் என்ற எதிர்பார்ப்புக்கள் இருந்தன.

### முடிவு அறிவிப்பு

இந்தப் பேச்சுக்கள் சுற்றுக்களாக நடந்து கொண்டிருந்த காலப் பகுதியில், பேச்சுக்களில் பங்கேற்ற அரசியல் கட்சிகளில் ஒன்றான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, அரச தலைவர் தேர்தலைப் புறக்கணிக்கின்றோம் என்ற முடிவை அறிவித்தது. அந்தக் கட்சி தனது நிலைப்பாட்டை கட்சியின் தலைவர் ஊடாகப் பத்திரிகையாளர் சந்திப்பில் உத்தியோகபூர்வமாக வெளியிட்டது.

அரச தலைவர் தேர்தல் தொடர்பில் தனது நிலைப்பாட்டை தெட்டத்தெளிவாக அறிவித்த பின்னரும், பல்கலைக்கழக மாணவர்களின் பேச்சுக்களில் அந்தக் கட்சி பங்கேற்றது. அரச தலைவர் தேர்தல் தொடர்பில் தமிழ்க் கட்சிகள் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வர வேண்டும் என்பதற்கான ஆவணம் தயாரிக்கும் பேச்சிலும் அந்தக் கட்சி பங்கேற்றது. ஒரு முடிவை தனித்து எடுத்துவிட்டு, அதன் பின்னர் இடம்பெற்ற கலந்துரையாடலில் அந்தக் கட்சி கலந்து கொண்டது முரண்நகையானது.

### திருத்தங்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய நான்காம் சுற்றுப் பேச்சு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. மாலை 5 மணிக்கு ஆரம்பமான சந்திப்பு இரவு 10 மணிக்கு இணக்கப்பாடு எட்டப்படாமல் முடிவுக்கு வந்தது. இந்தக் கூட்டத்தில் கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டிருந்தனர். கட்சிகள் சமர்ப்பித்த யோசனைகளின் அடிப்படையில், வேட்பாளர்களுடன் பேச்சு நடத்துவதற்கான ஆவணம் பல்கலைக்கழக மாணவர்களால் தயாரிக்கப்பட்டிருந்தது. அது சந்திப்பில் வழங்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒவ்வொரு விடயங்களிலும் திருத்தங்களைச் செய்து கொண்டிருந்தது. இது கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த ஏனைய கட்சிகளுக்கு எரிச்சலூட்டியது. மூன்று சுற்றுப் பேச்சுக்களில் இணங்கிக் கொண்ட விடயங்களில் கூட இறுதி நேரத்தில் அவர்கள் திருத்தம் செய்தமையே அதற்குக் காரணம். வேறு கூட்டத்தில் கலந்து கொள்ளவேண்டியிருப்பதால் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் வெளியேறினார்.

### வில்லங்கம்

இதன் பின்னர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆடத் தொடங்கியது. தமிழ் அரசுக் கட்சி, புளொட், ரெலோ தவிர்ந்த ஈபிஆர்எல்எவ், தமிழ் மக்கள் கூட்டணி ஆகிய கட்சிகளும் பதிலடி கொடுக்கத் தொடங்கின. ஒவ்வொரு விடயத்தையும் முதலிலிருந்து மாற்றுவது என்றால் முன்னைய கூட்டங்கள் எதற்காக நடந்தன என்று சுரேஸ் பிரேமசந்திரன் காட்டமாகக் கேள்வி எழுப்பினார்.

முன்னணியினர் குதர்கமான யோசனைகளை முன்வைத்தனர். ஒரு கட்டத்தில் மாகாணசபை முன்னாள் உறுப்பினர் கஜதீபன், தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்ற தங்களின் முடிவை நோக்கி நகரப் போவதாக, முன்னணியின் உறுப்பினர் சுகாஸ் கூறியிருந்ததை இதன்போது சுட்டிக்காட்டினார். நீங்கள் ஒரு முடிவை எடுத்து அறிவித்து விட்டு அதை நோக்கி ஏனைய கட்சிகளை நகர்த்துகின்றீர்களா என்றும் கேள்வி எழுப்பினார். தேர்தல் புறக்கணிப்புக்கு எதிராக 5 கட்சிகளும் கடுமையான பதிலடியைக் கொடுத்ததால், முன்னணி அடங்கியது.

ஒவ்வொரு விடயமாக ஆராயப்பட்டு முடிவு நிலை எட்டப்பட்ட தருணத்தில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வில்லங்கத்துக்கு, குதர்க்கமான விடயத்தை தூக்கிப் பிடித்தது.

### இடைக்கால அறிக்கை

இந்த அரசின் ஆட்சிக் காலத்தில் புதிய அரசமைப்பை உருவாக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அதன் அடிப்படையில் இடைக்கால அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த இடைக்கால அறிக்கை ஒற்றையாட்சியையே வலியுறுத்துகின்றது. கூட்டமைப்பு இவ்வளவு காலமும் மக்களை ஏமாற்றியது. அதனை அம்பலப்படுத்தவேண்டும். அந்த அறிக்கை நிராகரிக்கப்படுகின்றது என்பதையும், அரச தலைவர் வேட்பாளர்களுடனான பேச்சின் போது முன்வைக்கும் நிபந்தனைகளில் உள்ளடக்கப்பட வேண்டும் என்று முன்னணி குண்டைத் தூக்கிப் போட்டது.

இந்த அரசின் காலத்துடன் அது முடிந்துவிடும். எனவே அதனைச் சேர்க்கத் தேவையில்லை. அப்படிச் சேர்ப்பது என்றால், பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி- செல்வா ஒப்பந்தம், இவை எல்லாவற்றையும் நிராகரிக்கின்றோம் என்பதையும் சேர்ப்பதா? என்று ஏனைய கட்சிகள் முன்னணியுடன் மல்லுக் கட்டத் தொடங்கின. முன்னணியோ அதனை விடுவதாக இல்லை. இதனால் 5 மணி நேரக் கலந்துரையாடல் இறுதியில் இணக்கப்பாடின்றி முடிந்தது.

முடிவு எடுத்து விட்டு பேசச் சென்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியே இந்தக் குழப்பங்கள், இணக்கப்பாடின்மைக்கு முழுக் காரணம் என்று சந்திப்பில் கலந்து கொண்ட ஏனையோர் கூட்டாகக் குறிப்பிடுகின்றனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இத்தகைய விடேத்தியான நடவடிக்கைகள், தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியில் பயணிப்பதற்கு எப்போதும் தடையாகவே இருக்கும். ■

## ஆசிரியருக்கான கடிதம்

# வந்தாரு...! பாத்தாரு...! போனாரு...!

யாழ்ப்பாண மாநகர எல்லைக்குட்பட்ட சந்தைகளில் குருநகர் சின்னக்கடை பொதுச் சந்தை மிகவும் முக்கியமான சந்தையாகும். இங்கே மீன் சந்தை, மரக்கறிச் சந்தை, இறைச்சிக்கடை என பலவும் இயங்குகின்றன. ஆனால் இந்தச் சந்தை பல தசாப்தங்களாக சீரமைப்புச் செய்யப்படவில்லை. கடந்த வருடம் மாநகர முதல்வர் ஆனல்ட் சின்னக்கடை சந்தையை வந்து பார்த்தார்.

பொறியியலாளர் சகிதம் வந்த முதல்வர் மரக்கறி வியாபாரிகளாகிய எம்மிடம் குறைகளைக் கேட்டறிந்தார். சின்னக்கடைச் சந்தையை மாபிள் பதித்து கண்ணாடிப் பிற்றிங் பொருத்தி மரக்கறி வியாபாரிகளுக்கு எல்லாம் ஒரே மாதிரியான பட்டறை அமைத்தெல்லாம் தருவதாகச் சொன்னார். பாசையூர் பொதுச் சந்தையை மிகவும் அழகாக சீரமைப்புச் செய்த மாநகர முதல்வர், எமது சந்தையையும் சீரமைப்பு செய்வார் என நம்பியிருந்தோம். ஆனால் ஒரு வருடம் கடந்தும் முதல்வரை இந்தப் பக்கமே காணவில்லை. முதல்வர் அவர்களே எங்கள் சந்தைப் பக்கமும் உங்கள் கடைக்கண் பார்வையை கொஞ்சம் காட்டுவீர்களா?

*மரக்கறி வியாபாரிகள் சார்பாக.*
*ந.ரூபன், குருநகர்.*

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்ன[illegible] அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த [illegible] மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் தின நிகழ்வுகள்



யாழ்ப்பாணம்,ஒக்.15
யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தின் சிறுவர், முதியோர் மற்றும் சிறப்புத்தேவையுடையோர் தின நிகழ்வுகள் அண்மையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இடம்பெற்றன. யாழ்ப்பாணம் பிரதேச செயலர் எஸ்.சுதர்சன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக தேசிய கொள்கைகள் பொருளாதார விவகாரங்கள் மீள் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் மேலதிக செயலர் பா.செந்தில் நந்தனன் கலந்துகொண்டார். சிறுவர், முதியோர் மற்றும் சிறப்புத் தேவையுடையோரின் பங்குபற்றுதலுடன் பல கலை நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. மேலும் நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்டச் சமூர்த்தித் திணைக்களப் பணிப்பாளர் மங்களேஸ்வரன்,
கைதடி முதியோர் இல்ல ஓய்வு பெற்ற அத்தியட்சகர் க.மகேஸ்வரன்,
யாழ்ப்பாணம் தலைமைப்பீட பொலிஸ் பொறுப்பதிகாரி வி.சீ.பிரசாத் பெனார்ந்து,யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் எழில்வேந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஐ)

# வவுனியாவில் 5 கிராமங்களில் குடிதண்ணீர் திட்டம் ஆரம்பிப்பு

*வவுனியா,ஒக்.15*


*வவுனியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 5 விவசாயக் கிராமங்களில் குடி தண்ணீர்த் திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.*



வவுனியாவில் ஏற்பட்டுள்ள குடி தண்ணீர்த் தட்டுப்பாட்டையடுத்து, கிராம அமைப்புக்களின் கோரிக்கைக்கு அமைவாக தமிழ், சிங்கள சகோதரர்களின் நிதிப்பங்களிப்பில் இந்தக் குடி தண்ணீர்த் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.
விவசாயக் கிராமங்களை உள்ளடக்கிய நாமல்கமகே விகாரைக்கு அருகிலும்,
கணேசபுரம் பொதுக் காணியொன்றிலும்,
புதிய சின்னக்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்திலும்,
எல்லப்பர்மருதங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்திலும், சிதம்பரபுரம் கற்குளம் படிவம் ஒன்றில் சனசமூக நிலையத்தின் ஏற்பட்டில் கிராம அபிவிருத்திச் சங்கத்திலும் குடிதண்ணீர்த் தேவைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.
அதேவேளை மணிப்புரம் மக்களின் தேவைகள் கேட்டறியப்பட்டன. நாமல்கமே பகுதியில் வசித்து வரும் விவசாயக் குடும்பங்களுக்கு சோளச் செய்கைக்கான விதைகளும் வழங்கி வைக்கப்பட்டன.
சின்னப்புதுக்குளம் முன்பள்ளிக்கு மின்விசிறி மற்றும் ஒரு தொகுதி கொப்பிகள், அலுவலகத் தேவைக்கு அலுமாரிக் கொள்வனவுக்கான பணம் என்பனவும் வழங்கப்பட்டன. சமூக ஆர்வலர் எஸ். ஜோர்ஜ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுகளில், கிராம அலுவலகர்கள், கிராம அமைப்புக்கள், பொது மக்கள் எனப் பலர் நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

(க-110)











வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவில் சமுத்திரத் தீர்த்தத் திருவிழா நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் இந்தத் தீர்த்த நிகழ்வில் பங்குபற்றினர்.

(க-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளை பிரம்பு தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.15
சுன்னாகம் லயன்ஸ் கழகமும் வாழ்வக சமூகமும் இணைந்து நடத்தும் பன்னாட்டுவெள்ளைப்பிரம்பு தின நிகழ்வு எதிர்வரும் 19ஆம்திகதிசனிக்கிழமை நடைபெறவுள்ளது.
சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் க.பிரதாபன்,கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரி விரிவுரையாளரும் வாழ்வகத் தலைவருமான ஆ. இரவீந்திரன் ஆகியோர் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முன்றில் மாலை 4 மணிக்கு விழிப்புணர்வுப் பவனி ஆரம்பமாகி வாழ்வக கேட்போர் கூடத்தைச் சென்றடையும்.
அங்கு பொதுக் கூட்டம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## காலணி உற்பத்தி தொடர்பான பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம்,ஒக்.15
காலணிகள் உற்பத்தி செய்யும் பயிற்சிப் பட்டறை யாழ்ப்பாணத்தில் நாளைமறுதினம் வியாழக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது. சங்கானையிலுள்ள அந்திரான் தோல் இறப்பர் பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் பயிற்சி பட்டறை இடம்பெறவுள்ளது.
அன்றைய தினம் காலை 8.45 மணி தொடக்கம் 4.45 மணி வரை சங்க அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. பயிற்சிப் பட்டறை 12 நாள்கள் இடம்பெறும். இதில்ஆண், பெண் இருபாலாரும் பங்குபற்றிப் பயனடையலாம்.
இப்பயிற்சிப் பட்டறையில் பெண்களுக்கான காலணிகள் (சன்ரில்ஸ்) மற்றும் ஆண்களுக்கான சப்பாத்துகள் உற்பத்தி செய்வது தொடர்பில் பயிற்சி வழங்கப்படும். பயிற்சிப்பட்டறையில்கலந்து கொள்பவர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுமற்றும்மதியபோசனம் என்பன வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வடக்கு-கிழக்கிலுள்ள இந்துக்கள் கட்டமைப்பை ஏற்படுத்தவேண்டும்

### மன்னாரில் நடைபெற்ற சைவ எழுச்சி மாநாட்டில் சின்மயா மிசனின் சுவாமிகள் வலியுறுத்து

*யாழ்ப்பாணம், ஒக். 15*

இந்து சமயம் சார்ந்த நிலையிலே துறவிகள், அந்தண சிவாச்சாரியார்கள், சைவ குருமார்கள், மதத் தலைமையை ஏற்றிருக்கக் கூடியவர்கள், மத குருமார்கள் என்ற வரையறைக்குள் வரக்கூடியவர்கள் யாவரும் ஒன்று சேர வேண்டும். எமது சமயத்துக்காக தங்களை அர்ப்பணிக்கக் கூடியவர்கள் ஒன்றுசேர்ந்து தமிழரின் தாயகம் என்று சொல்லக்கூடிய வடக்கு- கிழக்கு மண்ணிலே ஒரு கட்டமைப்பை உருவாக்கவேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் சின்மயா மிசனின், வணக்கத்துக்குரிய சிதாகாஸாணந்தா தெரிவித்துள்ளார்.
மன்னாரில் சில நாள்களுக்கு முன்னர் நடைபெற்ற சைவ எழுச்சி மாநாட்டில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:
எங்களுடைய சைவ நாகரிகங்களை சிறுபிள்ளைப் பராயத்திலிருந்தேஅறநெறிகளில்பலவிடயங்களைக் கற்றுக்கொண்டிருக்கின்றார்கள். அவற்றை மேம்படுத்தும்போதுவாழ்க்கைமேம்படும்.அனைத்துச் சமயங்களுக்கும் முன்பாகவே எமது சமயம் தோன்றியிருக்கின்றது. எப்போது இந்த உலகம் தோற்றம் பெற்றதோ அப்போதே எமது சமயம் தோன்றிவிட்டது. இதனை யாரும் அழித்து விட முடியாது.
இந்துதர்மத்துக்கு, இந்துவாழ்க்கை முறைக்கு, பண்பாடு, கலைகலாசாரத்துக்கு காலங்காலமாக அவ்வப்போது பல தரப்பினர் பல இடைஞ்சல்களை, இன்னல்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றனர்.
எத்தனை சவால்கள்வந்தாலும் எத்தனை இடைஞ்சல்கள் வந்தாலும் அற்புதமாக தன்னுடைய பயணத்தைத் தொடர்கிறது. இந்தத் தத்துவ அடிப்படையில் நாங்கள் இந்துக்களாகஎங்கள்கடமைகளைச்செய்ய வேண்டும்.

**என்ன செய்கிறோம்**

நாம் ஒரு தனி மனிதனாக, இந்துவாக என்ன செய்திருக்கின்றேன் என்றுசிந்திக்கவேண்டும். அறநெறி மாணவர்களோ, பெரியவர்களோ நாமெல்லோரும் நாங்கள் சைவ சமயத்தவராக என்ன செய்து கொண்டிருக்கின்றோம் என்று சிந்தித்து ஒவ்வொருவரும் சமய வாழ்வியலைப் பின்பற்றவேண்டும்.
இவ்வளவு நாளும் விபூதி பூசவில்லையெனில் இன்றிலிருந்துவிபூதி பூசவேண்டும்.
இவ்வளவு நாளும் வாரத்தில் ஒரு நாள்கூட கோவிலுக்குச் செல்லவில்லையேல், இனிமேல்வாரத்தில் ஒரு நாளாவது கோவிலுக்குச் செல்லவேண்டும்.

**கேதீச்சர வீதி வளைவு அமைக்கவேண்டும்**

திருக்கேதீச்சரத்தில்நிரந்தரவளைவு அமைய வேண்டும் என்றும் பிரார்த்தனை செய்யவேண்டும். அந்த பிரார்த்தனைக்கு அவ்வளவு சக்தி இருக்கிறது. எங்களுடைய ஆத்ம சக்திகளை அதிகரிப்பதற்காகத் தான் நாங்கள் ஆலயம் சென்று இறைவனை வணங்குகின்றோம். தேவாரம்பாடுகின்றோம். பஞ்சபுராணம் பாடுகின்றோம். இறைவனுடைய நாமங்களைப் பாடுகின்றோம். ஆக எமது நோக்கம் என்னவோ நிறைவேறும் வரை நாம் வழிபாடு செய்து கொள்ள வேண்டும்.
என்னுடைய சமயம். என்னுடைய கலாசாரம், என்னுடைய பண்பாடு இவற்றுக்காக அர்ப்பணிக்கவேண்டும். இந்தஎண்ணம்எம்ஒவ்வொருவருக்கும் மேலோங்கவேண்டும். இன்றைய காலத்தில் இது கட்டாய தேவை. எங்களுடைய குருமார்களும் சிவாச்சாரியார்களும் தங்களை இவ்வாறான பணிகளில் ஈடுபடுத்தவேண்டும்.
ஆலயங்களின் ஒன்றியம் அந்தணர் ஒன்றியம் இயங்கிக் கொண்டிருக்கிறன. இந்தக்கட்டமைப்புக்கள் எல்லாவற்றையும் சமயம் சார்ந்த ஆன்மிகம்சார்ந்தகட்டமைப்புக்கள் ஒன்றிணைத்து ஒரு தலைமைத்துவத்தை உருவாக்கும்பொழுதுநிச்சயமாக தலைமைத்துவத்தை உருவாக்கலாம்- என்றார். (த)



## காதுகேட்கும் கருவி கையளிப்பு

காங்கேசன்துறை,ஒக்.15
கேட்கும் சக்தி குறைந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்குக் காது கேட்கும் கருவிவழங்கப்பட்டது.
யாழ்ப்பாணம், காங்கேசன்துறை லயன்ஸ் கழகத்தால் இந்த உதவி கழக அலுவலகத்தில் வைத்து நேற்றுமுன்தினம் தலைவர் லயன் கலாநிதி கா.பீ.ஜெயவிந்தனால் வழங்கப்பட்டது. (ஐ-9)

## கல்வியியற்கல்லூரி புதிய மாணவர்கள் அனுமதி நாளை

யாழ்ப்பாணம்,ஒக்.15
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் புதிய மாணவர்களுக்கான அனுமதி நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளது.
மாணவர்கள் கல்லூரி விடுதியில் தங்கி நின்று கல்வி பயில்வதற்குச் சகலவித ஆயத்தங்களுடன் காலை 9 மணிக்கு வருகை தர வேண்டும்.
கல்லூரிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்குக் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
எனவே மாணவர்கள் தவறாது சமூகமளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் www.jncoe.net என்ற இணையத்தளத்தினூடாக அறிந்து கொள்ள முடியும் எனக் கல்லூரியின் பீடாதிபதி சு.பரமானந்தம்தெரிவித்துள்ளார். (ஐ)



## தென்மராட்சியில் வீடுகள் கையளிப்பு

தெல்லிப்பழை,ஒக்.15
தெல்லிப்பழைப்பிரதேசசெயலகப்பிரிவுக்குட்பட்ட தென்மயிலைக் கிராமத்தில் அமைக்கப்பட்ட வீடுகள் நேற்று முன்தினம்அவற்றின்உரிமையாளர்களிடம்கையளிக்கப்பட்டன. தெல்லிப்பழை பிரதேச செயலர் ச.சிவசிறி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மீள்குடியமர்வு, மறுவாழ்வு, வடக்கு அபிவிருத்தி இந்து சமய அலுவல்கள் அமைச்சின் செயலாளர் [illegible] கலந்துகொண்டு வீடுகளைத் திறந்து வைத்தார். (ஐ-9)

## புதிய கட்டடத்துக்கு அடிக்கல் நடுகை

யாழ்ப்பாணம், ஒக். 15
பலாலி வடக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கானபுதியகட்டத்துக்குஅடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.



மீள் குடியேற்ற அமைச்சின் 20 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் இந்த கட்டடம் இரண்டு மாடிகள், மலசல கூடம் , கிணறு உள்பட அனைத்து வசதிகளையும்கொண்டதாக அமையவுள்ளது. (த-7)

## புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

2019ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில்பரீட்சைப்பெறுபேறுகள் கடந்த வாரம் வெளியாகின. அதனடிப்படையில்பாடசாலைரீதியானபெறுபேறுகள் வருமாறு

**[illegible] பாடசாலை**

இந்தப் பாடசாலையின் பெறுபேறுகள் [illegible] பத்திரிகையில் பிரசுரமானது. அதில் இருவரின் பெயர்கள் தவறவிடப்பட்டுள்ளன. அவை,
பி.கதிரவன் - 152, ச.துவாரகன் - 152

**பனங்காமம் மூன்று முறிப்பு**

**அ.த.க. பாடசாலை**

அ.ருசானி- 184, ர.சஞ்சனா -178, வே.நிலக்ஷி- 165

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நினைவஞ்சலி நினைவாக உபகரணங்கள் வழங்கப்பட்டன

கிளிநொச்சி, ஒக். 15
கிளிநொச்சி பளை பச்சிலைப்பள்ளியில் வறுமையிலுள்ள மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.
அரியாலையை வதிவிடமாக கொண்ட தாருஷாவின் முதலாம் ஆண்டு நினைவாக அவ ரது உறவினரான சுவிஸ் வாழ் தனபாலசிங்கம்நித்தியகரன் (வவி) கற்றல் உபகரணங்களை நேற்று முன்தினம் வழங்கினார்.
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பச்சிலைப் பள்ளிப் பிரதேச காரியாலயமான தாயகத்தில் உதவி வழங்கும் நிகழ்வு பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உபதவிசாளர் கயன் தலைமையில் நடைபெற்றது.
நிகழ்வில் பச்சிலைப் பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சு. சுரேன், உறுப்பினர்களான ரமேஷ், கோகுல்ராஜ், வீரவாகுதேவர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த-6)

## வழிகாட்டல் கருத்தரங்கு

மல்லாவி, ஒக்.15
இந்த வருடம் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு கடந்த 5ஆம்திகதி தொடக்கம் நடைபெற்று வருகிறது. துணுக்காய் வலயக்கல்வி அலுவலகத்தின் அனுமதியுடன் கல்விமேம்பாட்டுஅமையத்தின்ஏற்பாட்டில் முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரியில் சனி மற்றும்ஞாயிறுதினங்களில் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரைகருத்தரங்கு இடம்பெற்று வருகிறது.
தொடர்ந்து எதிர்வரும் 27ஆம்திகதிவரை இந்தக் கருத்தரங்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-74)



# டெங்குத் தாக்கத்தைக் கட்டுப்படுத்த பட்டதாரிப் பயிலுநர்களுக்கு பயிற்சி

சாவகச்சேரி, ஒக்.15
தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்குத் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு, பிரதேச செயலகத்துக்கு நியமிக்கப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்களைப் பயன்படுத்த பிரதேச செயலர் ஒப்புதல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து டெங்குப் பரிசோதனையில் ஈடுபடுத்தப்படவுள்ள பட்டதாரிப் பயிலுநர்களுக்கு டெங்கு தொடர்பான விழிப்புணர்வுப் பயிற்சி நேற்று வழங்கப்பட்டது.
பிரதேச செயலக மண்டபத்தில், உதவிப் பிரதேச செயலர் திருமதி வி. கௌசிகன் தலைமையில் நடைபெற்ற பயிற்சிப் பட்டறையில் சாவகச்சேரி மேலதிக சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் எஸ்.சுகன்யா, மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர் க.கர்ணன் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் விளக்கங்களை வழங்கினர்.
பிரதேசத்தில் டெங்குத் தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகளவில் காணப்படுவதாக சுகாதார அமைச்சின் டெங்குக் கட்டுப்பாட்டு அலகினால் அறிவிக்கப்பட்டதையடுத்து, டெங்கின் தாக்கத்தைக் குறைக்க தொடர் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும், அதற்கு போதிய ஆளணி வசதிகள் செய்து தருமாறும் சுகாதாரப் பணியகத்தினர் பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுத்தனர்.
அதனையடுத்து தற்போது செயலகத்தில் நியமிக்கப்பட்டுள்ள பட்டதாரிப் பயிலுநர்களை டெங்கு நடவடிக்கையில் ஈடுபடுத்த பிரதேச செயலர் அனுமதி வழங்கியுள்ளார். அதற்கமைவாக பட்டதாரிப் பயிலுநர்களுக்கு டெங்குப் பரிசோதனை தொடர்பான அறிவூட்டல் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது.
இதுவரை காலமும் சுகாதாரத் திணைக்களத்தால் டெங்குப் பரிசோதனைகள் இடம்பெறும்போது, பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் வெளிக்கள அலுவலர்களுடன், செயலக அலுவலர்களும் கலந்து கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## அனலைதீவில் 4 வீடுகள் மக்களிடம் கையளிப்பு

அமைச்சின் செயலர் பங்கேற்றார்



யாழ்ப்பாணம், ஒக். 15
அனலைதீவில்தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம், மறுவாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழில் பயிற்சி, திறன் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சு அமைத்த நான்கு வீடுகள் மக்களிடம்கையளிக்கப்பட்டன.
அமைச்சின் செயலர் வீ.சிவஞானசோதிநேற்று முன்தினம் வீடுகளைப் பயனாளிகளிடம் கையளித்தார்.
தொடர்ந்து கிராமமட்ட அமைப்புகளின்பிரதிநிதிகளைச் சந்தித்த செயலர், அனலைதீவில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் மக்களின் தேவைகளைக் கேட்டறிந்தார். அவற்றைப் பெற்றுத்தருவது தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும் தெரிவித்தார். புளியந்தீவு நாகேஸ்வரர்ஆலயத்தில் வழிபாடுகளிலும் அவர் ஈடுபட்டார். (த-154)



## வாணி விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

அளவெட்டி, ஒக்.15
அளவெட்டித் தெற்கு கலைவாணி சனசமூக நிலையத்தின் வாணி விழாவும், பரிசளிப்பு நிகழ்வும் கலைவாணி சனசமூக நிலையமுன்றலில் கடந்த வாரம் இடம்பெற்றன.
நிலையத்தலைவர் வை.சின்னப்பு தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், விருந்தினராக லயன்.இ.சிவநாயகம் மற்றும் அளவெட்டித் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் உபதலைவர் மு.சந்திரசேகரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.
நிகழ்வில் மாணவர்களின் கலைநிகழ்வுகளும், பரிசளிப்பும் இடம்பெற்றன. (க-35)





பன்னாட்டு முதியோர் தினத்தை முன்னிட்டு, மன்னார் பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தில் நேற்று முன்தினம் சிறப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன. அருட்பணி நியூட்டன் அடிகளார் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டது. திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. (க-60)



## ஆசிரியர் தின நிகழ்வு

கொடிகாமம், ஒக்.15
கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலையின் ஆசிரியர் தினநிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இராசலிங்கம் கலையரங்கில் இடம்பெற்றது.
அதிபர் சி.சோமசுந்தரம் தலைமையில், கேக் வெட்டி ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை தொழில்நுட்ப அலுவலர் இறட்ணகரன், சிறப்பு விருந்தினராக பழைய மாணவரும் யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறை இறுதியாண்டு மாணவருமான து.வின்சன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர். (க-159)

## பாதுகாப்பு சபையின் மதிப்பளிப்பு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.15
இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் வடக்கு மாகாண மட்ட அலுவலர், ஓய்வூதியர், மாணவர் மதிப்பளிப்பு நிகழ்வு யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி முதல் நண்பகல் 12 மணிவரை நடைபெறும்.
இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் பொது முகாமையாளர் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக சமூக பாதுகாப்புச் சபையின் தலைவரும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களின் மாவட்டச் செயலர்களும் கலந்து கொள்வர்.
நிகழ்வில் மாணவருக்கு வத்திலேயே முதுமைப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் தூர நோக்கான பயன்மிக்க ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியமைக்காக, 2017/2018 ஆம் ஆண்டில் உன்னத பங்களிப்பை வழங்கிய வடக்கு மாகாணத்தின் அலுவலர்கள், 2018ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிச் சிறப்புச் சித்தியடைந்த மாணவர்கள், ஓய்வூதியப் பயனாளிகள் மதிப்பளிக்கப்படுவர் என்று இலங்கை சமூகப் பாதுகாப்பு சபையின் மூத்த இணைப்பதிகாரி பா.பிரதீபன் அறிவித்துள்ளார். (க)



கிளிநொச்சி குமுழமுனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் மாணவன் யோ. ஒனேஸ் 2019 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 154 புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார். (க-222)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிகளைத் துப்புரவு செய்ய விவசாயிகளுக்குத் தடை

### அதிகார சபையின் சொற்படி மாவட்டச் செயலர் விதித்தார்

முல்லைத்தீவு, ஒக். 15

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய், சலப்பையாறு விவசாய நிலத்தை அந்தக் காணிகளுக்கு உரிய தமிழ் மக்கள் துப்புரவு செய்யும் நிலையில், துப்புரவுப் பணியை உடனடியாக நிறுத்தும்படி மகாவலி அதிகாரசபை கேட் டுக்கொண்டதன்படி முல்லைத்தீவு மாவட்ட செயலர் றூபவதி கேதீஸ்வரன் உத்தரவிட்டுள்ளார் என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

விவசாயிகளின் கோரிக்கைக் கமைய மக்கள் பிரதிநிதிகளால் துப்புரவுப் பணிக்கென்று நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன. உரிய திணைக் களங்களின் அனுமதியுடனேயே துப்புரவுப் பணிகளில் தமிழ் மக்கள் ஈடுபட்டிருந்தனர். இந்த நிலையில் துப்புரவு நிறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை மகாவலி அதிகாரசபையின் (எல் பிரிவு) வதிவிடத் திட்ட முகாமையாளரின் கடந்த 8ஆம் திகதிய கடிதம் சார்பாக, துப்புரவுப் பணியை உடனடியாக நிறுத்தி, சலப்பையாறு பகுதியிலிருந்து இயந்திரங்களை அகற்றுமாறும், அங்கு வேறு எந்த நடவடிக்கையிலும் ஈடுபட வேண்டாம் என்றும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதிகள், முல்லைத்தீவு கமநல சேவைத் திணைக்கள உதவி ஆணையாளர் மற்றும் இலங்கை மகாவலி அதிகாரசபை வதிவிடத் திட்ட முகாமையாளர் (எல் பிரிவு) ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த அந்தப் பகுதித் தமிழ் மக்கள்,

"பல விவசாயக் காணிகள் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையால் அபகரிக்கப்பட்டுள்ளன.

மீதமாகவுள்ள எமக்குச் சொந்தமான காணிகளையும் அபகரிப்பதற்கு இடம்பெறும் முயற்சியை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

துப்புரவுப் பணிகளின்போது சில பெரும்பான்மை இனத்தவர்கள் மற்றும் பௌத்த மத குரு ஒருவர் இணைந்து, அவை தமது காணிகள் எனக் கூறி துப்புரவுப் பணிகளை நிறுத்துமாறு பலதடவைகள் முரண்பட்டிருந்தனர்.

இதன் தொடர்ச்சியாகவே மகாவலி அதிகாரசபை மாவட்டச் செயலருக்கு அனுப்பிய கடிதத்தின்படி மாவட்ட செயலர் துப்புரவுப் பணியை நிறுத்துமாறு உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஆளுநர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெரியப்படுத்தவுள்ளோம். உரிய தீர்வுகள் கிடைக்காதுவிடில் எமது இடங்களை விட்டு வெளியேறுவதைத்தவிர வேறு வழியில்லை என்று கவலை தெரிவித்தனர். (து-246)



## இளையோருக்கு ஊடகத் துறை சார்பான பயிற்சிகள்

மன்னார், ஒக்.15

மன்னார் மற்றும் வவுனியா மாவட்ட இளையோருக்கான ஊடகத் துறை சார்பான பயிற்சிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

வவுனியா தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டு 3 நாள்கள் வதிவிடப் பயிற்சியாக நடைபெற்றது.

ஊடகப் பிரிவு தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்தேசியகொள்கைகள் பொருளாதார விவகாரம் மீள்குடி யேற்றம் மற்றும் மறுவாழ்வளிப்பு வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் இந்த பயிற்சி வழங்கப்பட்டது.

பயிற்சியின் வளவாளர்களாக இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன அறிவிப்பாளர் அஹமட் எம்.நசீர் மற்றும் வசந்தம் டிவி அறிவிப்பாளர் அப்துல் மஜீத் ஜெசீம் கலந்து கொண்டனர்.

பயிற்சியில் பங்கு பற்றிய 50 இளையோர்களின் திறமைகள் பரிசீலிக்கப்பட்டன அவற்றில் பத்து பேர் தேசிய மட்டத்துக்கு தெரிவாகினர் என்று தெரிவிக்கப் பட்டது.பயிற்சியில் பங்கு பற்றிய அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (ஐ)



## சிறுவர் தின நிகழ்வு

மன்னார்,ஒக்.15

மன்னார் , மாந்தை மேற்குப் பிரதேச செயலகத்தின் சிறுவர் தின நிகழ்வு நேற்றுமுன்தினம் மன்னார் ஈச்சலவக்கைமகாவித்தியாலயத்தில்சிறப்பாகஇடம்பெற்றது.

பிரதேச செயலர் எஸ்.கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக மடு வலயக்கல்வி உதவிப் பணிப்பாளர் எஸ்.லோகேஸ்வரன் கலந்துகொண்டார்.

இதன்போது சிறுவர் விளையாட்டு, கலை நிகழ்வுகள் இடம் பெற்றதோடு சிறுவர்களுக்குப் பரிசில்களும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் நூற்றுக்கணக்கான சிறுவர்கள் மற்றும்பெற்றோர் கலந்து கொண்டனர். (ஐ-56)

## பெண்ணுடன் அதிகாரமாக நடந்த பொலிஸார் மீது மக்கள் விசனம்

வவுனியா, ஒக். 15

வீதியில் பயணித்த பெண்ணுடன் மோதி, விபத்தை ஏற்படுத்திய நபர், தான் பொலிஸ் எனத்தெரிவித்து அந்தப் பெண் பயணித்த உந்துருளியின் திறப்பை எடுத்துச் சென்ற சம்பவம் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது.

பொலிஸாருக்கு இருக்கும் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்திய அந்தப் பொலிஸ் அலுவலகர் மீது மக்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

வவுனியா நகரிலிருந்து கண்டி வீதியூடாகப் பெண் ஒருவர் சூட்டிரக உந்துருளியில் பயணித்தார், அந்தப் பெண் சமிஞ்சையைப் பயன்படுத்தியே வீதியின் மறுபக்கம் திரும்பினார் என்று அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர். எனினும் குறுக்கே மற்றுமொரு உந்துருளியில் பயணித்தநபர் அந்தப் பெண்ணை மோதித் தள்ளினார். பெண் சிறிய காயங்களுக்கு உள்ளானார், உந்துருளிகள் இரண்டும் சேதமடைந்தன. பெண்ணை மோதித் தள்ளிய நபர், தான் பொலிஸ் அலுவலகர் என்று தெரிவித்து, பெண்ணை மிரட்டி, அந்த உந்துருளியில் இருந்த திறப்பைக் கழற்றினார். பொலிஸ் நிலையம் செல்வதாகத் தெரிவித்து தான் வந்த உந்துருளியையும் சம்பவ இடத்திலேயே விட்டுவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார்.

குறித்த பொலிஸ் அலுவலகரின் அதிகாரத் திமிரைக் கண்டு சம்பவ இடத்தில் நின்றவர்கள் விசனித்தனர். பெண்ணுடன் மோதியது மட்டுமன்றி அவருடைய திறப்பைப் பறித்துச் சென்ற பொலிஸ் அலுவலகருக்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர்.

உந்துருளிகள் இரண்டும் சில மணிநேரம் வீதியில் நின்றதால், விபத்துக்குள்ளான பெண் 119 என்ற அவசர பொலிஸாருக்கு தகவல் வழங்கினார். சம்பவ இடத்துக்கு வந்த வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். [illegible] உந்துருளிகளையும் வவுனியாப் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச்சென்றனர். (ஐ-ரி4)

# பலாலி ஓடுபாதையை பரிசீலிக்கிறது இந்தியா

கொழும்பு, ஒக். 15

யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையத்தின் ஓடுபாதையை பரிசீலனை செய்து, இந்திய அரசுக்கு இறுதி அறிக்கை சமர்ப்பிப்பதற்காக இந்திய நிபுணர்கள் குழுவொன்று இன்று பலாலிக்குப்பயணம்மேற்கொள்ளவுள்ளது.

இந்திய அரசுக்குச் சொந்தமான எயர் இந்தியாவின் துணை நிறுவனமான அலையன்ஸ்எயர், வானூர்தியேயாழ்ப்பாணம் அனைத்துலகவானூர்திநிலையத்துக்கான முதலாவது பயணத்தை மேற்கொள்ளவுள்ளது. இந்த நிலையிலேயே, புதிதாக அமைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் அனைத்துலகவானூர்தி நிலையத்தின் ஓடுபாதையை ஆய்வு செய்து, இந்திய அரசுக்கு இறுதியான அறிக்கையை [illegible] இந்திய நிபுணர்களின் குழு [illegible] (ம)

## மண்புழு உர தயாரிப்பு தொடர்பான செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஒக்.15

சுயதொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் நோக்கில் இலவசமாக மண்புழு உர வகைகளின் தயாரிப்பு தொடர்பான செயலமர்வு ஒன்று நடைபெறவுள்ளது. பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் விதாதா வள நிலையத்தின் ஏற்பாட்டில் நாளை புதன்கிழமை விதாதாவளநிலைய மண்டபத்தில்காலை9மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந்தச் செயலமர்வுகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் அன்றைய தினம் வருகைதந்து பயன்பெறுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஐ)

## பாதீடு தயாரிப்பது தொடர்பான கலந்துரையாடல்

கொடிகாமம்,ஒக்.15

சாவகச்சேரிப் பிரதேச சபையின் பாதீடு தயாரிப்பது தொடர்பான கலந்துரையாடல்கடந்த வியாழக்கிழமை சபை மண்டபத்தில் தவிசாளர் க. வாம தேவன் தலைமையில்நடைபெற்றது.

இதன்போதுசபைஉறுப்பினர்கள்,தொழில்நுட்ப அலுவலர்கள், திட்டங்களுக்குப் பொறுப்பான அலுவலர்கள்,உபஅலுவலகங்களின் பொறுப்பதிகாரிகள், செயலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

2020ஆம் ஆண்டுக்கான பாதீடு தயாரிப்பதற்கான முதற்கட்ட அமர்வே தற்போது நடைபெற்றது.

17.07 மில்லியன் எதிர்பார்த்த மொத்த வருமானமாகவும், அதில் ஒரு மில்லியன் சந்தையின் அபிவிருத்திக்கும், மிகுதி16.07மில்லியன் 2020 ஆம் ஆண்டுக்கானவருமானமாகஎதிர்பார்க்கப்படுகிறது.அத்துடன் ஒவ்வொரு உறுப்பினர்களும் 0.5 மில்லியன் ரூபா வீதம் கிராம உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கானமுன்மொழிவுகளை ஒரு கிழமைக்கு[illegible] சபையில் சமர்ப்பிக்கவேண்டும்எனவும் தவிசாளர் கோரிக்கை விடுத்தார். (ஐ-159)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 150 குடும்பங்களின் தென்னைகளில் சிவப்பு வண்டுகளின் கடும் தாக்கம்

## தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 15

வடக்கு மாகாணத்தில் 150 குடும்பங்களின் தென்னைகளில் சிவப்பு வண்டின் தாக்கம் அதிகமாக உள்ளதாக யாழ்ப்பாணப் பிராந்திய தென்னைப் பயிர் செய்கைச் சபைக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று சபை தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாணத்தில் மக்களின் வாழ்வாதாரத்தைக் கருத்திற் கொண்டு தென்னம் கன்றுகள் வழங்கப்படுகிறன. அவை வளர்ந்து காய்க்கும் பருவத்தை அடையும்போது சிவப்பு வண்டு தாக்கத்துக்கு உள்ளாகிறது. இதனால் அவை அழிவடைகின்றன. வடக்கு மாகாணத்தில் 6 கிராமத்தில் உள்ள சுமார் 150 குடும்பங்களுக்குச் சொந்தமான தென்னை மரங்கள் சிவப்பு வண்டு தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளன. இது தொடர்பில் களப் பயணம் செய்து மரங்கள் அவதானிக்கப்பட்டுள்ளது. ஆகவே சிவப்பு வண்டுகளை சிக்க வைக்க கூடிய பொறிகள், மக்களுக்கு வழங்கப்படவுள்ளன. ஆகவே சிவப்பு வண்டுத் தாக்கத்திலிருந்து தென்னைகளைப் பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் கிராமங்கள் தோறும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சிவப்பு வண்டு பொறிகள் வைக்கப்பட்டு பின்னர் மாதம் ஒரு முறை அவதானிக்கப்படவுள்ளது. செம்மலை, கொக்குளாய், கொக்குதொடுவாய்,பூதன்வயல், முறிப்பு, உள்ளிட்ட 6 கிராமங்களில் இந்த சிவப்பு வண்டு தாக்கம் அதிகமாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (து-7)



# மதிப்பளிப்பும் நூல் வெளியீடும்

மல்லாவி,ஒக்.15

முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் மற்றும் பாண்டியன்குளம் பகுதிகளைச் சேர்ந்த இளைப்பாறிய சேவையாளர்களுக்கான மதிப்பளிப்பும், நூல் வெளியீடும் அண்மையில் இடம்பெற்றன.

முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரி மண்டபத்தில் அதிபர் து.யேசுதாளந்தர் தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வில் 50 க்கு மேற்பட்ட ஓய்வூதியர்கள் பங்குபற்றியிருந்தனர்.

விருந்தினர்களாக ஓய்வு பெற்ற பீடாதிபதி கு.சிதம்பரநாதன், துணுக்காய் பிரதேச செயலர் ஆ.லதுமீரா, துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் மா.முகுந்தன், ஓய்வுநிலைப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் கு.விஜயபாலா, ஓய்வுபெற்ற மருத்துவர் ப.ரகாம்பரமூர்த்தி உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஜ-74)

# தேர்தலில் எவரை ஆதரிப்பது ஒருமித்த முடிவே அவசியம்!

## சிவசக்தி ஆனந்தன் வலியுறுத்தல்
## தமிழ் அரசுக்குக் கட்சி மீது சாடல்

வவுனியா, ஒக். 15

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் எவரை ஆதரிப்பது என்பது தொடர்பில் அரசியல் கட்சிகளுக்கு இடையில் ஒருமித்த முடிவு அவசியம் என்று வலியுறுத்தினார் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன். மக்களின் ஆணையைப் பெற்றுக்கொண்டு கூட்டமைப்பின் பெயரால் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தன்னை வளர்த்துக் கொள்வதிலேயே ஈடுபட்டது என்றும் அவர் குற்றம்சாட்டினார்.

இது தொடர்பில் அவரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஆயுதப் போராட்டம் 2009ஆம் ஆண்டு மௌனிக்கச் செய்யப்பட்டதன் பின்னர், தமிழ் மக்களுக்கு இருந்த ஒரே தெரிவு நாடாளுமன்ற ஜனநாயக அரசியல்தான். அதனால்தான் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவளித்தனர். தமிழ் மக்கள் ஒன்றுபட்டு நின்றதால்தான் கூட்டமைப்பின் வெற்றி சாத்தியமாயிற்று. மக்களின் ஆணையைப் பெற்றுக்கொண்டு கூட்டமைப்பின் பெயரால் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தன்னை வளர்த்துக் கொள்வதிலும் அங்கத்துவக் கட்சிகளை ஒதுக்கிவைப்பதிலுமே தனது கவனத்தைச் செலுத்தியது. அதே நேரம் மக்கள் நலனில் அக்கறையின்றியும் செயற்பட்டு வருகின்றது. இவை மக்களை முகம் சுழிக்கச் செய்துள்ளன. எனவே மக்களுக்கு நம்பிக்கையளிக்கக்கூடிய ஒரு புதிய அரசியல் தலைமையை உருவாக்க வேண்டிய நிர்ப்பந்தம் தற்போது ஏற்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டிலிருந்தே இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பயன்படுத்தி தமிழ் மக்களின் நலன்களிலிருந்து விலகிச் செல்லும் முடிவை எடுத்து விட்டது. அப்பொழுதிலிருந்தே தமிழ் அரசுக் கட்சி தன்னிச்சையான முடிவுகளை எடுத்து அவைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவுகளாக அறிவிக்கத் தொடங்கிவிட்டது. இவற்றிற்கெதிராக நாம் குரல் கொடுத்த பொழுதிலும் அவை கணக்கிலெடுக்கப்படவில்லை.

கடந்தமுறை அரச தலைவர் தேர்தலில் இரண்டுகட்சிகளும் இணைந்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்தியிருந்த வேளையில், 'இது சரியான தருணம். எனவே எமது கோரிக்கைகளை நிபந்தனைகளாக வைத்து சில உத்தரவாதங்களைப் பெற்று நாம் எமது ஆதரவினை வழங்குவோம் என்று கூறியதற்கு சம்பந்தன் ஐயா, 'நாம் நிபந்தனைகளை வைத்தால் சிங்கள மக்கள் மைத்திரிக்கு ஆதரவளிக்க மாட்டார்கள். அரசதலைவர்தேர்தல் முடிவடைந்தவுடன் எமது பிரச்சினைகள் தீர்க்கப்படும். என்னை நம்புங்கள்' என்று எமது வாயை அடைத்தார்.

இன்றைய நிலைக்கு முழுமுதற் காரணமும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தன்னிச்சையான செயற்பாடுகளே என்பதை அந்தக் கட்சியினர் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்தத் தேர்தல் அந்தக் கட்சி விட்ட தவறைத் திருத்திக்கொள்வதற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கியிருக்கிறது.

இதை உணர்ந்து தமிழ் அரசுக் கட்சியினர் ஒட்டுமொத்த தமிழ் பிரதிநிதிகளுடன் இணைந்து செயற்பட முன்வரவேண்டும்- என்றுள்ளது. (ம-110)

# நகரசபை தவிசாளர்களுக்கு புதிய கோல உடை

சாவகச்சேரி,ஒக்.15

நகரசபைத் தவிசாளர்கள் கடமை மற்றும் அமர்வுகள் நடைபெறும் வேளைகளில் புதிய கோல உடையும், தவிசாளருக்குரிய ஆபரணமும் அணிய வேண்டும் என்று இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

நகரசபைத் தவிசாளர் வெள்ளியிலான 35 அங்குல நீளமான ஆபரணமும், அலுவலகக் கோல உடையும் அணிய வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் கம்பளையில் நடைபெற்றசம்மேளனப்பொதுச் சபைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. வெள்ளியிலான ஆபரண அணிகலனைத் தயாரிக்க 60 ஆயிரம் ரூபா செலவாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

# தென்மராட்சியில் சுழல்காற்று கூரைகள் தூக்கி வீசப்பட்டன

தென்மராட்சி,ஒக்.15

தென்மராட்சி தெற்கு கோவிலாகண்டி பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை வீசிய சுழல் காற்றால் அங்குள்ள மூன்று குடியிருப்புகள், இந்து கோவில் மற்றும் ஆட்டுக் கொட்டில் ஆகியவற்றின் கூரைப்பகுதி அள்ளுண்டு சென்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

மூன்று குடியிருப்புகளின் கூரைகள் சுழல் காற்றினால் தூக்கி வீசப்பட்டபோதிலும் தெய்வாதீனமாக அங்கிருந்தவர்களுக்கு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-9)

# 75 வீதமான பௌத்தர்களின் வாக்குகள் கோத்தபாயவுக்கு

## ஜி.எல்.பீரிஸ் வெளிப்படைப் பேச்சு



கொழும்பு, ஒக். 15

கோத்தபாய ராஜபக்ச பௌத்தர்களில் 75 வீதமானவாக்குகளைப் பெறுவார் என்று தெரிவித்தார் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ். சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் காரியாலமொன்றில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டார் பீரிஸ்.

கோத்தபாய ராஜபக்ச பௌத்தர்களின் 75 சதவீத வாக்குகளைப் பெறுவார். இருப்பினும், எங்களுக்கு அனைத்து சமூகங்களின் ஆதரவும் தேவை. பொதுமக்கள் முன்னணியின் தேர்தல் அறிக்கை எதிர்வரும் 18ஆம் திகதி கோத்தபாயவால் வெளியிடப்படும் என்;று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாத கூட்டணியினுடைய கூலிப்படையாக ஹிஸ்புல்லா

## ஒரு வாக்கேனும் வழங்காதீர்கள் என அமைச்சர் ஹக்கிம் முழக்கம்



கொழும்பு, ஒக். 15

இனவாதிகளின் பிரச்சினைகள் நடந்தபோது ஹிஸ்புல்லாவினால் வாய்திறக்கவே முடியவில்லை. அவரே இப்போது இனவாதக் கூட்டணியின் கூலிப்படையாக இயங்குகிறார். இதைவிட மிக மோசமான அரசியல் வங்குரோத்து நிலமை இருக்கமுடியாது. இவர் தற்போதைய அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவது அப்பட்டமான காட்டிக்கொடுப்பாகும் என்று சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அரச தலைவர் தேர்தலில் காத்தான்குடி முக்கியமானதொரு பேசுபொருளாக இருக்கப் போகின்றது. ஏப்ரல் 21 தாக்குதலின் பின்னர் முழுநாடும், ஏன் பன்னாடுகளும் அவதானம் செலுத்தும் இடமாக காத்தான்குடி மாறியிருக்கிறது. இந்த நெருக்கடிகளிலிருந்து விடுபடுவதற்கு மக்கள் முயற்சித்துக் கொண்டிருக்கும் நிலையில், முழு சமூகத்தையும் நெருக்கடிக்குள் தள்ளிவிடும் வேலையை இங்குள்ள அரசியல் பிரமுகர் செய்து கொண்டிருக்கிறார்.

ஏப்ரல் 21 தாக்குதலின் பின்னர், சமூகத்தின் மீதான நெருக்குவாரங்களை கவனத்தில்கொண்டு முஸ்லிம் அமைச்சர்கள் பதவிகளைத் துறந்து, பலமானதொரு செய்தியை நாட்டுக்கும் பன்னாட்டுச் சமூகத்துக்கும் சொன்னோம். அரசியல் வேறுபாடுகளை மறந்து சமூகம் ஒற்றுமைப்பட வேண்டும் என்ற சூழலில், தன்னையும்தனதுசுயநலத்தையும் பாதுகாத்துக் கொள்வதற்கு முழு சமூகத்தையும் அடகுவைக்கின்ற வங்குரோத்து அரசியல் மிகவும் ஆபத்தானது.

அவருடைய மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழக விவகாரம் தொடர்பில் முஸ்லிம் தலைமைகள் மிகவும் பக்குவமாக நடந்துகொண்டன. அவரது பல்கலைக்கழக விவகாரத்துக்கும் டொக்டர் ஷாபியின் விவகாரத்துக்கும் நாங்கள் வித்தியாசம் பார்க்கவில்லை. இரண்டையும் இனவாத பிரச்சினைகளாகவே நோக்கினோம். அவரையும் பாதிக்காமல், சமூகத்தையும் பாதிக்கமால், இனவாதிகளுக்கு தீனியும் போடாமல் நாங்கள் மிக நேர்மையாகவும் பக்குவமாகவும் நடந்துகொண்டோம். முஸ்லிம்களின் வாக்குகளை பகல் கொள்ளையிட்டு எதிரணி வேட்பாளர்களின் காலடியில் கொண்டு போய் கொட்டுவதை காத்தான்குடி மக்களோ அல்லது நாட்டு முஸ்லிம்களோ அனுமதிக்கமாட்டார்கள். நாங்கள் அமைச்சு பதவிகளைத் துறந்து, இனவாத நெருக்கடிக்குள் சிக்குண்டிருந்த ஹிஸ்புல்லாவுக்கு ஆறுதல் கொடுத்தோம். ஆனாலும், அவருடைய பக்குவமில்லாத செயற்பாடுகள் பிரச்சினைகளை மேலும் விஸ்வரூபமெடுக்க வைத்துள்ளன.

தாக்குதல் நடைபெற்ற பின்னர் ஹிஸ்புல்லா பள்ளிவாசல் ஒன்றுக்குள் வைத்து பக்குவமில்லாமல் பேசியதையும் அதனால் ஏற்பட்ட விபரீதங்களையும் எல்லோரும் அறிந்திருப்பீர்கள். கடந்த தேர்தலில் யாருடன் நின்றார், பின்னர் பின்கதவால் சென்று எப்படி தேசியப்பட்டியலை கொள்வனவு செய்தார் என்பதை நாங்கள் பார்த்தோம். அதன்பின்னர் நடந்தேறிய கூத்துக்களின் ஓர் அங்கமாக சர்ச்சைக்குரிய ஞானசார தேரரை விடுவிக்க வேண்டும் என்று பகிரங்கமாக கோரிக்கை விடுத்தார்.

நான் என்ன சொன்னாலும் காத்தான்குடி மக்கள் கேட்பார்கள் என்ற இறுமாப்பில் அப்பட்டமான சந்தர்ப்பவாத அரசியல் செய்பவர்களை மக்கள் தற்போது அடையாளம் கண்டுள்ளனர். தனது எஜமானர்களின் கூலிப்படையாக இருந்து கொண்டு சமூகத்தை விலைபேசி விற்கின்ற பிற்போக்குத்தனமான அரசியல்வாதிகளை மக்கள் தூக்கி வீச வேண்டும். ஒரு வாக்கேனும் ஹிஸ்புல்லாவுக்கு அளிக்கப்படுவது துரோகத்தனத்துக்கு துணை போவதாகும்.

கிராமப்புற சிங்கள மக்கள் மத்தியில், முஸ்லிம்களை வேறுபடுத்தி தூரப்படுத்திக்காட்டும் ஆபத்தான விளையாட்டை இப்போது அவர் விளையாடிக் கொண்டிருக்கிறார். தன்னைத்தோனே அரச தலைவர் என்று கூப்பாடுபோடும் அரசியல் கோமாளியை மக்கள் இப்போது தெளிவாக அடையாளம் கண்டுள்ளனர். இப்படியானவர்களின் சுயரூபம் வெளுத்து, தனிநபர் அரசியல் விரைவில் முடிவுக்கு வரப்படும். ஊர் மக்களுக்காக போராடுகிறேன் என்று, அந்த ஊரையே படுகுழிக்குள் தள்ளவிடுகின்ற வேலையைத்தான் இப்போது செய்துகொண்டிருக்கிறார். வெளிச்சக்திகளுக்கு சோரம்போன ஒருசில முஸ்லிம் பெயர்தாங்களிகளின் செயற்பாடுகளினால் மனமுடைந்துபோயிருக்கும் இந்த மண்ணை இன்னுமொரு நெருக்கடிக்குள் தள்ளவிடுவதை நாம் அனுமதிக்கமுடியாது. காத்தான்குடி என்பது முஸ்லிம் காங்கிரஸ் என்ற பேரியக்கம் முளைவிட்ட மண். அதை பாதுகாப்பது எங்களின் கடமை - என்றார். (ம)

## பதுளைக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 15

பதுளை மாவட்டத்தின் 3 பிரதேச செயலர் பிரிவுகளில் மண்சரிவு எச்சரிக்கை தொடர்ந்து விடுக்கப்பட்டுள்ளது.

ஹல்துமுல்ல, பசறை மற்றும் எல்ல ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாக மண்சரிவு ஆய்வு பிரிவின் பணிப்பாளர் கலாநிதி ஹாமினி ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (ம)



## கேபிள் கார் ஒப்பந்தமொன்று நுவரெலியாவில் கைச்சாத்து

கொழும்பு, ஒக். 15

நுவரெலியாவில் அமைக்கப்படவுள்ள இலங்கையில் முதலாவது கேபிள் கார் வாகன திட்டத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

நுவரெலியா மாநகரசபை வளாகத்தில் இது தொடர்பான நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. பெருந்தோட்டத்துறை அமைச்சர் நவின் திஸாநாயக்க இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார். (ம)

## தொடருந்து நிலைய ஊழியர் தாக்கினார்

### சபை உறுப்பினர் குற்றச்சாட்டு

கொடிகாமம், ஒக் 15

நாவற்குழி தொடருந்து நிலையத்தில் நட்டிருந்த தூண் தொடர்பில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக, தொடருந்து நிலைய ஊழியர் ஒருவர் சாவகச்சேரிப் பிரதேச சபையின் உறுப்பினர் இ.யோகேஸ்வரனைத் தாக்கியுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

நாவற்குழிச் சந்தி சனசமூக நிலையத்தின் வேலித் தூண்களை தொடருந்து நிலைய் ஊழியர் அடித்து நொருக்கிக் கொண்டிருந்தார். அதைக் கண்ட நான், என்னை அறிமுகப்படுத்தி, இது சனசமூக நிலையத்தின் வேலித் தூண்கள், ஏன் தூணை உடைக்கிறீர்கள் என்று அங்கு சென்று கேட்டேன். தூண் தொடருந்து வளாகத்துக்குள் உள்ளது. அதுதான் உடைக்கின்றேன் என்று கூறியுள்ளார். அதை உடைக்க வேண்டாம் என்று தடுத்தேன். அதன்போது எனது நெஞ்சில் தள்ளி அடித்தார். இதனால் மக்கள் சேர்ந்துவிட்டனர்.

சாவகச்சேரிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. சுமார் 15 பொலிஸார் அங்கு வந்தனர். அதனால் நிலைமை சுமுகமானது என்று சம்பந்தப்பட்ட பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார்.

இது குறித்து தொடருந்து நிலையத் தரப்பினரின் பதிலைப் பெறமுடியவில்லை. (த-159)

## சாரதியின் சடலம் நேற்று அடக்கம்

வவுனியா, ஒக்.15

வவுனியாவில் காணாமற்போய் உடற் பகுதி எரிக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட குடும்பத் தலைவரின் சடலம், இறுதி அஞ்சலி மற்றும் கிரியைகள் நேற்று நடைபெற்றது.

ஓமந்தைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கள்ளிக்குளம், காட்டுப் பகுதியிலிருந்து, தீயில் எரிந்தநிலையில் கடந்த 10 ஆம் திகதி சடலம் மீட்கப்பட்டிருந்தது. அது முச்சக்கர வண்டிச் சாரதியின் சடலம் என்பது தெரியவந்தது. கே.சுவேந்திர பிரகாஸ் (வயது 27) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

சடலம் உடற்கூற்று பரிசோதனைக்கு பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கபட்டது. அவருடைய இறுதிக் கிரியைகள் வவுனியா சின்னபுதுக்குளம் பகுதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நேற்று மதியம் நடைபெற்றது.

அதன்போது ஏராளமான முச்சக்கர வண்டிச் சாரதிகள் முச்சக்கரவண்டிகளுடன் வந்து அஞ்சலி செலுத்தினர். பொதுமக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர். காரணம் கண்டறியப்படவில்லை. இந்த நிலையில் ஏராளமான முச்சக்கரவண்டிச் சாரதிகள் தத்தம் முச்சக்கரவண்டிகளுடன் நேற்றுக் கலந்து கொண்டு சந்தேகமான இறப்புப் பற்றிய கவனத்தை ஈர்த்திருந்தனர்.

சடலம் வவுனியா மருத்துவமனையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில், அதன் மாதிரிகள் மேலதிக ஆய்வுகளுக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. எனினும் சந்தேகத்தில் எவருமே கைது செய்யப்படவில்லை. ஓமந்தைப் பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர். (த-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மை ஆதரிக்கும் வாக்காளர்கள் எவரும் விருப்பு வாக்கைப் பயன்படுத்தவேண்டாம்

## அனுரகுமார வியூகம்

கொழும்பு, ஒக். 15



தேசிய மக்கள் சக்தி கூட்டணிக்கு வாக்களிக்கும் எவரும் தனது இரண்டாம், மூன்றாம் விருப்பு வாக்குகளைப் பயன்படுத்தவேண்டாம் என வேண்டுகோள் விடுத்துள்ளார் அதன் அரச தலைவர் வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விருப்பு வாக்குகளை வழங்குவதற்குத் தேர்தல்கள் சட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. யாருக்கும் அதனைப் பயன்படுத்த அதிகாரம் உள்ளது. அவ்வாறு பயன்படுத்துவதனால் எந்தவிதப் பயனும் இல்லை. ஏனெனில், கடந்த அரசிலும் தற்போதைய அரசிலும் எந்தவித வேறுபாடும் கிடையாது. இரண்டும் ஒன்று. அவ்வாறு விருப்பு வாக்குகளை வழங்குவதற்கு எஸ்.பீ போன்றவர்களால் முடியும். ஏனெனில், அவர்கள் மகிந்த ராஜபக்ச அரசிலும் அமைச்சர்கள் தற்போதைய அரசிலும் அமைச்சர்கள் - என்றார். (ம)

# நாட்டின் தலைமையிடம் ஊழல் இருக்கக்கூடாது

## மல்வத்து பீட மகாநாயக்கர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 15



நாட்டின் தலைமைத்துவத்துக்குப் பொருத்தமானவரிடம் ஊழல், மோசடி இருக்கக்கூடாது என்றும் அவர் ஓர் அறிவாளியாக இருக்கவேண்டும் எனவும் மல்வத்து பீட மகாநாயக்கர் திம்புல்கும்புரே விமலதம்மா தேரோ தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டுக்குச் சேவை செய்யத் தகுதியுள்ளவர்களிடம் ஊழல் மோசடி இருக்கக்கூடாது.

அதேநேரம் அவர்கள் பௌத்த சாசனத்தில் அர்ப்பணிப்பு உள்ளவர்களாக இருக்க வேண்டும் -என்றார். (ம)

# சஜித் அரச தலைவராகுவதை மக்கள் தீர்மானித்துவிட்டனர்

## திகாம்பரம் இப்படித் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 15



எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் சஜித் பிரேமதாச வெற்றி பெறுவதை மக்கள் தீர்மானித்து விட்டார்கள். நுவரெலியா மாவட்டத்தில் மாத்திரம் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளை அவர் பெறுவார் என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், அமைச்சருமான பி.திகாம்பரம் தெரிவித்தார்.

அமைச்சர் திகாம்பரம் ஹற்றனில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசதலைவர் தேர்தலில் எந்த வேட்பாளருக்கு ஆதரவு தெரிவிப்பது என்பதில் தொழிலாளர் தேசிய சங்கத்துக்கோ அல்லது தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கோ எந்த விதமான தடுமாற்றமும் கிடையாது. தேர்தல் திகதி அறிவிக்கப்படுவதற்கு முன்னரே தமிழ் முற்போக்கு கூட்டணி உறுதியான தீர்மானத்தை எடுத்து அதற்கான அழுத்தத்தைக் கொடுத்திருந்தது. அந்த வகையில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் வெற்றிக்கு பாடுபடத் தயாராக இருக்கின்றோம்.

2019ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் சஜித் பிரேமதாச அமோக வெற்றி பெற்று இந்த நாட்டின் அரச தலைவராக வருவதை யாராலும் தடுக்க முடியாது. மலையகத்தில் உள்ள ஏனைய அமைப்புகள் அவற்றின் விருப்பத்தின் அடிப்படையில் தீர்மானத்தை மேற்கொள்ளும் போது அது தொடர்பில் கருத்து சொல்ல வேண்டிய அவசியம் எமக்கு கிடையாது. மலையகத்தின் பல பகுதிகளிலும் சஜித் பிரேமதாசவின் வெற்றிக்கு தொடர்ச்சியான பரப்புரைகள் மேற்கொள்ளப்படுவுள்ளன. அவர் மலையகத்தில் கலந்து கொள்ளும் பிரம்மாண்டமான கூட்டமும் விரைவில் நடைபெறவுள்ளது - என்றார். (ம)

# 459 தேர்தல் முறைப்பாடுகள் இதுவரையில் பதிவாகியுள்ளன

கொழும்பு, ஒக். 15

எதிர்வரும் அரச தலைவர் தேர்தல் தொடர்பாக இதுவரை மொத்தம் 459 குற்றச்செயல்கள் பதிவாகியுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி ஒக்டோபர் 8 முதல் 12ஆம் திகதி வரையான கால கட்டத்தில் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 433 முறைப்பாடுகளும், தேர்தல் வன்முறை தொடர்பில் 11 முறைப்பாடுகளும் மேலும் 15 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. (ம)

# மாலை வேளைகளில் இடியுடன்கூடிய மழை

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் இன்று பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் நேற்றுக் காலை வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களில் சில இடங்களில் 75 தொடக்கம் 100 மில்லிமீற்றர் அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

கிழக்கு மற்றும் தெற்கு கரையோரப் பகுதிகளில் காலை வேளையிலும் சிறிதளவான மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. மேல், சப்ரகமுவ, மத்திய, ஊவா மற்றும் தென் மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை காங்கேசந்துறையிலிருந்து திருகோணமலை மற்றும் பொத்துவில் ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 70 தொடக்கம் 80 கிலோ மீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் பலமான காற்று வீசுவதுடன் கடற்பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும்.

மின்னல் தாக்கங்களாலும் பலத்த காற்றினாலும் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் - என்றுள்ளது. (ம)

# கோத்தபாய ராஜபக்சவை ஆதரித்தார் பிள்ளையான்

கொழும்பு, ஒக். 15

கிழக்கு மாகாண முன்னாள் முதல்வர் பிள்ளையான் எனப்படும் சி.சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளது.

மட்டக்களப்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில், கட்சியின் செயலர் பூ.பிரசாந்தன், தமது கட்சியின் இந்த முடிவை அறிவித்தார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரான சி.சந்திரகாந்தன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கில் கடந்த நான்கு ஆண்டுகளாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவரது தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு 42 ஆயிரம் வாக்குகளைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## 21/4 தாக்குதல் விசாரணை

# அரச தலைவருடைய ஆணைக்குழுவால் முறைப்பாடுபெறும் நடவடிக்கை நிறைவு

கொழும்பு, ஒக். 15

உயிர்த்தஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும் அரச தலைவர் ஆணைக்குழுவால் முறைப்பாடுகளை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை நேற்றுடன் நிறைவடைந்தது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஜனக் டி சில்வாவின் தலைமையிலான ஐவர் கொண்ட ஆணைக்குழு உயிர்த்தஞாயிறு தாக்குதல்கள் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டது.

பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு அதற்குரிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக இந்த குழு நியமிக்கப்பட்டது.

இந்த குழுவில் பொதுமக்களும் தகவல்களை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இவ்வாறு முறைப்பாடுகளைப் பெறும் நடவடிக்கைகள் நேற்றுடன் நிறைவடைந்தன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தபாய அபிவிருத்தி செய்யார் அவருக்கு தமிழர்கள் விரோதிகளே

## சரவணபவன் எம்.பி. தெரிவிப்பு



கொடிகாமம், ஒக். 15

யாழ்ப்பாண மண்ணில் இன்றுள்ள அளவுக்கு அபிவிருத்திகளை நிச்சயமாக கோத்தபாய ராஜபக்ச செய்யமாட்டார். அவரின் மனதில் தமிழர்கள் விரோதிகளே. தமிழர்களுக்கும் அவர் விரோதி. வெள்ளைக் கொடி பிடித்த போதிலும் சுட்டுத் தள்ளுங்கள் என்று உத்தரவு கொடுத்ததால், அத்தனை பேரும் சுட்டுத் தள்ளப்பட்டார்கள். இப்படியொரு நிலை மீண்டும் ஏற்படாது என்பதற்கு உத்தரவாதமில்லை. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

தென்மராட்சி கைதடி வடக்கு சனசமூக நிலைய நவராத்திரி விழா கயிற்றசிட்டி கந்தசுவாமி கோவில் கல்யாண மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை மாலை சனசமூக நிலையத் தலைவர் சி.மதீசன் தலைமையில் நடைபெற்றது.

அதில் முதன்மை விருந்தினர் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

கோத்தபாயவுடன் சேர்ந்து ஓடப்போகிறவர்கள் தமிழர்களுக்கு எதிராகச் செயற்படக்கூடிய கட்சிகள்தான். ஈ.பி.டி.பியைச் சேர்ந்த டக்ளஸ் தேவானந்தா, கருணா, பிள்ளையான் ஆகியோர் அன்று அராஜகம் நடத்தியிருந்தனர். ஈ.பி.ஆர்.எல்.எவ். மூலம் அராஜகம் நடத்திய வரதராஜப்பெருமாள் எல்லோரும் சொல்கின்றார்கள். தமிழர்களைத் துவம்சம் பண்ணியவர்களைத்தான் நாங்கள் காக்கப் போகிறோம் என்று.

போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர், தமிழர்களை மதிப்புடன் நடத்துவோம் என்று 2009 ஆம் ஆண்டிலிருந்து வெளிநாடுகளுக்கு அவர்கள் உத்தரவாதம் கொடுத்தார்கள். எதுவுமே நடக்கவில்லை.

அவர்களுடைய காலத்தில் எனது பத்திரிகைக்குள் நுழைந்து துப்பாக்கிச் சூடு நடத்தினர். அவர்களை அடையாளம் காட்ட முடியும் வழக்குப் போடுங்கள் என்றால் போடுகிறார்களில்லை.

### சூடு நடத்தியவர்கள் மீது நடவடிக்கையில்லை

உதயன் உங்கள் எல்லோரினதும் பத்திரிகை. அவர்கள் உதயனைத் தாக்கியது மக்களைத் தாக்கியதற்குச் சமம். ராசபக்ச அரசு உதயன் பத்திரிகை இயந்திரத்தை எரித்தது. எரித்தவர்கள் இன்னும் இருக்கிறார்கள். எங்களால் காட்ட முடியும். ஆனால் நடவடிக்கை எடுக்க மாட்டார்கள். எல்லாவற்றுக்கும் தலையாட்டும் ஒரு தமிழன் தங்கள் பக்கம் இருக்க வேண்டும் என்பதற்காக அவரின் மேல் நடவடிக்கை எடுக்கத் தயங்குகின்றனர். இதற்கு ராஜபக்சவினரோ ரணில் விக்கிரமசிங்கவோ இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நானும் பல தடவைகள் சொல்லிவிட்டேன். சஜித் பிரேமதாச வென்றுவந்தால் என்ன செய்கிறார் என்று பார்ப்போம்.

அரசதலைவராக எவர் வரப் போகிறார் என்பது தெரியவில்லை.

### அபிவிருத்திகளை விரைவுபடுத்துங்கள்

எமக்குச் சாதகமில்லாதவர்கள் வந்தால் அபிவிருத்திகளில் என்ன நடக்கும் என்று சொல்லத் தெரியவில்லை. அதனால் நிதி ஒதுக்கிய அபிவிருத்திகளை மிகவிரைவில் செய்துமுடிக்க வேண்டும்.

சஜித் பிரேமதாச அரசதலைவராக வருவாராக இருந்தால் அரசு தொடரும். எந்த விதமான தடங்கல்களும் இன்றி அபிவிருத்திகளை தொடர்ச்சியாகச் செய்துகொண்டு போகலாம்.

பெரும்பான்மை இனம் எப்போதும் தமிழர்களுக்கு விடிவைத் தராது. அதைச் சரியாக உணர்ந்த ஒரே தமிழன் இன்று உயிருடன் இல்லை. இது தான் உண்மை.

தென்மராட்சி மண்ணை நாங்கள் என்றும் மறக்க மாட்டோம். ஏனெனில் நாங்கள் வலிகாமத்தை விட்டுப்புறப்பட்டபோது அவர்களே அபயக்கரம் கொடுத்தவர்கள். தென்மராட்சி ஏற்றிருக்காவிட்டால் எமது நிலை மோசமாகியிருக்கும். - என்றார்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்புவிருந்தினர்களாக கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் அ.லோகநாதன், கைதடி குருசாமி வித்தியாலய அதிபர் ந.ஜெயரூபன், தியாகி அறக்கட்டளை நிறுவனப் பணிப்பாளர் பொ.விக்னேஸ்வரன், மதிப்புறு விருந்தினர்களாக கைதடி இலங்கை வங்கியின் ம.சிவரங்கன், நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் இணைப்பாளர் சி.பிரதாப், யாழ்ப்பாண எஸ்.ஓ.எஸ் சிறுவர் பன்னாட்டு மூத்த கணக்கீட்டு உதவியாளர் து.தனுசன், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சு.கேதீஸ்வரன், கிராம மக்கள், நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (த-159)

# பௌத்த சாசனத்தைப் பாதுகாக்க அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்

## சஜித் வாக்குறுதி

கொழும்பு, ஒக். 15

பௌத்த சாசனத்தைப் பாதுகாப்பதற்கு நான் எப்போதும் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் என்று தெரிவித்தார் புதிய ஜனநாயக முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச.

கதிர்காமம் கிரிவெஹர விகாரையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றசமயநிகழ்வொன்றின்போது உரையாற்றுகையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

பௌத்த சாசன நிதியத்தை நிறுவி நடைமுறை ரீதியான ஒரு பௌத்தனாக எனது தந்தை ஆற்றிய சேவையை தொடர்ந்து முன்கொண்டு செல்லவுள்ளேன். மகா சங்கத்தினரின் அறிவுறுத்தல்கள், போதனைகள், உபதேசங்கள் என்பவற்றுக்கு ஏற்ப செயலாற்றுவேன் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# 6ஆம் திகதிக்கு முன்னரே வாக்குச்சீட்டு ஒப்படைப்பு

கொழும்பு, ஒக். 15

வாக்குச்சீட்டுக்கள் எதிர்வரும் 6ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல்கள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. அரச அச்சகர் கங்கா கல்பனி லியனகே இதனை தெரிவித்துள்ளார். அரச அச்சகத்தால் தற்போது இதற்குரிய நடவடிக்கைகள் முழு வீச்சில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

# இந்த அரசு நீடிக்குமானால் நாட்டில் எதுவுமே எஞ்சாது

## மகிந்த பரப்புரை



கொழும்பு, ஒக். 15

கூட்டு அரசைத் தொடர்ந்தும் ஆட்சியில் நீடிக்கச் செய்தால், இறுதியில் நாட்டில் எதுவும் எஞ்சியிருக்காது என சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

கடவத்தையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மகிந்த மேலும் தெரிவித்ததாவது:

'வேலை செய்பவர் ஒருவரை நாம் இன்று மக்களுக்காக வேட்பாளராக் களமிறக்கியுள்ளோம். இந்த முடிவை நாம் மிகவும் சிந்தித்தே எடுத்துள்ளோம். தூங்காமல் இருக்கும் ஒருவரை அரச தலைவராக்கிப் பயனில்லை என்பதை மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். ஒருவர் தூங்காமல் ஏன் இருக்கிறார் என்று எமக்குத் தெரியாது. இதனை மக்களே தீர்மானித்துக்கொள்ளட்டும். நாம் என்ன செய்ய வேண்டும் என்று மக்களாகிய உங்களிடம் கேட்டோம். கிராமம் கிராமமாகச் சென்று ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டோம். நாம் ஆட்சிக்கு வந்தாலும், மக்களின் பேச்சைக் கேட்டே அரசை நடத்துவோம் என்பதை இவ் வேளையில் அச்சமில்லாமல் கூறிக்கொள்கிறோம்.

இந்த அரசு மக்களுக்காக என்ன செய்துள்ளது? - ஒன்றுமில்லை. இவர்கள் தொடர்ந்து ஆட்சியில் நீடித்தால் நாட்டில் எதுவும் எஞ்சியிருக்காது. எனவே, நவம்பர் 16ஆம் திகதி சென்று தாமரை மொட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து; எல்பிட்டிய முடிவுகளைப் போன்றதொரு வெற்றியை எமக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று இவ் வேளையில் நான் மக்களிடம் கேட்டுக்கொள்கிறேன்' - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரித்திரங்கள் மாற்றப்படக் கூடாது உண்மைகள் ஏற்கப்பட வேண்டும்!

## திருகோணமலையில் சுமந்திரன் வலியுறுத்தல்

மூதூர், ஒக். 15

சரித்திரங்கள் மாற்றப்படக் கூடாது. உண்மைகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். எமக்கு எதிரான வரலாறுகளை வைத்துக் கொண்டு இன்றைய நிலையை மாற்றி விடவும் முடியாது. இது தொடர்பாகவே நாம் அனைத்து அரசுகளுடனும் பேசி வருகின்றோம் எனத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.



வரலாற்றுத்துறை ஆய்வாளர் என்.கே.எஸ்.திருச்செல்வம் எழுதிய 'கன்னியா பண்டைய சைவத் தமிழரின் பாரம்பரிய அடையாளம்' என்ற நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சரித்திரங்களின் உண்மைகள் சில எமக்கு ஏற்புடையதாக இல்லாத போது, இவற்றை விட்டுவிட்டு எமது சரித்திரத்தை எமக்கு ஏற்றால் போல் பேசுகின்றோம்.

இது மாற்றப்பட வேண்டும். இதனால் இன்றைய உண்மை நிலையை எவரும் மாற்றிவிட முடியாது. ஒவ்வொரு காலப்பகுதிலும் ஒவ்வொரு மதங்களின் ஆக்கிரமிப்பு என்பது வந்து போவதும் ஏற்கனவே இருந்ததை வருபவர் அழிப்பதும் வழமை. அது தான் கால காலமாக உலகலாவிய ரீதியல் இடம்பெற்றுள்ளது. அதற்கு எமது சரித்திரத்திலேயே பல உதாரணங்கள் உள்ளன. ஆயினும் சரித்திரத்தை பொய்யாக்கிவிட முடியாது. கன்னியா வெந்நீரூற்று தொடர்பாக தமிழ் தலைமைகள் எதுவும் செய்யவில்லை என்று சொல்பவர்கள் எவரையும் எதுவும் செய்ய விடாதவர்கள். 2011ஆம் ஆண்டில் நான் கன்னியா சென்றிருந்த போது பிள்ளையார் கோயில் இருந்த மேட்டிலே ஒரு பௌத்த கொடி நடப் பட்டிருந்தது. இதனுடைய அர்த்தம் என்ன?. ஓர் இடத்தில் கொடி நாட்டுவதென்பது அந்த இடத்தை தற்போது நாங்கள் கைப்பற்றி விட்டோம் என்று தான் அர்த்தம் கற்பிக்கிறது. அந்தக் கொடியை நான் படமெடுத்தேன். அந்தப் படத்தை எனது வீட்டில் பதுக்கி வைத்திருக்கவில்லை. அதனை நாடாளுமன்றிற்கு எடுத்துச் சென்று இரண்டு அறிக்கைகள் சமர்பித்தேன்.

எத்தனையோ தடவைகள் அரச பிரதிநிதிகளுக்கு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் ஐயா கடிதம் எழுதி இருக்கிறார்.

நாடாளுமன்றத்தில் பேசி இருக்கிறார். அவற்றின் விளைவே கன்னியா தொடர்பாக இடம்பெற்றுள்ள முன்னேற்றங்கள் - என்றார். (ம)

# இராணுவத் தளபதியின் படத்தை கோத்தா பயன்படுத்துவது தவறு!

## *திஸ்ஸ அத்தநாயக்க குற்றச்சாட்டு*

கொழும்பு, ஒக். 15



சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவின் தேர்தல் பரப்புரைகளுக்காக கடமையில் இருக்கும் இராணுவத் தளபதியின் படத்தையும் கருத்துக்களையும் பயன்படுத்துகிறார் என்று குற்றஞ்சாட்டியுள்ளார் ஐ.தே.கவின் முன்னாள் செயலரும் சஜித் பிரேமதாசவின் தேர்தல் நடவடிக்கைப் பிரிவின் பிரதானியுமான திஸ்ஸ அத்தநாயக்க.

ஐக்கிய தேசிய முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் கொழும்பு அலுவலகமொன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார் திஸ்ஸ அத்தநாயக்க.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடமையில் இருக்கும் இராணுவத் தளபதியின் படத்தையும் கருத்துக்களையும் கோத்தபாய தரப்பினர் தேர்தல் பரப்புரைகளுக்காகப் பயன்படுத்தவுள்ளனர் என்பது தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்துமாறு கோரி தேர்தல் ஆணைக்குழுவில் நாளை (நேற்று) முறைப்பாடு செய்யவுள்ளேன். அத்துடன், இது குறித்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் எழுத்து மூலம் முறையிடவுள்ளேன் - என்றார். (ம)

# கோத்தபாவின் பரப்புரைகளுக்கும் சவேந்திராவுக்கும் தொடர்பில்லை

கொழும்பு, ஒக். 15

கோத்தபாய ராஜபக்சவின் தேர்தல் பரப்புரை விளம்பரத்துக்கு இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சவேந்திர சில்வாவின் படம் மற்றும் கருத்து பயன்படுத்தப்பட்டுள்ள விடயத்துடன், இராணுவத் தளபதி எந்த விதத்திலும் தொடர்புபடவில்லை என்று இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார்.

'இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா 2009ஆம் ஆண்டு வெளியிட்ட கருத்து, அவருக்குத் தெரியாமல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவரது அறிக்கை மற்றும் ஒளிப்படம் இந்தப் பரப்புரைக்குப் பயன்படுத்தப்பட்டதை இராணுவத் தளபதி அறிந்திருக்கவில்லை. அவருடன் ஆலோசிக்கப்படாததால் அவரால் எதுவும் செய்ய முடியவில்லை.' என்றும் அவர் குறிப்பிட்டார். (ம)

# பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்குவது எமது பொறுப்பு

## *அமைச்சர் சாகல தெரிவிப்பு*

கொழும்பு, ஒக். 15



நாட்டின் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கி உரிய குழுவை உருவாக்குவதே எமது பொறுப்பாகும் வாக்குகளை பெற இயலாதவர்களே கட்சியை விட்டு செல்கின்றார்கள் என்று தெரிவித்தார் அமைச்சர் சாகல.

மாத்தறையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காலிமுகத்திடலில் நடைபெற்ற கூட்டத்தின் வெற்றிக்கு முதன்மைக் காரணம் கட்சியின் ஒற்றுமையாகும். எதிர்காலத்தில் செயற்படுவதற்கு வேண்டிய குழுவை சஜித் நியமிக்க வேண்டும். தலைமை அமைச்சருடன் இணைந்து அவர் தன்னுடைய செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். நாட்டின் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் நாம் முன்னுரிமை வழங்க வேண்டும். எம்முடைய நாடு அபிவிருத்தியடைந்த நாடல்ல. எம் நாட்டு மக்கள் பல இன்னல்களுக்கு மத்தியில் வாழ்கின்றார்கள். இந்த மக்களை நல்லதொரு நிலைக்கு கொண்டு வரும் வரையில் அந்த மக்களுக்குத் தேவையான உதவிகளை நாம் செய்துக்கொடுக்க வேண்டும். இதன் பொருட்டு உரிய குழுவை நியமிக்க வேண்டும்.

நாம் கஷ்டப்பட்டு பணியாற்றுகின்றோம். இந்த நாட்டின் மீது அன்பு செலுத்துகின்ற மக்களிடம் பேசி, நாம் எம்முடைய வேலைத்திட்டம் தொடர்பில் தெளிவுப்படுத்திக் கொண்டிருக்கின்றோம். அதன் பொருட்டு நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் - என்றார். (ம)

# ஹிஸ்புல்லா, ராசிக்குடன் தொடர்புகள் ஏதுமில்லை

## கோத்தா மறுப்பு

கொழும்பு, ஒக். 15

அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும், வேட்பாளர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா மற்றும் இலங்கை தவ்ஹீத் ஜமாத் அமைப்பின் பொதுச்செயலர் அப்துல் ராசிக்குடன் தனக்கு தொடர்பு இருப்பதாக வெளியான தகவல்களை பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச நிராகரித்துள்ளார்.

இதுபற்றி கோத்தபாய ராஜபக்சவின் பேச்சாளர் டலஸ் அழகப்பெரும தெரிவித்ததாவது:

'கோத்தபாய ராஜபக்ச மற்றும் அவரது பரப்புரை தொடர்பாக மக்களை தவறாக வழிநடத்தவே இவ்வாறான தகவல்கள் வெளியிடப்படுகின்றன. கோத்தபாய ராஜபக்சவின் பின்புலத்துடனேயே ஹிஸ்புல்லா போட்டியிடுவதாகவும், அப்துல் ராசிக் கோத்தபாயவின் பரப்புரையில் தொடர்புபட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. இவற்றை நாங்கள் முற்றாக மறுக்கிறோம்.' - என்றார்.

அதேவேளை அப்துல் ராசிக் வெளியிட்டுள்ள காணொளிப் பதிவு ஒன்றில், கோத்தபாய ராஜபக்ச வெற்றி பெறுவார் என்று தாம் உணருவதாகவும், அவருக்கு தான் தனிப்பட்ட முறையில் ஆதரவளிப்பதாகவும் கூறியுள்ளார். (ம)

# தங்க பிஸ்கட்டுக்களுடன் நபரொருவர் கைதானார்

கொழும்பு, ஒக். 15

கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் வைத்து தங்க பிஸ்கட்டுக்களுடன் நபரொருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

துபாயில் இருந்து வந்த குறித்த நபரை சுங்கத் திணைக்களக்க அதிகாரிகள் சோதனைக்கு உட்படுத்தியபோதே அவர் கைது செய்யப்பட்டார். நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இவரிடமிருந்து 100 கிராம் நிறையுடைய 17 தங்க பிஸ்கட்டுகள் மீட்கப்பட்டுள்ளன. அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

# கோத்தபாயவை ஆதரித்தார் வியாழேந்திரன்

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவை ஆதரிப்பதற்கு முற்போக்கு தமிழர் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.வியாழேந்திரன் தீர்மானித்துள்ளார்.

முற்போக்கு தமிழர் அமைப்பின் அலுவலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே எஸ்.வியாழேந்திரன் இதனை தெரிவித்துள்ளார். தமிழர் நலன் கருதி இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டேன் என்றும் அவர் குறிப்பிட்டார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச சபைத் தேர்தல் மூலம் மக்களின் கருத்தறிய முடியாது

## விஜித ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.15

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல் முடிவுகளின் மூலம் அரச தேர்தலில் தேசிய ரீதியிலான மக்கள் கருத்தை அளவிட முடியாது என மக்கள் விடுதலை முன்னணியின் பரப்புரைச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரதேச சபைத் தேர்தலுடன் அரச தலைவர் தேர்தலை சிலர் ஒப்பிடுக் கூறினாலும், பிரதேச சபைத் தேர்தல் ஒன்றின் முடிவு அரச தலைவர் தேர்தலுக்கு ஒப்பிடுவதற்கு எந்தவகையிலும் பொருத்தமற்றது.

எதிர்வரும் நாள்களில் நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலும், எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலும் ஒன்றல்ல, இரண்டும் வேறுபட்டவை - என்றார். (ஏ)

# வெற்றி உறுதியான பின்னரே பரப்புரையை ஆரம்பித்தோம்

## இப்படிக் கூறுகின்றார் திஸ்ஸ விதாரண

கொழும்பு, ஒக்.15

**சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இணைவின் மூலம் 54 சதவீத வாக்குகளை உறுதிப்படுத்திக் கொண்டே கோத்தபாய ராஜபக்சவின் தேர்தல் பரப்புரையை ஆரம்பித்துள்ளோம். சஜித் பிரேமதாச வென்றாலும் ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளில் மாற்றம் ஏற்படப் போவதில்லை.**

இவ்வாறு லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

சோசலிச மக்கள் முன்னணி நேற்றுக் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டின் பொருளாதாரம் பெருமளவில் வீழ்ச்சியடைந்து செல்கின்றது. மகிந்த ராஜபக்ச அரசில் போர் இடம்பெற்ற காலத்தில் கூட இந்தளவு பொருளாதார வீழ்ச்சி ஏற்படவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய லிபரல் வாதக் கொள்கையையே பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணம். ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவும் அதை ஏற்றுக் கொண்டுள்ளார்.

அதனால்தான் தான் வெற்றி பெற்றால் புதிய லிபரல் வாதக் கொள்கையைப் பின்பற்றப் போவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

சஜித் பிரேமதாச ஐக்கிய தேசியக் கட்சிக்குப் புதியவர் அல்லர். அவர் அரசியலுக்கு வந்த காலத்தில் இருந்தே புதிய லிபரல் வாதக் கொள்கைக்கு ஆதரவாகச் செயற்பட்டு வந்துள்ளார். தற்போது அதை நிராகரிக்கின்றேன் என்று அவர் கூறுவதை நம்ப முடியாது. சஜித் வெற்றி பெற்றாலும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக இருக்கப் போவது ரணில் விக்கிரமசிங்கவே. அதனால் சஜித் பிரேமதாச தெரிவிக்கும் எந்த மாற்றமும் வந்துவிடப் போவதில்லை. தற்போதுள்ள நிலைமையே தொடரும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி பொதுமக்கள் முன்னணியுடன் இணைந்து செயற்படத் தீர்மானித்ததன் ஊடாகக் கோத்தபாய ராஜபக்சவுக்கு 54 சதவீத வாக்குகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவரின் வெற்றி உறுதியாகியுள்ள நிலையில் தான் நாம் தேர்தல் பரப்புரைகளை ஆரம்பித்துள்ளோம்.

அரசு தனது தோல்வியை மறைப்பதற்காகக் கோத்தபாய ராஜபக்ச மீது பொய்க் குற்றச்சாட்டுக்களைக் கூறுகின்றது. அரசின் இந்தக் குற்றச்சாட்டுக்களை மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் - என்றார். (ஏ)

# சுதந்திரமாக வாழ்வதானால் சஜித்துக்கு வாக்களியுங்கள்

## ஐ.தே.கட்சியின் சம்மாந்துறை தொகுதி அமைப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.15

மக்கள் சுதந்திரமாக வாழக் கூடிய நாட்டை உருவாக்க வேண்டுமாயின் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவை மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் சம்மாந்துறைத் தொகுதி அமைப்பாளர் எம்.ஏ.ஹசன் அலி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் சம்மாந்துறையில் நடத்தப்பட்ட மக்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சஜித் பிரேமதாச எப்போதும் நாட்டின் முன்னேற்றத்துக்காகப் பாடுபடும் திறமை மிக்க தலைவராவார். அவர் ஊழல் மோசடிகளில் ஈடுபடாதவர். வறிய மக்களின் துன்பங்களை அறிந்தவர்.

மதவாதம், ஏகாதிபத்தியம் நிறைந்த ராஜபக்ச குடும்ப ஆட்சியை மீண்டும் ஏற்படுத்த நாட்டு மக்கள் இடமளிக்கக் கூடாது. கோத்தபாய ராஜபக்ச அரச தலைவரானால் மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சராவார். அது ராஜபக்சவின் குடும்ப ஆட்சியை மீண்டும் உருவாக்குவதற்கு வழி வகுக்கும். கோத்தபாய ராஜபக்ச வெற்றி பெற்றால் நாட்டில் மீண்டும் சர்வாதிகார ஆட்சியே தொடரும் என்பதை மக்கள் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஜனநாயகத்தை நிலைநிறுத்தி நாட்டில் மக்கள் சுதந்திரமாக வாழக் கூடிய நாட்டை உருவாக்க வேண்டுமாயின் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆட்சிப்பீடம் ஏற்றாக வேண்டும். குடும்ப ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். நாட்டு மக்கள் அனைவரும் கட்சி, நிறம், இனம் மறந்து ஜனநாயகத்தை மீளமைக்க இந்தத் தேர்தலைப் பயன்படுத்த வேண்டும் - என்றார். (ஏ)

# தேர்தலின் பின்னரான செயற்பாடு: கோத்தா-சு.க. விரைவில் ஒப்பந்தம்

கொழும்பு, ஒக்.15

தேர்தலுக்குப்பின்னரான நடவடிக்கைகள் தொடர்பாக சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவுக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் இந்த வார இறுதிக்குள் கைச்சாத்திடப்படும்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தவிசாளர் பேராசிரியர் ரோகண லக்ஸ்மன் பியதாச தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

கோத்தபாய ராஜபக்சவுடனான ஒப்பந்தம் இந்த வார இறுதிக்குள் கைச்சாத்திடப்படும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவர் தற்போது பரப்புரைக் கூட்டங்களில் பங்கேற்பதால் கைச்சாத்திடுவதற்கான தினம் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. அவருடனான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் அதில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும் - என்றார். (ஏ)

# தேர்தல் முறைகேடு தொடர்பாக பெவ்ரலுக்கு 60 முறைப்பாடுகள்

கொழும்பு, ஒக்.15

அரச தலைவர் தேர்தல் தொடர்பாக இதுவரை தமக்கு 60 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பெப்ரல் தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோகண ஹெட்டியாராச்சி இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது

30 முறைப்பாடுகள் அரச நியமனங்கள் பற்றியவை. ஏனையவை பொதுச் சொத்துக்களை முறையற்றுப் பயன்படுத்தியமை, நிவாரணம் வழங்கியமை, அபிவிருத்திச் செயற்றிட்டங்கள், இலஞ்சம் வழங்குதல், சுவரொட்டிகள் ஒட்டுதல், சட்டவிரோத பரப்புரை நடவடிக்கைகள் தொடர்பான முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த முறைப்பாடுகளில் அதிகமானவை நாடளாவிய ரீதியில் இடம்பெற்றவையாகும். பிரதேச ரீதியில் சில முறைப்பாடுகளே கிடைத்துள்ளன. எமக்குக் கிடைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பாக வெகு விரைவில் தரவுப்படுத்தப்பட்ட அறிக்கைகளை வெளியிடவுள்ளோம் - என்றார். (ஏ)

# சஜித்தின் தேர்தல் அறிக்கை 20 ஆம் திகதி வெளியாகும்

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

புதிய ஜனநாயக முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் தேர்தல் அறிக்கை எதிர்வரும் 20ஆம் திகதி வெளியிடப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் தேர்தல் செயலக இணைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இந்தத் தேர்தல் அறிக்கையை பல்துறை சார்ந்த 32 நிபுணர்கள் இணைந்து தயாரிக்கின்றனர். பங்காளிக் கட்சிகளுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களில் அவர்கள் முன்வைத்த ஆலோசனைகள், பரிந்துரைகள் இந்த அறிக்கையில் சேர்த்துக் கொள்ளப்படும். இளைஞர்களின் வேலை வாய்ப்புப் பிரச்சினை, வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தல், விவசாயிகளின் பிரச்சினை, வெளிநாட்டு முதலீடு ஆகிய விடயங்களுக்குத் தேர்தல் அறிக்கையில் முன்னுரிமை அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஏ)

# இடைநிலைப் பிரிவு மாணவரை இணைக்கலாம்

யாழ்ப்பாணம், ஒக்.15

தரம் 7 முதல் 10 வரையான இடைநிலைப்பிரிவுகளுக்குரிய அனுமதிக்காக கல்வி அமைச்சுக்கு அனுப்பப்பட்ட மாணவர் பட்டியலுக்கு அனுமதி கிடைத்துள்ளது என்று, பெற்றோர் இன்று 15ஆம் திகதி காலை 10 மணிக்கு அனுமதிக் கடிதங்களைப் பெற்று மாணவர்களை இணைத்துக் கொள்ளலாம் என்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பதில் அதிபர் சு. பரமேஸ்வரன் அறிவித்துள்ளார்.

பாடசாலைக்குரிய வசதிகள் சேவைகள்கட்டணம், பரீட்சைக் கட்டணம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கட்டணம் என்பவற்றை மட்டும் செலுத்தி மாணவர்களை இணைத்துக் கொள்ளமுடியும்என்றும்அவர் அறிவித்துள்ளார். (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநாவசிய நிதிச் செலவுகளை ஆட்சிக்கு வந்து நிறுத்துவோம்

## அநுரகுமார திசாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.15

ஆட்சியாளர்கள் கொள்ளையடித்து தன்வசப்படுத்தியுள்ள அரச சொத்துக்களை எமது ஆட்சியில் மக்கள் மயப்படுத்தி முன்னாள் அரச தலைவர்கள், தலைமை அமைச்சர்கள் என அனைவருக்கும் கொடுக்கும் அநாவசியச் சலுகைகளை முழுமையாக நிறுத்துவோம்.

இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் அரசதலைவர்வேட்பாளர்அநுரகுமார திசாநாயக தெரிவித்தார்.

பத்தரமுல்லயில் நேற்று நடத்தப்பட்ட பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது நாட்டில்அனைத்துப்பகுதிகளிலும் அரச தலைவர்களுக்கான மாளிகைகள் உள்ளன. ஆனால் அவற்றில் எவரும் குடியிருப்பதும் இல்லை. ஒரு இரவைக்கூட அங்கிருந்து அனுபவிப்பர்களா எனவும் தெரியவில்லை. ஆனால் இந்த மாளிகைகளைபராமரிக்ககோடிக் கணக்கில் பணம் ஒதுக்கப்படுகின்றது.

நாம் ஆட்சிக்கு வந்தால் இவ்வாறு முன்னாள் அரச தலைவர்கள், தலைமை அமைச்சர்களுக்கு ஒதுக்கப்படும் அநாவசிய நிதி அனைத்தையும் நிறுத்துவோம். ஆட்சியை கைப்பற்றி இரண்டு மாதத்தில் முழுமையாக அரச சொத்துக்களை தன்வசப்படுத்திய அனைவருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுப்போம். வழங்காவிட்டால்நாமே அனைத்து சொத்துக்களையும் கைப்பற்றி மக்கள் மயப்படுத்துவோம்.

அரச சொத்துக்களை கொள்ளையடிக்க எவருக்கும் உரிமையில்லை. அரசசொத்துக்கள்என்பது மக்களின் சொத்துகள். அதனை மக்களே அனுபவிக்க வேண்டும் என்பதே எமது கொள்கையாகும். நாட்டில்அநாவசியமாகசெலவழிக்கும் பணத்தை சரியாகக் கையாண்டு கல்விக்கும், சுகாதாரத் துறைக்குமானஉயரியசேவையை செய்ய முடியும். ஆனால் இன்று இந்த பணம் முழுமையாக ஆட்சியாளர்கைகளில்சிக்கிக்கொண்டுள்ளது - என்றார். (எ)

# மகிந்த ஆட்சிக்கு வந்ததும் 2 ஆண்டுகளுக்குள் தீர்வாம்

கொழும்பு, ஒக்.15

மகிந்த ராஜபக்ச தலைமையில் நாட்டில் உள்ள அனைத்துப் பிரச்சினைகளையும் இரு ஆண்டுகளுக்குள் தீர்ப்போம் என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச.

நேற்று யாழ்ப்பாணம் வந்த நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர்கோத்தபாயராஜபக்சவுக்காகப்பரப்புரைக்கூட்டங்கள் பலற்றை நடத்தினார். யாழ்ப்பாணம் இலங்கைவேந்தன் கல்லூரி மண்டபத்தில் நடத்தப்பட்டபரப்புரைக்கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

மகிந்த ராஜபக்ச தலைமையில் நாட்டில் உள்ள அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்ப்போம். இனப்பிரச்சினைக்கான தீர்வு, அபிவிருத்தி வேலைகள், வேலை வாய்ப்புக்கள், அரசியல் கைதிகள் விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான பிரச்சினை, காணி விடுவிப்பு என்பவற்றை நாங்கள் தீர்ப்போம்.

போரை முடிவுக்குக் கொண்டுவந்த நாங்கள் வடக்கையும், தெற்கையும் இணைக்கும் வகையில் வீதிகளைச் செப்பனிட்டுவடக்கையும்,தெற்கையும் இணைத்து உறவுப் பாலத்தை அமைத்தோம். கடந்த ஆட்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சியாக இருந்தபோதும், அரசுடன் இணைந்தே செயற்பட்டனர் ஆனால் வடக்கு மக்களுக்கு எந்தவிதச் செயற்றிட்டங்களையும் செய்துகொடுக்கவில்லை. வடக்கின்வசந்தம்வேலைத்திட்டத்தை ஆரம்பித்து பல்வேறுவகையானஅபிவிருத்திகளை மேற்கொண்டிருந்தோம். பாடசாலைகள் வைத்தியசாலைகள் பொதுநோக்கு மண்டபங்கள் போன்றவற்றை கட்டினோம். சமுர்த்தித் திட்டத்தில் பலரை உள்வாங்கினோம். இது மட்டுமன்றி இலங்கை பொலிஸ் சேவைக்கு தமிழ் இளைஞர் யுவதிகளை உள்வாங்கிஅவர்களுக்குபல்வேறு பதவிகளிலும் அமர்த்தினோம்.

இந்த அரசு எத்தகைய வேலைத் திட்டத்தையும் மேற்கொள்ளவில்லை. நாடு முழுவதும் பொருளாதாரரீதியில்எத்தகைய வளர்ச்சியையும்அடையவில்லை. வடக்கைப் பொறுத்தவரை வடக்கிலுள்ள அனைத்து மக்களும் கடனாளிகளாகவே ஆகியுள்ளார்கள்.

அனைவரும் இலங்கையர் என்ற ரீதியில் ஒன்றாகவே பயணிக்க விரும்புகின்றோம். எங்களால் முடியும்என்பதைமுடியும் என்று கூறுவோம் முடியாது என்றால் முடியாது என்றே கூறுவோம். வடக்கை முழுமையான அபிவிருத்திசெய்வோம். யாழ்.நகரைஅபிவிருத்தி நோக்கிய நகரமாக மாற்றுவோம் - என்றார். (எ-106)

# மானிய உரம் வழங்கல் ஆரம்பம்

அச்சுவேலி, ஒக்.15

புத்தூர்கமநலசேவைகள் நிலையத்தின் எல்லைக்குட்பட்டநெற்செய்கையாளர்களுக்கான மானிய உரவழங்கல்இன்றுசெவ்வாய்கிழமை தொடக்கம் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கமக்கார அமைப்புக்கள் ஊடாக மானிய உரப் பசளைக்குவிண்ணம்செய்த கமக்காரர்கள் தேசிய அடையாள அட்டை அல்லதுவிவசாயிகளுக்கான அடையாளஅட்டையுடன் நேரில் வந்து மானிய உரப் பசளையைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று புத்தூர் கமநல சேவைகள் நிலையப் பெரும்பாகஉத்தியோகத்தர்சி.இரகுபரன்தெரிவித்தார்.

இன்று 15ஆம்திகதிசெவ்வாய்கிகிழமையும், நாளை 16ஆம் திகதி புதன்கிழமையும் வாதரவத்தை கமக்காரர் அமைப்பின் உறுப்பினர்களுக்கும்,17ஆம் திகதி வியாழக்கிழமையும், 18ஆம் திகதிவெள்ளிக்கிழமையும் அச்சுவேலி தெற்குக் கமக்கார அமைப்பின் உறுப்பினர்களுக்கும் உர மானியப்பசளைவழங்கப்படும் என்றுஅறிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# வாக்குறுதியை நிறைவேற்ற உயிரைக் கூட கொடுப்பேன்

## சஜித் பிரேமதாச தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.15

மனிதனின் முதலாவது கடமையும், பொறுப்பும் மனிதனுக்குசேவையாற்றுவதேயாகும். எனது தந்தையார் எங்கோ இருந்து,என்னுடையஅரசியல் பயணத்துக்கு சக்தியளித்துக் கொண்டிருக்கின்றார். பிரேமதாச வாக்குறுதி அளித்தால், அதனை நிறை வேற்றுவதற்குத் தனது உயிரையும் அர்ப்பணிப்பார் என்பதை மனதிலிருத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறுபுதியஜனநாயக முன்னணியின் அரச தலைவர்வேட்பாளர்சஜித் பிரேமதாஸதெரிவித்தார்.

நேற்று இரத்தினபுரியில் நடத்தப்பட்ட புதிய ஜனநாயக முன்னணியின் தேர்தல்பரப்புரைக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இரத்தினபுரியை அபிவிருத்தியில் மிளிரும் ஒரு மாவட்டமாக மாற்றுதல், பாடசாலை மாணவர்களுக்கு இரண்டு சீருடைத் துணிகளைப் பெற்றுக் கொடுத்தல், பாடசாலைகளில் மீண்டும் மதிய உணவுத்திட்டத்தைநடைமுறைப் படுத்தல், சமுர்த்தியை மேலும் வலுப்படுத்தல், 'ஜனசவிய' திட்டத்தை மீண்டும்அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தல் உள்ளிட்டவற்றை நாட்டின் அரச தலைவராக வந்ததும் நடைமுறைப்படுத்துவேன்என்றும்அவர் வாக்குறுதிஅளித்தார். (எ)

# நில்வள கங்கையின் நீர்மட்டம் உயர்ந்தது

கொழும்பு, ஒக். 15

பெய்துவரும்அடைமழை காரணமாக நில்வள கங்கையின் பாணத்துகம பிரதேசத்தில் நீர்மட்டம் உயர்வடைந்திருப்பதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நீர்மட்டம்தொடர்ந்துகண்காணிக்கப்படுகிறது என்றும், உரிய நேரத்தில் வான் கதவுகள் குறித்து முடிவெடுக்கப்படும் என்றும் இடர் முகாமைத்துவ மத்தியநிலையம்மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம)

# தலைமன்னார் மீனவர்கள் கடலுக்குச் செல்லத் தடை

## 2 மாதங்களாக அவர்கள் பாதிப்பு

மன்னார், ஒக். 15

தலைமன்னார் கிராம மீனவர்களை கடந்த 2 மாதங்களுக்கு மேலாக கடற்படையினர்கடற்றொழிலுக்குச் செல்ல அனுமதிக்கவில்லையென்றும் அதனால்தாம்பொருளாதார ரீதியில் பாதிப்படைந்துள்ளனர் என்றும் பாதிக்கப்பட்ட மீனவர்கள் மன்னார் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் பீற்றர் மடுத்தீன் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

தலைமன்னார் கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான மீனவர்கள் பலவருடங்களாகத்தலைமன்னார்க் கடலிலுள்ள தீடைப்பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டு வந்துள்ளனர். குறித்த தீடைப் பகுதியில்தலைமன்னார் கடற்படை முகாம் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு மீன் பிடிக்கச் செல்லக் கடற்படையினர் அனுமதி மறுத்து வருகின்றனர்.

தற்போது அனுமதிப் பத்திர(பாஸ்)நடமுறைநிறுத்தப்பட்டுள்ளதுஎன்றுமீனவர்கள் தெரிவித்தனர்.

பிரச்சினை தொடர்பில் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் தெரிவித்தும் இதுவரை உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

கடற்படையினரின் குறித்ததடையைநீக்கிஏனைய கிராமமீனவர்கள்போன்று தலைமன்னார் கிராம மீனவர்களும்சுதந்திரமாகக்கடற்றொழிலில்ஈடுபட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மீனவர்கள்நாடாளுமன்றஉறுப்பினரிடம் கோரிக்கை விடுத்துள் ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனிடம் கேட்டபோது, தலைமன்னார் கிராம மீனவர்கள் பல வருடங்களாக தீடைப் பகுதியில் கடற்தொழிலில் ஈடுபட்டுவந்தனர். தற்போது கடற்படையினர் குறித்த பகுதியில் மீன் பிடிக்க அனுமதி மறுத்துள்ளனர்.

இலங்கையில்தலைமன்னார் கிராம மீனவர்கள் மாத்திரமே கடற்படையினரிடம் அனுமதி பெற்று தொழிலுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. வேறு எந்த மாவட்டத்திலும் அனுமதி நடைமுறை இல்லை. உரிய நடவடிக்கைகளை மேற்கொளுமாறு கடற்றொழில் அமைச்சருக்குக் கடிதம் அனுப்பியுள்ளேன் - என்றார். (து-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழ்க்...

அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் முதன்மை வேட்பாளர்களிடம் தமிழர் தரப்பின் கோரிக்கைகளைக் கூட்டாக முன்வைத்து பேரம் பேசுவதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் தமிழ் மக்கள் கூட்டணி ஆகிய 5 தமிழ்க் கட்சிகள் பொது இணக்கப்பாடு ஒப்பந்தத்தில் நேற்று கையெழுத்திட்டன.

இது தொடர்பில் சஜித் பிரேமதாஸ, கோட்டாபய ராஜபக்ச ஆகியோரிடம் பன்னாட்டு செய்திச் சேவையொன்றின் கொழும்பு செய்தியாளர் நேற்றிரவு வினவியபோதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் தெரிவித்தவற்றின் சாராம்சம் வருமாறு

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அதிக வேட்பாளர்கள் போட்டியிடும் இந்த அரச தலைவர் தேர்தலில் சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய மூவின மக்களின் பேராதரவும் எமக்குத் தேவை. அதில் தமிழ் மக்களின் வாக்குகள் எமக்கு இன்றியமையாதவையாக அமைகின்றன. அவர்களை வழிநடத்தும் தமிழ்க் கட்சிகளுடன் பேசுவதற்கு நாம் எந்த நேரமும் தயாராக இருக்கின்றோம். அந்தக் கட்சிகள் முன்வைக்கும் பரிந்துரைகளை நாம் அலசி ஆராய்வோம். நாட்டின் நல்லிணக்கத்துக்குப் பாதிப்பு ஏற்படாத மக்கள் நலன் சார்ந்த பரிந்துரைகளுக்கு நாம் முன்னுரிமை கொடுப்போம். அந்தப் பரிந்துரைகள் தொடர்பில் எமது நிலைப்பாட்டை தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் தெரிவிப்போம். எமது கொள்கைத் திட்டங்களையும் அவர்களிடம் விரிவாகத் தெளிவுபடுத்துவோம்" என்றனர். (எ22)

### வடக்குக்கு...

பாய ராஜபக்ச அணியினரும் மற்றும் ஐக்கிய தேசிய முன்னணி சார்பில் களமிறங்கும் சஜித் பிரேமதாசவின் வடக்கில் பெருமெடுப்பில் பரப்புரைகளை ஆரம்பித்துள்ளனர்.

பொதுமக்கள் முன்னியில் களமிறங்கும் கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆதரவாக மகிந்த ராஜபக்சவின் புதல்வரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச நேற்றுத் தனது பரப்புரை நடவடிக்கைகளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்துள்ளார். மூன்று நாள்கள் அவர் யாழ்ப்பாணத்தில் தங்கி நின்று பரப்புரைகளை மேற்கொள்ளவுள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவும் யாழ்ப்பாணத்தில் சூறாவளியாக பரப்புரைகளை மேற்கொள்ளவுள்ளார்.

எதிர்வரும் 16ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வரும் அவர் யாழ்ப்பாணத்தின் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்குட்பட்ட பகுதிகளுக்கும் சென்று மக்களைச் சந்திக்கவுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட, பிரதேச அமைப்பாளர்களின் துணையுடன் அவர் இந்தச் சந்திப்புக்களை மேற்கொள்ளவுள்ளார்.

இருதினங்கள் யாழ்ப்பாணத்தில் இருக்கப்போகும் ரணில் விக்கிரமசிங்க வரும் 17ஆம் திகதி யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையத்தையும் திறந்து வைக்கவுள்ளார். (எ)

### புலிகளை...

சேர்ந்த ராமையா விவேகானந்தன் என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார். இவர் முன்னாள் போராளியாவார். கடந்த ஆண்டு ஒட்டுசுட்டானில் புலிகள் அமைப்பின் சீருடை மீட்கப்பட்டமை மற்றும் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்ட சந்தேநகருடன் தொடர்பு வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் இவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் 21ஆம் திகதி ஒட்டுசுட்டான் பகுதியில் புலிச் சீருடைகளுடன் ஆயுதங்களும் மீட்கப்பட்டன. அந்தச் சம்பவத்துடன் தொடர்புஐடய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர். ஒருவர் தப்பிச் சென்றிருந்தார். சம்பவம் தொடர்பில் ஒரு சில நாள்களிலேயே ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளில் அவர்கள் முன்னாள் போராளிகள் என்பதும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரிடமிருந்து மாதாந்தச் சம்பளம் பெற்று வந்தனர் என்பதும் தெரியவந்தது என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு ஏற்கனவே அறிக்கையிடப்பட்டிருந்தது.

கடந்தசனிக்கிழமைதிருகோணமலையில் கைது செய்யப்பட்ட முன்னாள் போராளியும், இராணுவப் புலனாய்வாளர்களிடம் பணம்பெற்றுள்ளார்என்பதுதற்போதுகண்டறி யப்பட்டுள்ளது. கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டவரை இராணுவப் புலனாய்வுப் பிரிவினரே கந்தளாயில் வைத்துக் கைது செய்திருந்தது. (எ-6,21,222)

### பொலிஸாரின்...

போதைத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் நேற்று இரவு முதல் சோதனை நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்தியிருந்தனர்.

நேற்று அதிகாலை கிளிநொச்சி, அறிவியல் நகர் பகுதியில் பொலிஸாரின் கட்டளையை மீறிப் பயணித்த வாகனத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன என்றும், ஒன்று வாகனத்தின் சக்கரத்தைத் தாக்கியது என்றும் தெரிவித்துள்ள பொலிஸார் மற்றைய தோட்டாவால் காரில் பயணித்தவர் காயமடைந்தார் என்று கூறியுள்ளனர்.

போதைப் பொருள் கடத்தல் தொடர்பாக பொலிஸாருக்கும், மதுவரித் திணைக்களத்தினருக்கும் கிடைத்த தனித் தனித் தகவலின் அடிப்படையில் தேடுதல்களை மேற்கொண்டிருந்தனர் என்றும் அதன் போதே இந்த அசம்பாவிதம் நடந்துள்ளது என்றும் கூறப்படுகின்றது. ஆனால் கெப்பிட்டிக்கொலாவவைச் சேர்ந்தவர்கள் ஏன் கிளிநொச்சிக்கு வந்தார்கள் என்பதற்கு விளக்கம் எதுவும் கூறப்படவில்லை. காயமடைந்தவர் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாகக் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-21,6,35,222)

### தற்காலிக...

ரம், வயதானவர்களுக்கான அடையாள அட்டை, ஒய்வூதியர் அடையாள அட்டை, மதகுருக்களுக்கான அடையாள அட்டை போன்ற ஏற்றுக்கொள்ளப்பட்ட அடையாள அட்டைகளைக் கொண்டிராதவர்களுக்கே இந்தத் தற்காலிக அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது.

அரச தலைவர் தேர்தலில் வாக்களிக்கும் போது இந்தத் தற்காலிக அடையாள அட்டை, வாக்காளர்கள் வாக்களித்த பின்னர் வாக்களிப்பு நிலையத்தின் அதிகாரியால் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும் என்று மேலதிக ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தற்காலிக அடையாள அட்டைகளை பெற்றுக் கொள[illegible] டம் அல்லது [illegible] பவராயின் தோட்ட அதிகாரியிடம் பெறப்பம் உறுதிச் சான்றிதடை மாவட்ட தேர்தல் அலுவலகத்திடம் ஒப்படைத்துத் தற்காலிக அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்தத் தற்காலிக அட்டையாள அட்டை எதிர்வரும் 9ஆம் திகதி வரையே வழக்கப்படும் என்றும், தேவையுள்ளோர் அதற்கு முன்னதாக அவற்றைக் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் மேலதிக தேர்தல் ஆணையாளர் ராசிக பீரிஸ் தெரிவித்தார். (எ)

### கிளைமோர்...

ஆயுதங்களுடன் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டார். கிளிநொச்சியில் உள்ள அவரது வீட்டில் வெடிபொருள் மற்றும் வெடி மருந்துகள் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபரின் மனைவி மற்றும் சகோதரி கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் வழங்கிய தகவலுக்கு அமைய கோண்டாவில் பகுதியில் உள்ள காணியொன்றில் இந்த இரண்டு கிளைமோர் குண்டுகள் மீட்கப்பட்டன என்று பொலிஸ் ஊடக பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். (எ)

### ஞானசாரர்...

நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்காந்தராயா, அரச தலைவர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஊடாக இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

பிக்குவின் உடலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயச் சூழலில் எரியூட்ட எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. நீதிமன்றம் கடந்த மாதம் 23ஆம் திகதி, ஆலயத்துக்கு அருகில் எரியூட்டத் தடைவிதித்தது.

அத்துடன் மன்றின் கட்டளையை நடைமுறைப்படுத்துமாறு முல்லைத்தீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரைப் பணித்திருந்தது. இருப்பினும் நீதிமன்ற உத்தரவு மிதிக்கப்பட்டு பிக்குவின் உடல் எரியூட்டப்பட்டது.

நீதிமன்றத் தீர்ப்பை மீறிய, பொதுபலசேனாவின் பொதுச் செயலர் ஞானசாரர், மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர், முல்லைத்தீவு பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகிய மூவருக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஒ.5)

### மறக்க...

பக்ச.

இந்தியாவின் "த ஹின்டு" பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

நெருங்கி வரும் இலங்கை அரச தலைவர் தேர்தலில் எந்தப் பன்னாட்டுத் தரப்பினரும் தலையிட முயற்சிக்க மாட்டார்கள். நெறிமுறைப்படி அது அப்படித்தான் இருக்க வேண்டும்.

2015 ஆம் ஆண்டில் நடந்த தேர்தலில் இந்தியா அல்லது வேறு எந்த நாடும் அவர்களை (எதிர்த்தரப்பை) ஆதரித்தன என்பதற்கு தனிப்பட்ட முறையில் என்னிடம் [illegible] ஆதாரமும் இல்லை. ஆனால் [illegible] என்பதை இப்போது [illegible] நன்றாக புரிந்து கொண்டோம். இந்தியா எங்கள் முதலிட நண்பர் மற்றும் அண்டை நாடு. அரசியல் மற்றும் பாதுகாப்பு விடயங்களில் நாங்கள் எப்போதும் இந்தியாவுடன் செல்ல வேண்டும், ஆனால் பொருளாதார மற்றும் பிற விடயங்களில் நீங்கள் சீனாவை மறக்க முடியாது.

இலங்கையில் சுமார் 15.99 மில்லியன் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் உள்ளனர். சுமார் 80 வீத வாக்கெடுப்பு நடந்தால் சுமார் 12 மில்லியன் செல்லுபடியாகும் வாக்குகளாக கருதப்படும். எங்கள் இலக்கு 6.5 மில்லியன் வாக்குகள். வெற்றி பெற தேவையான 50 வீதத்தை கடந்தாலே போதும். ஒரு உள்ளூராட்சி மன்ற வாக்கெடுப்புக்கு 40 வீத வாக்குகள் போதுமானதாக இருந்தது. ஆனால் ஒரு தேசிய தேர்தலுக்கு அது போதாது. தேர்தலில் தமிழர்களின் வாக்குகள் மிக முக்கியமானவை.

கடந்த காலங்களில் என்ன நடந்தது என்பதை தமிழர்களால் மறக்க முடியாது. ஆனால் இரு சமூகத்தினரும் ஒருவருக்கொருவர் மன்னிக்க வேண்டும். நாட்டுக்கு புதிய அரசமைப்பு தேவையா என்பதை மக்கள் தீர்மானிக்கட்டும். எமது கட்சி அதிகபட்ச அதிகாரப் பகிர்வுக்கு உறுதிபூண்டுள்ளது. எங்கள் வேட்பாளர் அல்லது அரச தலைவர் யார் என்பது முக்கியமல்ல, எங்கள் தலைவர் (மகிந்த ராஜபக்ச) அரசின் தல்லவராக இருப்பார் (தலைமை அமைச்சர்). இந்த ஏற்பாடு எங்களுக்கு நன்றாக பொருந்துகிறது. அவர் எங்கள் தலைவர், அவர் நம் நாட்டின் ஆன்மிகத் தலைவர். என்று கூறியுள்ளார். (எ)

### ஒன்றுபட்டு...

இலங்கைத் தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் தமிழ் மக்கள் கூட்டணி ஆகிய கட்சிகளே இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. யாழ்ப்பாணம், கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற இறுதிச் சந்திப்பின் போதே இந்தப் பொது இணக்கப்பாடு எட்டப்பட்டது. இந்தக் கலந்துரையாடல் 5 கட்டங்களாக நடைபெற்றிருந்தது.

அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் சஜித் பிரேமதாச, கோத்தபாய ராஜபக்ச ஆகிய பிரதான வேட்பாளர்களிடம் தமிழர் தரப்பின் கோரிக்கைகளைக் கூட்டாக முன்வைத்து பேரம் பேசுவது என இந்தப் பொது இணைக்கப்பாட்டில் தீர்மானிக்கப்ப ட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவும், ரெலோ சார்பில் அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனும், புளொட் சார்பில் அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தனும், ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் அதன் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரனும், தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் அதன் தலைவரும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரனும் கையொப்பமிட்டனர்.

இந்தச் சந்திப்புக்களில் கலந்துகொண்டிருந்தபோதும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒப்பந்தத்தில் கையொப்பமிடவில்லை. தமது கோரிக்கை ஒப்பந்தத்தில் சேர்க்கப்படவில்லை என்று தெரிவித்து அங்குச் கட்சி ஒப்பந்தத்தில் [illegible] கையொப்படமிட மறுத்ததுடன், கட்சியின் சார்ப்பாகக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களும் கூட்டத்தில் இருந்து வெளியேறிச் சென்றனர். (எ-22,105)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துருக்கியின் தாக்குதலை நிறுத்த அணிசேருங்கள்!

## பிரான்ஸ், ஜேர்மனி அழைப்பு



பாரிஸ்,ஒக்.15
சிரியாவின் வடபகுதியில் நிலைகொண்டுள்ள குர்திஷ் ஆயுததாரிகள் மீது துருக்கி நடத்தி வரும் தாக்குதலை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு உடனடியாக முன்வருமாறு பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகள் உலக நாடுகளுக்கு அழைப்பு விடுத்தன.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

இந்தத் தாக்குதல் முடிவடைய வேண்டும் என்பது எங்கள் விருப்பம் என்று பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மக்ரொன் தெரிவித்தார். ஜேர்மன் அதிபர் ஏஞ்சலா மெர்க்கலைச் சந்தித்த பிறகே இந்த அறிவிப்பை மக்ரொன் வெளியிட்டார். துருக்கியின் தாக்குதல்களால் சிரியாவில் தாங்கமுடியாத மனித அவலங்கள் ஏற்படும். மேலும் அங்கு ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதம் மீண்டும் எழுச்சி பெறுவதற்கு இது சாதகமாக அமையும். சிரியாவில் துருக்கியின் இராணுவ நடவடிக்கைக்குப் பதிலளிக்கும் விதமாக வேகமாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முயற்சிகளை வரையறுக்கவே ஜேர்மனியோடு பிரான்ஸ் ஒருங்கிணைந்துள்ளது. இந்தத் தாக்குதல் முடிவடைய வேண்டும் என்று இந்த இரண்டு நாடுகளுக்கும் விருப்பம் உள்ளது. இதில் மற்றைய நாடுகளும் இணைந்து கொள்ளலாம் என்று மக்ரொன் மேலும் தெரிவித்தார்.

**பின்னணி**

சிரியாவில் நிலைகொண்டுள்ள ஐ.எஸ். ஆயுததாரிகளுக்கு எதிரான தாக்குதலில் அமெரிக்காவுக்கு ஆதரவாகக் குர்திஷ் ஆயுததாரிகள் செயற்பட்டனர். ஐ.எஸ். ஆயுததாரிகள் பலரைச் சிறைப்பிடித்தனர். இந்த நிலையில் அங்கிருந்த தனது துருப்புகளைத் திரும்பப் பெற்றது அமெரிக்கா.

அமெரிக்கா தனது படைகளைத் திரும்பப் பெற்றதும் குர்திஷ் ஆயுததாரிகள் மீது தாக்குதலை ஆரம்பித்தது துருக்கி.

குர்து மக்கள் மீதான துருக்கி அதிபர் எட்டோகனின் இனத்துவேசமே இந்தத் தாக்குதல்களுக்கு முக்கிய காரணம் என்று பரவலாக விமர்சனங்கள் உள்ளன.




## துருக்கியின் தாக்குதல்களால் லட்சக்கணக்கானோர் வெளியேற்றம்

### கவலை வெளியிடுகிறது ஐ.நா.

ஜெனீவா,ஒக்.15
வடகிழக்குச் சிரியாவில் குர்திஷ் ஆயுததாரிகள் மீது துருக்கி தாக்குதல் நடத்திவருவதால் அங்கு கடந்த மூன்று நாள்களில் ஒரு லட்சத்து 30ஆயிரம் பேர் வீடுகளை விட்டு வெளியேற நேரிட்டுள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபை கவலை வெளியிட்டது.

கடந்த புதன்கிழமை துருக்கியின் இராணுவ ஊடுருவல் தொடங்கியதிலிருந்து நேற்றுவரை லட்சக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்றும் இந்த எண்ணிக்கை இன்னும் வேகமாக அதிகரிக்கும் என்றும் 4 லட்சம் பேர் இடம்பெயரக்கூடிய ஒரு மோசமான சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் ஐ.நாவின் செய்தித் தொடர்பாளர் ஜென்ஸ் லர்கே தெரிவித்தார்.



## பிளாஸ்ரிக்கை உண்ணும் பக்டீரியா கண்டுபிடிப்பு

புதுடெல்லி,ஒக்.15
பூமியின் மிகப்பெரிய சூழலியல் பிரச்சினையான விளங்குகின்றன பிளாஸ்ரிக் கழிவுகளை உணவாக்கக்கூடிய இரண்டு வகைப் பக்டீரியாக்களை இந்தியாவின் டெல்லி ஷிவ் நாடார் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

றித்த பல்கலைக்கழகத்தை சேர்ந்த ஆய்வாளர்கள் தங்களது இந்தக் கண்டுபிடிப்பு தொடர்பாக, 'றோயல் சொசைட்டி ஒவ் கெமிஸ்ட்ரி அட்வான்ஸஸ்' என்ற சஞ்சிகையில் அறியத்தந்துள்ளனர். பிளாஸ்ரிக்கில் உள்ள முக்கிய வேதிப்பொருளான பொலிஸ்டைரீனின் கட்டமைப்பை உடைத்து அதை மக்கச் செய்யும் திறன் படைத்த எக்ஸிகியூயோபாக்டீரியம் சிபிரிகம் ஸ்ட்ரைன் டி.ஆர்11, எக்ஸிகியூயோபாக்டீரியம் உண்டேஸ்ட்ரைன் டி.ஆர்14 ஆகிய இரண்டு வகைப் பாக்டீரியாக்களைத தங்களது பலகலைககழகதைதுக்கு அருகிலுள்ள நீர் நிலையில் கண்டறிந்துள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## துருக்கி இராணுவத்துக்கு எதிராக குர்திஷ்களுடன் இணைகிறது சிரியா

டமஸ்கஸ்,ஒக்.15
துருக்கியின் எல்லைத் தாண்டிய தாக்குதலைத் தடுப்பதற்காகச் சிரியா தனது இராணுவத்தைக் களமிறக்குவதற்குச் சம்மதம் தெரிவித்ததாகக் குர்திஷ் ஆயுததாரிகள் தெரிவித்தனர். குறித்த பகுதிக்கு அரச படைகள் அனுப்பப்படுவதாக சிரியா ஊடகங்களும் செய்தி வெளியிட்டன.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது:

சிரியாவின் வடபகுதியில் குர்திஷ் ஆயுததாரிகளுடன் இணைந்து செயற்பட்ட அமெரிக்கப் படைகளை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் திரும்பப் பெற்றார். அதைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் துருக்கி தாக்குதல் நடத்துகிறது. இந்த தாக்குதலில் குர்திஷ் ஆயுததாரிகளை வழிநடத்தும் சிரியா ஜனநாயகப் படையின் மீதும் குண்டுகளை வீசியது துருக்கி. அத்தோடு சிரியா-துருக்கி எல்லையிலுள்ள இரண்டு முக்கிய நகரங்களைக் கைப்பற்றியது துருக்கி. இந்த நிலையிலேயே சிரியா அரசு தனது படையைத் துருக்கிக்கு எதிராக எல்லைப்பகுதியில் நிறுத்திவைக்கவுள்ளதாகக் கூறியுள்ளது. இந்தப் படையைக் களமிறக்கித் துருக்கியின் தாக்குதலுக்குப் பதில் அளிப்பதுடன், துருக்கி கைப்பற்றிய பகுதிகளை விடுவிக்கவும் உள்ளதாகச் சிரிய ஜனநாயகப் படை தரப்பில் கூறப்பட்டுள்ளது.



## 2019 நோபல்! பொருளாதாரத்துக்கு 3 பேருக்குப் பரிசு

ஸ்டொக்கோம்,ஒக்.15
மருத்துவம், இயற்பியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம், வேதியியல் ஆகிய துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு ஆண்டுதோறும் நோபல் பரிசுகள் வழங்கி மதிப்புறுத்தப்படுகிறது. அந்த வகையில் வறுமையை ஒழிப்பதற்கான முன்னோடித் திட்டங்களை வகுத்ததற்கான 3 பேருக்கு இந்த வருடம் பொருளாதாரத்துக்காக நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது. பொருளியல் நிபுணர்கள் அபிஜித் பானர்ஜி, எஸ்தர் டுவ்ப்லோ, மைக்கல் கிரீமர் ஆகியோர் இந்தப் பரிசைப் பெறுகின்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “எலும்பு நொருங்கும்”

## ஹொங்கொங் போராட்டக்காரர்களுக்கு சீன அதிபர் ஜின் பிங் எச்சரிக்கை?


*பீஜிங்,ஒக்.15*
*சீனாவைப் பிரிக்க நினைத்தால் நசுங்கிய உடல்கள், நொருங்கிய எலும்புகள் தான் மிஞ்சும் என்று ஹொங்கொங் போராட்டக் காரர்களுக்குச் சீன அதிபர் ஜி ஜின்பிங் எச்சரிக்கை விடுத்தார்.*



இது குறித்து மேலும் தெரியவருவதாவது:
கடந்த ஞாயிற்றுக் கிழமையன்று ஹொங்கொங்கில் ஆரம்பித்த பல அமைதியான போராட்டங்கள் கலவரத் தடுப்புப் பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கு இடையேயான வன்முறையாக முடிந்தது. பொதுப் போக்குவரத்து நிலையங்கள் மற்றும் சீன ஆதரவுக் கடைகள் சேதப்படுத்தப்பட்டன. இந்த நிலையில் நேபாளத்துக்குப் பயணம் மேற்கொண்டிருந்த சீன அதிபர் ஜி ஜின்பிங் அங்கு ஆற்றிய உரை ஒன்றில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். ஹொங்கொங் விவகாரம் உச்சகட்டத்தில் இருப்பதால் அவர் மேற்கண்டவாறு ஹொங்கொங் போராட்டக்காரர்களை எச்சரித்திருக்கிறார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

# ‘ஹபிகிஸ்’ புயல் தாக்கத்தால் ஜப்பானில் சாவுகள் அதிகரிப்பு

டோக்கியோ,ஒக்.15
ஜப்பானில் கோரத் தாண்டவம் ஆடிய ‘ஹபிகிஸ்’ புயல் மற்றும் கடும் மழையால் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 42 ஆக அதிகரித்தது. பசுபிக் பெருங்கடலில் உருவாகிய குறித்த புயல், ஜப்பானின் தலைநகர் டோக்கியோவை ஊடறுத்து ஜப்பானின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள ஈஸ் தீபகற்ப பகுதியில் கரையைக் கடந்தது. மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக 42 லட்சம் மக்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். 12 பேர் காணாமல் போயினர் எனவும் 25 பேர் சாவடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் தற்போதைய நிலவரப்படி 42பேர் வரையில் சாவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.











‘ஹபிகிஸ்’ புயல் தாக்கத்தால் வெள்ளத்தில் மூழ்கியுள்ள ஜப்பானில் மீட்பு பணிகள் நடந்து வருகின்றன.



## இன்றைய நாள்

**மேடம்:** உங்கள் மனதில் உதித்த திட்டம் செயல் வடிவம் பெறும். தொழில், வியாபாரம் செழிக்க தேவையான பணிபுரிவீர்கள். கூடுதல் பண வருமானம் கிடைக்கும். உறவினர்களுடன் சந்தோஷ சந்திப்பு ஏற்படும்.

**இடபம்:** அவப்பெயர் வராமல் செயல்பட வேண்டும். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் உழைப்பு உதவும். முக்கியமான செலவுக்கு கொஞ்சம் பண கடன் பெறுவீர்கள்.

**மிதுனம்:** நண்பரின் உதவியால் முக்கியமான விஷயத்தில் சுமூக தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற்று புதிய சாதனை உருவாகும். உபரி பண வருமானம் கிடைக்கும்.

**கடகம்:** மதிநுட்பத்துடன் செயல்படுவீர்கள். தொழில் வளர அனுகூல காரணி பலம் பெறும். உபரி பணவருமானம் திருப்திகரமாக வந்து சேரும். வீட்டுக்கு தேவையான பொருள் வாங்குவீர்கள்.

**சிம்மம்:** சிறிய வேலை ஒன்று அதிக சுமையாக மாறலாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற நண்பரின் ஆலோசனை உதவும். சுமாரான அளவில் பணம் கிடைக்கும்.

**கன்னி:** உறவினர் ஒருவர் எதிர்பார்ப்புடன் அணுகுவார். இயன்ற அளவில் உதவி புரிவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து வளர மாற்று உபாயம் பயன் தரும். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**துலாம்:** உங்கள் எண்ணம், செயலில் புதிய உத்வேகம் பிறக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** உங்களின் அனுபவ அறிவு பரிமளித்து தகுந்த புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபார தொடர்பு பலம் பெறும். தாராள அளவில் பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** பிறரது சிரமசூழ்நிலை உணர்ந்து பேசுவது அவசியமாகும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பணி கால அவகாசத்தில் நிறைவேறும். பண செலவு அதிகரிக்கும்.

**மகரம்:** சிலரது அதிருப்திக்கு உட்பட நேரிடலாம். பேச்சை குறைத்து பணியில் ஆர்வம் கொள்வது நல்லது. தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும்.

**கும்பம்:** உங்களின் இஷ்ட தெய்வ அருள் பலம் துணை நிற்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி செய்வீர்கள். உற்பத்தி, விற்பனை திருப்திகரமாகும்.

**மீனம்:** பணிகளை மனதில் நிறுத்தி செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த சிரமம் குறையும். பணவரவு முக்கிய செலவுகளுக்கு பயன்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### 4ஆவது தேசிய உருள் பந்து

# வெற்றிக் கிண்ணப் போட்டி மன். சிறப்பாக இடம்பெற்றது

மன்னார்,ஒக்.15
மன்னார் மாவட்ட உருள் பந்து சங்கத்தின் ஏற்பாட்டில் இலங்கை உருள் பந்து சம்மேளனத்தால் 4ஆவது தேசிய உருள் பந்து வெற்றிக்கிண்ண போட்டி கடந்த சனிக்கிழமை மாலை 6 மணியளவில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி உருள் பந்து மைதானத்தில் இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி அணி வீர, வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

14,17 வயதுப் பிரிவுகள், மற்றும் 17 வயதுக்கு மேற்பட்ட பிரிவுகளாக போட்டிகள் இடம் பெற்றன.

17 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் அணியில் மன்னார் அணியை எதிர்த்து கிளிநொச்சி அணி மோதியது. இதில் மன்னார் அணி 5:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.17 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் அணியில் கொழும்பு அணியை எதிர்த்து மன்னார் அணி மோதியது. இதில் கொழும்பு அணி வெற்றி பெற்றது.

17 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் அணியில் மன்னார் அணியை எதிர்த்து யாழ்ப்பாண அணி மோதியது. இதில் மன்னார் அணி வெற்றி பெற்றது.

14 வயதுக்குட்பட்ட ஆண்கள் அணியில் யாழ்ப்பாண அணியை எதிர்த்து மன்னார் அணி மோதியது. இதில் யாழ்ப்பாண அணி வெற்றி பெற்றது. இவர்களுக்கான பதக்கங்கள், சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகளும் இடம் பெற்றன.

இந்த நிகழ்வு இலங்கை உருள் பந்து சம்மேளனத்தின் பொதுச் செயலர் பா.தவேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் மன்னார் மாவட்ட உருள் பந்து சங்க பிரதிநிதிகள், பாடசாலை அதிபர், வீர, வீராங்கனைகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (56)



### வலைப்பந்தாட்டப் போட்டியில்

## சரஸ்வதி வித். ஆசிரியர் அணி கிண்ணத்தைச் சுவீகரித்தது

வவுனியா,ஒக்.15
ஆசிரியர் தினத்தை முன்னிட்டு வவுனியா வடக்கு கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சங்கம் நடத்திய வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஆசிரியர்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய ஆசிரியர் அணி கிண்ணம் வென்றது.

போட்டியின் இறுதியாட்டம் வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய ஆசிரியர் அணியை எதிர்த்து கல்மடு வித்தியாலய ஆசிரியர் அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய அணி 18:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

வவுனியா வடக்கு கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சங்கத் தலைவர் அ.அமலேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வவுனியா மாவட்டச் செயலர் நா.கமலதாசன், சிறப்பு விருந்தினராக வவுனியா மாவட்ட பூப்பந்தாட்ட பயிற்றுநர் த.கமலன், மதிப்புறு விருந்தினராக எஸ்.ஜெ.ஆர்.கட்டுமான நிறுவன பணிப்பாளர் சி[illegible] சேகர் ஆகியோர் கலந்து கொண்டனர். (110)

### கரம் போட்டியில்

## கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள்

தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரம் போட்டித் தொடரில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கு வெள்ளிப் பதக்கம்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை குருநாகல பாதுகாப்பு சேவைகள் விருதருவிது பியசவில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கொழும்பு மகா மாயமகளிர் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதியது. இதில் கொழும்பு மகா மாயமகளிர் கல்லூரி அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று தங்கப் பதக்கத்தையும், கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றியது.

மற்றுமொரு 17 வயது ஆண்களுக்கான கரம் போட்டித் தொடரில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றியது. ஆண்களுக்கான மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் மொறட்டுவ பிறின்ஸ் ஓவ் வேல்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதியது. இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று வெள்ளிப்பதக்கத்தைக் கைப்பற்றியது. (23)





## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம் ஒக்.15
பருத்தித்துறை லீக்கின் அனுமதியோடு கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் சுப்பர்8 சுற்றின் ஆட்டங்கள் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொற்றவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

- - - - - -

யாழ்ப்பாணம் ஒக்.15
உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு திருக்குமரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இதில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

- - - - - -

யாழ்ப்பாணம் ஒக்.15
வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 வீரர்கள் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் விண்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவசக்தி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரவைச் சுடர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சத்துரங்கி ஓய்வு

இலங்கை வலைப்பந்தாட்ட அணித் தலைவி சத்துரங்கி ஜயசூரிய பன்னாட்டு வலைப்பந்தாட்ட அரங்கிலிருந்து விடைபெற தீர்மானித் துள்ளார்.

இலங்கை வலைப்பந்தாட்ட அணிக்கு 2010 ஆம் ஆண்டு காலடி வைத்த சத்துரங்க ஜயசூரிய கோல் டிபென்ஸ் மற்றும் கோல் காப்பு ஆகிய நிலைகளில் இலங்கை வலைப்பந்தாட்ட அணியில் விளையாடி இலங்கை அணியின் வெற்றிகளுக்கு பங்காற்றியிருந்தார். இவர் உலகக் கிண்ண வலைப்பந்தாட்ட வரலாற்றில் 2011, 2015,2019ஆம் ஆண்டுகளில் பங்கேற்றுள்ளார்.

2017ஆம் ஆண்டு அணித் தலைவியாக பொறுப்பேற்ற சத்துரங்கி, 2018ஆம் ஆண்டு சிங்கப்பூரில் நடைபெற்ற ஆசிய வலைப்பந்தாட்ட வல்லுனர் போட்டியில் கிண்ணம் வென்ற இலங்கை அணியை வழிநடத்தியிருந்தார்.

இலங்கை வலைப்பந்தாட்ட அணியிலிருந்து சத்துரங்கி ஓய்வு பெற்றாலும், இலங்கை விமானப்படை மற்றும் வர்த்தக அணிகளுக்காக தொடர்ந்தும் விளையாடவுள்ளார்.

இவரது ஓய்வு இலங்கை வலைப்பந்தாட்டத்துக்கு பெரும் இழப்பாகும் என்பதில் சந்தேகமில்லை.



# ஞானமுருகன் வி.க. கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம்,ஒக்.15

யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்திய அணிக்கு 11 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அச்செழு வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது. (23)

## மதிப்பளிக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக.15

தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உடற் பயிற்சிப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி அணி கல்லூரிச் சமூகத்தால் மதிப்பளிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது. ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி உடற் பயிற்சி அணி ஊர்காவற்றுறை நகர் மத்தியிலிருந்து கல்லூரி பான்ட் வாத்திய இசையுடன் கல்லூரி வரை அழைத்துவரப்பட்டு கல்லூரி அதிபர் அருட்தந்தை ஜேம்ஸ் சிங்கராயர் அடிகளார் தலைமையில் மதிப்பளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் தீவக கல்வி வலய உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் சையிலன், மற்றும் உடற் கல்வி ஆசிரிய ஆலோசகர் துசியா, ஊர்காவற்றுறை கல்வி கோட்ட அதிகாரி சத்தியசீலன், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் கல்லூரி நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (23)

## இலங்கை அணியின் பயிற்சியாளராக ஜான்டி ரோட்ஸ், பிரெட் லீ பரிசீலனை

இலங்கை கிரிக்கெட் அணி புகழ்பெற்ற ஜான்டி ரோட்ஸ், பிரெட் லீ ஆகியோரை பயிற்சியாளர்களாக்க பரிசீலனை செய்து வருகிறது.

கிரிக்கெட்டில் தலைசிறந்த களத்தடுப்பாளராகக் கருதப்படுபவர் தென்னாபிரிக்கா அணியின் முன்னாள் வீரர் ஜான்டி ரோட்ஸ். அதேபோல் தலைசிறந்த வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவர் என பாராட்டப்படுபவர் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் பிரெட் லீ. இருவரையும் முறையே களத்தடுப்பு மற்றும் பந்து வீச்சு பயிற்சியாளர்களாக நியமிக்க இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை பரிசீலனை செய்து வருகிறது.

உலகக் கிண்ணப் போட்டியில் மோசமான தோல்வியை சந்தித்ததால் பயிற்சியாளர்களை அதிரடியாக நீக்கியது இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை என்பது குறிப்பிடத்தக்கது.



# கிண்ணத்தைக் கைப்பற்றியது கணேஸ்வரம் மத்திய வி.க.

யாழ்ப்பாணம், ஒக்.15

அளவெட்டி கணேஸ்வரம் மத்திய விளையாட்டுக் கழக அணிக்கும், அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான 20 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரில் அளவெட்டி கணேஸ்வரம் மத்திய விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.

தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அளவெட்டி கணேஸ்வரம் மத்தி விளையாட்டுக் கழக அணி களதடுப்பைத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானவைரவர் விளையாட்டுக் கழக அணி 19.1 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றது.

அணி சார்பாக அணித் தலைவர் சஜீவன் 20 ஓட்டங்களையும், சபேசன் 10 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் சுதன் 5 இலக்குகளையும், அஜித் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய அளவெட்டி கணேஸ்வரம் மத்தி விளையாட்டுக் கழக அணி 18:3 பந்துப் பரிமாற்றங்களில் வெற்றி இலக்கை அடைந்தது. இதில் ரகீம் 18 ஓட்டங்களையும், டிலக்சன் 16 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். (23)



# சென்.மேரிஸ் வி.க. மகுடம் சூடியது

யாழ்ப்பாணம்,ஒக்.15

மஞ்சி வெற்றிக் கிண்ணத்துக்கான மன்னார் மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் கரப்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரில் துள்ளுக்குடியிருப்பு சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மன்னார் உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் துள்ளுக்குடியிருப்பு சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தாரபுரம் ஜின்னா விளையாட்டுக் கழக அணி மோதியது. 5 செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் இடம் பெற்றது. இதில் துள்ளுக்குடியிருப்பு சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி 25:17, 25:23, 25:17 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. (23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பி.சி.சி.ஐயின் தலைவராக சவுரவ் கங்குலி நியமனம்

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராக இந்திய அணியின் முன்னாள் அணிதலைவர் சவுரவ் கங்குலி தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நிர்வாகிகள் பங்கேற்ற கூட்டம் மும்பையில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாகிகளாக யாரைத் தெரிவு செய்வது என விரிவாக விவாதிக்கப்பட்டது. முன்னாள் இந்திய கிரிக்கெட் சபைத் தலைவரான சீனிவாசன், பிரிஜேஷ் படேலை முன்மொழிந்தார். ஆனால், அவரை பெரும்பாலான கிரிக்கெட் சங்கங்கள் ஏற்றுக் கொள்ள வில்லை. இந்த நிலையில் கங்குலியைத் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தலைவராக்குவது என இறுதியில் தீர்மானிக்கப் பட்டது. 47 வயதான கங்குலி கடந்த 1992 ஆம் ஆண்டு முதல் 2008 வரை இந்திய கிரிக்கெட் அணிக்காக விளையாடியுள்ளார். கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் தலைவராகவும் ஐ.பி.எல். போட்டியில் பங்கேற்றுள்ளார்.

அமெரிக்க லொத்தர் இலவச விசா
பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
2021ல் நீங்களும் அமெரிக்காவில்.
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
0768226241
V2 Travels
யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240
நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242
திருகோணமலை 0768226237 | மானிப்பாய் 0768226238
சுன்னாகம் 0764550670 | கொடிகாமம் 0764550675
புதுக்குடியிருப்பு 0764550673 | மருதங்கேணி 0764550671
பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960

போட்டிப்பரீட்சை மாலை நேரவகுப்புக்கள்
SLAS Open/ Limited
திங்கள், செவ்வாய், புதன், வியாழன் 5.00-7.00
சகல பரீட்சைக்குமான IQ-Gk
திங்கள், செவ்வாய் 5.00-7.00
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி முன் வீதியில் பஸ்நிலையத்திலிருந்து 100m தூரத்தில்)

கருங்கல் விற்பனைக்கு உண்டு
அத்திவாரம் மற்றும் கட்டட வேலைகளுக்கு உகந்த 6" X 9" மற்றும் கருங்கல் சல்லி வகைகள் தொகையாக உண்டு. தேவையான இடங்களுக்கு விநியோகிக்கப்படும்
077 500 6769



கரீபியன் பிறீமியர் லீக் ரி-20

# பார்படாஸ் அணி மகுடம் சூடியது

கரீபியன் பிறீமியர் லீக் ரி-20 கிரிக்கெட் தொடரில் ஜேசன் ஹோல்டர் தலைமையிலான பார்படாஸ் அணி வெற்றி பெற்று இரண்டாவது முறையாக கிண்ணம் வென்றது.

மேற்கிந்தியத்தீவுகளில் கடந்த ஒரு மாத காலமாக கரீபியன் பிறீமியர் லீக் தொடர் நடைபெற்று வருகின்றது. இதன் இறுதிப்போட்டி நேற்று முன் தினம் நடைபெற்றது. அதில் ஜேசன் ஹோல்டர் தலைமையிலான பார்படாஸ் டிரைடன்ட்ஸ் அணியும், சொய்ப் மலிக் தலைமையிலான கயானா அமேசான் வாரியர்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பார்படாஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றது. 172 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி எனக் களமிறங்கிய கயானா அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 144 ஓட்டங்களை மட்டுமே பெற்று 27 ஓட்டங்களால் வெற்றியைத் தவற விட்டது. இதனால் பார்படாஸ் அணி வெற்றி பெற்று இரண்டாவது முறையாக கிண்ணத்தைக் கைப்பற்றி அசத்தியது.

பார்படாஸ் அணியில் அரைச் சதமடித்த ஜோனாதன் கார்டர் ஆட்ட நாயகனாக தெரிவானார். அந்த அணியின் ஹெய்ட்ன் வால்ஷ் தொடராட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.




# அனுபவ வீரர்களின் இடத்தை ஒரே நாளில் நிரப்ப முடியாது

டு பிளாசிஸ் கவலை



இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் தோல்வியை சந்தித்த தென்னாபிரிக்கா அணித் தலைவர் டு பிளாசிஸ் அனுபவம் இல்லாததால் தடுமாறுகிறோம் எனத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்த டெஸ்டில் நாங்கள் நன்றாக ஆடவில்லை. அடுத்த டெஸ்டில் முன்னேற்றம் காண முயற்சிப்போம். கோலியின் துடுப்பாட்டம் நம்ப முடியாத அளவுக்கு இருந்தது. இந்தத் தொடரை வெல்வதற்கு இந்தியா தகுதியான அணி. உலகின் சிறந்த அணி என்றால், நிறைய அனுபவம் இருக்க வேண்டும். இப்போது நாங்கள் கிட்டத்தட்ட எல்லா அனுபவத்தையும் இழந்து விட்டோம். அனுபவம் வாய்ந்த ஸ்டெயின், மோர்னே மோர்கல், அம்லா, டி வில்லியர்ஸ் ஆகியோர் ஓய்வு பெற்று விட்டனர். அவர்களது இடத்தை ஒரே நாள் இரவில் நிரப்பி விட முடியாது. இப்போது அணியில் உள்ள பெரும்பாலான வீரர்கள் குறைந்த எண்ணிக்கையிலான டெஸ்ட் போட்டிகளில்தான் விளையாடி உள்ளனர். அவர்கள் தங்களை நிலை நிறுத்திக் கொள்ள காலம் பிடிக்கும். அணியில் உள்ள சிறந்த வீரர்கள் வெளியேறும் போது, எந்த அணியும் இது போன்ற சவாலை சந்தித்துதான் ஆக வேண்டும்- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.10.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.